உ

குருவேதுணை.

தண்டபாணிவிஜயம்.

இஃது

மஹான் வண்ணச்சரபம்

திருப்புகழ்ச் சுவாமிகள் = முருகதாச சுவாமிகள்

என வழங்கும்

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளது

மாணாக்கரும் குமாரருமான

தி. மு. செந்திநாயகம் பிள்ளை

அவர்களால்

இயற்றப்பெற்று

திருவண்ணாமலை

அங்காளம்மன் கோயில் வீதி

ரா. இராசாம்பாளம்மாளது

பொருளுதவிகொண்டு

சென்னை

...ர் ...ய ...ய்யர் அண்டு கம்(...

உ

குருவே துணை.

முகவுரை.

தண்டபாணிவிஜயம் என்பது ஆறனுருபடியாகப் பிறந்த அன்மொழித்தொகையாய், இந்நூற்குக் காரணக்குறியாயிற்று. தண்டபாணி யென்பது, தண்டம், பாணி என்னும் இரண்டு பதங்களான் முடிந்த வடசொற் கிளவியாய்த் தண்டத்தை யுடையகையென்னும் பொருள்பெற்று அதனை யுடையானை விளக்குதலின், குறிப்பு வினைச்சினை யாகுபெயர். விஜயம்— பெருமைப்பாடு. எனவே தண்டந் தாங்குங் கையையுடைய சற்குரு மூர்த்தியின் பிரதாபங்களை விளக்கும் நூல் என்பது பெற்றும்.

இந்நூலாசிரியர் இந்நூலின் தலைவராகிய மஹான் வண்ணச் சரபம், திருப்புகழ்ச் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் என வழங்கும் ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளின் திருவுளக் கருணையால், திருநெல்வேலித் தலத்தில் அவரது குமாரராய் அவதரித்தவர் என்பது இந்தத் தண்டபாணி விஜயத்தின் உத்தரபாகத்தில் (ரு) வது கவியில் "அந்நாள்—இந்தமாநிலத்தினுயே னினி யசேயாகி யன்னுர், சொந்தமாங்கிருபையாலே சுந்தரத்தாய் பாற் றேன்றி, முந்தவேசெயுந் தவத்தால் வளர்ந்தனன்" என்று கூறியிருத்தலால் விளங்குகிறது.

இந்த நூலை இவர் பூர்வபாகம், உத்தரபாகமென இரண்டு பகுதியாகப் பிரித்து மொத்தம் பாயிரம் வாழ்த்துட்பட (ருசகூ) திருவிருத்தங்களால் இயற்றியுள்ளார். இதனை இவர் (சஉ) வருடங்கட்கு முன்பு ஷை சுவாமிகளால், தமது சரித்திர அநுபூதிகளுடன் பரம்பரை அடியவர் ஈடேறுதற்குரிய உபதேசக் கிரமங்களுங் கலந்து அருளிச் செய்யப்பெற்றுள்ள சதுர்வேத சித்தாந்த சண்மத சமயாதீத அத்துவித கௌமார வேதமாகிய ஸ்ரீ குருபரதத்துவம் என்னும் காவியநூல் பூர்வபாகத்துக்கும் பின் ஷை சுவாமிகளால் அவ்வப்போது இயற்றப்பெற்றுள்ள நூல்

களும் தனிக்கவிகளும் நேரிற் சொல்லத்தெரிந்த வசனங்களும், தாம் உடனிருந்து அறிந்த அநுபவங்களும் உத்தரபாகத்துக்கும் ஆதாரமாகக்கொண்டு இயற்றியுள்ளார். அவ்வாறு இயற்றுவதற்கு, கொங்குநாட்டில் மேலைச் சிதம்பரமென்னும் பேரூருக்கும் புக்கொளியூர் அவிநாசித் தலத்திற்கும் நடுநிலைத்தீபமாய்க் கோயமுத்தூருக்கு வடதிசையில் (சு) மைல் தூரத்திலுள்ள சிரவணபுரத்தலத்தில் ஷ தண்டபாணி சுவாமிகளது பிரதம மாணுக்கராய்க் கௌமார மடாலயம் வகுத்து எழுந்தருளி விளங்குகின்ற, எமது பரமகுருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் உலகினருக்குப் பயன்படுமாறு சுருக்கி ஒரு நூலாய் இயற்றுகென உத்தாவு செய்தது காரணமென்று இந்நூலின் பாயிரம் எ-வது கவியில் "நடைசேறிமெய்த் தொண் டர்கோளப் பாடுகேன்ன, நளிர்போழில்சூழ் சிரவணமா புரத்தி லன்ப, ருடையதவக் குருவாகுமிராமானந்த, னோதுமோழிப் படி தமியே னுரைப்பேன்" என்று கூறியதால் விளங்குகிறது.

இந்நூலில் ஸ்ரீ தண்டபாணி சுவாமிகளது அவதாரத்தலம் காலம் பிதா மாதாக்களின் தவவிசேடம். பெயர் குலம் பாலியத்தில், கல்விகற்றல், உபதேசம் பெறல், உபாசனை பூசை, கவிபாடல், மனோதிரம் தலசஞ்சாரம், தவவேடம் பெறல், வைராக முதிர்ச்சி முதலியனவும் சாக்கிரம், சொப்பனம் சாக்கிர சொப்பன முதலிய அவஸ்தாபேதங்களில் அவ்வப் போது நிகழ்ந்த அநுபூதிகளும் புலமைப்பெருக்கத்தால் திருவருளியக்கங்கொண் டியற்றியருளிய அளவிறந்த அற்புத நூல்களின் பெருமைகளும், மதசம்பந்தமான வாதசமாதானங்களும், உபாசனை சம்பந்தமான பிரயோக விநோத நிவிர்த்திகளும், கல்வி சம்பந்தமான தர்க்க வினு விடைகளும், அன்புடையவர்கள் வேண்டியவாறு காரிய சித்திபெறப் புரியும் அநுக்கிரக விவரமும், புராண சித்தாந்த கண்டபாவனு சமயபேத ஸ்தாபனங்களும், அதனின் மாறுபடாத அதீத அத்துவித சமரச நிச்சய விளக்கங்களும், சரியை முதல் ஞானமீருயுள்ள சாதுர் பாதங்களின் பொருளை யுள்ளடக்கிய பௌராணிகமுதல் அத்துவிதாநுபூதியீருகிய கௌமார பேதங்களான. உலகம், மகாவிரதம், துவிதம், அத்துவிதம், சமரசம், அதீதம், என்னும்

பிரிவுகளின் பொருள் விளங்கச் செய்தருளிய விதிநூல்களின் குறிப்புகளும், தவமுதிர்ந்த பக்குவிகளுக்குப் பூரணகருணை யாற் செய்தருளிய அநுக்கிரக விசேடங்களும், அறியாமை யுள்ள போலி மனிதர்களின் தீங்கு கண்டு மறக்கருணையாற் பாடிய பாடற்பலித விவரங்களும், திரு ஆமாத்தூரிற் சென்று தங்கி ஐக்க முத்தியுற்ற காலவிளக்கமும், மேல் அடைந்த முத்திலட்சண விவர நிரூபணங்களும், பின் திருக்கோயில் கொண்டு அடியவர் வணங்கி வேண்டிய வேண்டியாங் கெய்தக் கொடுத்தருளி விளங்கும் தெய்வீகச் சிறப்புகளும், எமதாசாரிய மூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள் முதலிய அன் பர்களால் நடைபெற்றுவரும் கைங்கரிய விவரங்களும், நித்திய நைமித்திக ஆராதனைகளின் விபவங்களும், தமது அந்தரங்க நிச்சயங்களும், துலங்க, சுருங்கச் சொல்லல் முதலிய அழகுகள் நன்கமைய, சிவபோத முனைப்பின் செருக்குத் தோற்றமின்றிப் பரம சற்குருமூர்த்தியின் றிருவருளியக்கங் காரணமாகத் தாம் இயங்குதற் கருவியாயிருந்து இயம்பியுள்ளாரென்பது வெள் ளிடை மலைபோற் செவ்விதிற் புலப்படுகின்றது.

இத்தகை மேன்மைவாய்ந்த நூலானது உலகபோகத்திற் கட்டுண்டுழலும் ஆன்மவர்க்கங்களாகிய சில மனிதர்களுக்கு எழுதிக்கொள்ளும் சீவிய சரித்திரம் போன்ற தொன்றன்று. அஞ்ஞானம் போக்கி மெஞ்ஞானம் விளக்கக் கருணையால் தோன்றும் சற்குருநாதன் றிருவுருவை அகண்ட சைதன்ய பரம்பொருளின் திருவருட் சகளவடிவாக நிச்சயித்தறிந்தநுப விக்கும் தவமுடையோர்க்கே இன்பம் விளைக்கத்தகுந்தது; அன் றித் தம்போல் இருவினைக்கீடாப் பிறந்திறந்துழலும் ஆன்ம வர்க்கங்களில் ஒன்றாகப் பாவிக்கின்ற பேதவாதிகளுக்கு இனிமைபயவாது, "மெய்யாய திருவருளோர் மேனிகோடு வந் தாலு, மையார்புன் மனமுள்ளோர் மனிதபாவனை செய்வார், பையாயவல் குன்மின்னார் பால்குடித்த குரவரையும், பொய்யாகா வீடடைவோர் பூரணனேன் றுணர்வாரே" என்னும் வேதவாக்கே இதற்குப் போதிய சான்றாம்.

இந்தத் தண்டபாணிவிஜய நூலின் பெருமையைத் தனது பூர்வபுண்ணியத்தாற் றெரிந்து, ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமி

களின் அநுக்ஞைபெற்றுச் சொந்தப் பொருளால் அச்சிட்டு ஷை தண்டபாணி சுவாமிகளின் உரு-வது மஹா குரு பூஜா தினத்தில் பரவும்படி உபகரித்து என்றும் இறவாப்புகழுடம்பும் பேரின்பப்பயனும் திருவண்ணுமலை சிரஞ்சீவி ரா. இராசாம்பா ளம்மாள் அடைந்தது திருவருளின் கைம்மாறில்லாக் கருணை யின்றிறத்தை நன்கு விளக்குகின்றது. அந்நன்றியை யாம் என்று மறவோமாக. சுபம்.

கட்டளைக் கலித்துறை.

எந்தப்புராண சரிதமுந்தேற மியல்புடையோர்
சொந்தக்குழுவிற் றடியேனுன்மேன்மை சொலப்புரிவாய்
கந்தப்பொழில்செறி மாதைப்பதியிற் கவிக்கரசாஞ்
சந்தத்தமிழ்த்தண்ட பாணியென்றேங்கிய சற்குருவே.

இங்ஙனம்
கோயமுத்தூருக்கடுத்த சிரவணபுரம்
கௌமார மடாலயம்
ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகளின் மாணுக்கர்
கந்தசாமி சுவாமி.

குருபாதமேகதி.

குருவே துணை.

மஹான் வண்ணச்சரபம்

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளின்

பத்தினியாரும்

இந்நூலாசிரியரின் அன்னையாருமாகிய

ஸ்ரீமதி - சுந்தரத்தம்மை யவர்களால்

இயற்றப்பெற்ற

ஆசீர்வாதக்கவிகள்.

அந்தமார் நெல்லைவாழு மருந்தவன் சுதனுத்தோன்றுஞ், சந்தவான் சரபஞானத் தமிழ்க்குரு பரன்றன்சேயாய், வந்தனே னருட்போரடல் வகையெலாந் தொகுத்தோர் நூலாய்க், கந்தன தடியார்கேட்டுக் களித்திடப் பகர்ந்துள்ளன்பால். (க)

வியன்மிகு தண்டபாணி விசயமென் றொருபேர் சூட்டி, நயமலி யிராமானந்த னவின்றசொற் பெருமை காட்டி, மயலறத் தமிழினாலே வகுத்தரும் பயன்பெற் றிட்டான், செயமுடன் வாழ்கநாளுஞ் செந்திலை யகனென்சேயே. (உ)

குருபாதமேகதி.

உ

குருவேதுணை

ஆசீர்வாதச் சிறப்புக் கவிகள்.

மஹான் வண்ணச் சரபம்

ஸ்ரீ தண்டபாணி சுவாமிகளின் மாணுக்கர்

சிரவணபுரம்—கௌமார மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளியன.

தந்தன தனனதன தானன தானதன தனதான.

பண்குலா வியமறைகண் மேலான தாகுமென
விண்டமானிடசெனன ரேயாயு மாயைசெறி
பந்தமோ டுயர்கதியி னீரீதெனவறிவி னறியாதே

பங்கயா னனவரமி னூர்வானின் மீதுமிகு
மந்தகா ரவுலகதி னூடேயும் வாயுவெறி
பஞ்சுபோ லுழலுமெணி லான்மாவு மேனிகொ டுயுமாறே

விண்குலா வியபாம தேநீடு பேருளின்
மஞ்சுதோய் பொழின்மலிநெல் சூழ்வேலி யூரினிடை
மிஞ்சுதே சுடையவடி வோடேகு லாவியடி யவனேனியான்

வெங்கரா வனையகொடு மாமாயை வாயிலதி
துன்புறு தருளியிக லாவோரும் வீடுபெறும்
வென்றிதோய் தவமுயலு மாறேபன் மாதவரு முணர்வேய்வான்

மண்குலா வியமனிதர் போலேபல் வானவரை
யன்பினு னினையுமது போதேய னூர்களெதிர்
வந்துநீள் புதுமைபுரி மேலாமு பாசனைகண் முதலாயே

மங்களா கரமிலகு போராட லான்முயலும்
விந்தையா வனமுழுது மாழாழி சூழுலகின்
மங்கிடா வணமிலக வானோர்க ளாரமுத நிகர்சீரார்.

திண்குலா வியகவிக ளாலேயெ நாளுமிகு
மன்புளோர் களிகுலவு மாறேசெய் தானுலவி
றெம்புதோய் நிலைமையுடன் வானோர வாவுநல முளவிருர்
சிந்தைசேர் பலபல்வித பேருன யாவுமவிர்
தண்டபா ணியனுதவ வேயீடிலா திலகு
செந்திறு யகனருள்கொ டேநீடுவாழ்கவுயர் நிலமீதே.

கட்டளைக் கலித்துறை.

ஆதியு மந்தமு மில்லான்செ யாட லணைத்திணையு
மாதியு மந்தமு மாப்புவி தேற வளித்துயர்ந்தான்
வேதியன் றன்மனை வீழ்தண்ட பாணி விசயமெனத்
தீதிலென் னற்றுணை யாஞ்செந்தி னுயகச் சீரியனே.

குருபாதமேகதி

சிரவணபுரம் கௌமாரமடாலயம்

ஸ்ரீலஸ்ரீ-இராமானந்த சுவாமிகளின் மாணுக்கர்

ஸ்ரீ கந்தசாமி சுவாமிகளியற்றியன.

முந்தானம் பிகைகுகவேண் முதலானோர் தங்கருணை முதிர்ச்சியாலே, மைந்தரனே கருங்காண வாண்டாட லியற்றுமுயர் வழுதி நாட்டின், சுந்தரமா முகம்புரையு நெல்வேலிப் பதியினிடை துலங்குந்தூயோன், கந்தரமே நிகர்கருணைச் செந்தினு யகனெனப்பேர் கவின்றவள்ளல். (க)

வருந்தவஞ்செய் துயிர்த்திரளை வதைப்பாரைக் கடிந்திடுமோர் மகனல்கென்னப், பொருந்தவஞ்செய் வேட்கும்வரந் தருகாந்தி மதியையுளம் பொதிவித்தன்பிற், பெருந்தவஞ்செய் போதிலன்னு டிருவுளத்திற் பொலிகருணைப் பெருக்கான்மண்விண், டிருந்தவஞ் செய் குழவியொன்று சிம்புளெனுந்திர மொடு செனித்ததம்மா. (உ)

குருந்தான போதேதன் வாய்க்கடலின் மந்தரநாக் கொண்டு தந்த, மருந்தான பாக்களெலாம் வாயுணவான் மாக்களென மயங்கும் பான்மைக், கருந்தானம் பொழியயிராவதவாக னுதியர்க்குக் காட்டாதென்றும், பொருந்தான வக்கால னுமுருகன் செவியிடமே புகட்டினுனல். (ங)

சண்முகசுந் தரமுருகன் வாஞ்சைபெற லான்முருக தாசனுகிப், பண்முகமார் சந்தமிகச் சாற்றிடலாற் றிருப்புகழ்ப்பேர் படைத்துத் தேவை, யுண்முகத்தி ஞடுநாலை தாவாரென் றுணர்த்திடத்தண் டுறுங் கைகொண்டு, மண்முகத்திற் றண்டபா ணியனென்னும் வண்பெயரு மருவக்கொண்டு. (ச)

புத்தமிழ்த முருவுடைத்தா யுடற்கிதஞ்செய் மாயையெனப் புகன்றிட்டெள்ளி, மெய்த்தமிழ்வின் மேனிகொள்வார் நாடிடுநற் றெய்வமுமுள் வெஃகிநாளு, மொய்த்தமிழ்வான் பத்திறம் பொருட் சுவைபா தியநயங்கண் முதிர்ச்சியாகு, முத்தமிழ்ப்பா வினங்களெ லாம் புலமைபத்தி யன்பர்கள்பான் முளைக்கவிண்டு. (ரு)

பெருமலையங் கவின்றதமிழ்ப் பேருகவிளங்குபிர பந்தமெல் லாம், பொருமலையங் கடலிடைவிட் டெறிந்துமுதிர் வைராகம் பொங்கலாலே, திருமலையங் கதன்முடிமே னின்றுருண்டுய்ந் தும்படி விற் சேதமின்றிக், கருமலையங் கத்தினசை விட்டமுழுஞானநலங் கவினக்காட்டி. (சு)

நானிலைச்ச தகங்கவுமா ரப்பெயர்கொ ணூலினமு நான்கு நூலு, மேனிலைச்ச தகவுதவுஞானவந்தா திவண்குறட்பா வியனு ருந்தி, வானிலைக்க முறவிழையும் புத்தடியார் களுந்தூய்மை வழி தேர்ந்துய்யத், தேனிலைச்ச கவிகள்கொடு முப்பொருளின் றிற ஞானந் தெளியத்தேற்றி. (எ)

இலைப்பெருக்கார்ந் தவரிவணி லுலகிலென வெவைக்குமிலக் கியமாய்நின்ற, நிலைப்பெருக்கார்ந் துலகினர்க ளுய்ந்திடத்தண் ணருளாலே நிகழ்த்துபாவா, மலைப்பெருக்கார் கடல் பெருகி யாச வாரித்துலகத் தடைந்துபொங்கக், கலைப்பெருக்கா ருவாமதிநேர் செந்திருயகனையுளக் கனிவாலீந்தான். (அ)

பெருவண்ணப் புலமைமலி சரபனருட் சீர்த்தியெங்கும் பெருக நல்க, வருவண்ணப் புதல்வனிவ்வை யகப்புலவர்க் குவகைமிக வழங்க லன்றித், தருவண்ணப் புலவர்புவி வாழ்வினிடையாவல்கொள்சீர் சாலவாற்றிக், குருவண்ணப் புலங்கொண்டு குருபானூல் வெளிப் படுத்துக் குலவுநாளில். (கூ)

கொங்கியலெம் பெருந்தவமாக் குலவுமிரா மானந்தக் குரிசில் பாங்கே, பொங்கியலுந் திடுகமது குரவனருட் சரிதமுற்றும் பூவின் மீதி, லெங்கியலும் பேர்களுங்கண் டிடக்குருப ரதத்துவநூ லினிதா யச்கிற், றங்கியல்போங் கிடச்செய்வோமென்றபோ தெங்குரவன் சாற்றலுற்றான். (கo)

அருபாதத்துவஞான வநுபூதி நிறைந்துகதையல்கிக் காட்டுங், குருபாதத் துவமான கவுமாரப் பெருமறைதன் குலத்திற்றோன்று, நிருபாதத் துவம்படச்செற் றேனுண்மை நீக்குதிறல்செறி ராமன் பின், வருபாதத் துவனெனுமன் புடையோர்க்கே யாகுமன்றிமற் றோர்க்காகா. (கக)

ஆதலினக் காவியத்தைப் பூவிலுளார் தம்முணர்வி னளவிற் கேற்ப, வோதலினி தாகுமெனச் சாற்றிடலும் பூத்துவகை யுளத்திற் பொங்கக், காதலினியா னக்கதைநின் னருளாலே முடிப்பலெனக் கருத்திலுடி யிதலினி நின்கடனென் றருட்குரவன் றுணைப்பதத்தை யிதயத்தேற்றி. (கஉ)

பொருவில்ருட் குருபாதத் துவத்தினிடை யிலைமறைகாய் போலேயஃகி, மருவியகா தையைவிளக்கி முறைமாற்றை வரிசை யுற வைத்துளன்பாற், கெருவிதமெய் தாதுரைத்த தற்பழிப்பை மறைத்தினிதாக் கிளத்தியந்தப், பெருவியற்கா வியக்கடலி லுள்ள பலவிளையாட்டும் பேசினனே. (கந)

ஆங்கதனிற் சொல்லாத வுத்தரபா கத்தையவருளிச் செய்த, தீங்ககல்பல் கவியானுங் கேள்விகொடுந் தானறிந்த திறத் தைக்கொண்டுந், தேங்கமழ்செந் தமிழ்ப்பாவாற் றிருமலிமா தையி லினிமை திருந்தக்காட்டிப், பூங்கமல மிசைவளரும் பாரதிநேர் புலவர்களி பொருந்துமாறே. (கச)

திருத்தண்ட பாணிவிச யம்புகுவான் றொடங்குநர்தஞ் சிந்தை தன்னைத், திருத்தண்டபாணிவிச யம்புரியா தாண்டருளுஞ் சீர்த்தி வாய்ந்த, திருத்தண்டபாணிவிச யஞ்செந்தி னுயகன்பார் தேற வென்ற, திருத்தண்டப்பாணிவிச யம்படக்கார் போலப்பெய் திட் டார்ன்மாதோ. (கரு)

ஆயதிருக் காவியத்தை முறைபிறழப் பிறர்வாய்கொண் டறை வித்தென்றும், பேயனையார் தாமுமிக ழப்புரியா தருட்டுணையின் பெருமைகொண்ட, சேயபுல மைத்திறல்சேர் செந்திநாயகன் வாயாற் செப்பவைத்த, தூயபரம் பொருளினைச்சொற் றருள் பவனை யன்புகொடு துதிக்கின்றேனே. (கசு)

இராசாம்பா ழாவோர்க ளால்கவண்ணு மலையினிட மிருக் குஞ்சீர்தோ, யிராசாம்பா ளம்மாள்வண் ணச்சரபக் குரவனுரு வியற்றிநல்கித், தராசாம்பான் மையர்கொடண்ட பாணிவிச யத்தை யச்சிற்சார்வித் தென்றுந், துராசாம்பா வங்கழன்று புகழுடம்பும் பேரின்புந் தோய்ந்தாளம்மா. (கஎ)

சிரவணபுரம் கௌமார மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ—இராமானந்த சுவாமிகளின் மாணாக்கர்

ஸ்ரீமத்-சுந்தரசுவாமிக ளியற்றியன.

அந்தாமரையோ னமைப்பநிகழம்புவியிற்
பைந்தார்வளஞ்சால் பரதகண்டமேலதிலுங்
கொந்தார்குழலுமையாள் கொண்கன்குமரனொடு
வந்தேயவதரித்த மாட்சிமைசேர்தென்னாடு. (க)

தென்னாடதினீ டிருநெல்லையென்றொருபேர்
பன்னவிளங்கும் பதியில்வரும்வேளாளர்
மன்னுமெனத்திகழ்ந்த வள்ளலாமோர்பெரியோன்
றன்னேனென்பதன்பலத்தாற் சந்தக்கிளிவடிவோன். (உ)

வந்தானோர்சேயாய் வளர்ந்தான்வளர்பிறைபோற்
கந்தாகுமரா கதிர்வேலாவென் றுநிதந்
தந்தாதனனவெனச் சந்தவண்ணமும்பாடி
நந்தாரணியி னரரிறைச்சியுண்ணமல். (௩)

சிவகருணை செகமெலாந்தானோங்கிப்
பாவமலிமாந்தர்களும் பத்திநெறியதனை
மேவற்கருளலது வேறொன்றிலாகாதென்
றோவற்பெருக்கோ டயிலோனைப்பூசைசெய்தும். (௪)

2

சிந்தனைபண்ணுட்புரிந்துஞ் சேயையெதிர்காணுமல்
வந்தவயிராக மாபெரிதுமாபெரிதா
லுந்துமலைமேனின் றுருண்டகதைமுதலாச்
சொந்தவநுபூதித் தோற்றம்பலவெடுத்து. (ரு)

சொல்லற்கெவருந் துணிவுகொளமாட்டார்க
ளல்லன்மனத்தோ ரறியுந்தரமதன்று
னல்விற்பனமுடைய ஞானியவனுடலெலாங்
கல்வெற்பினினடஞ்செய் கந்தவேடன்செயலே. (சு)

சந்தன்செயலாற் கவின்றண்டபாணியருட்
சொந்தமகனுத் துலங்குசெந்தினுயகனீ
யந்தண்புவியிலெனை யன்னுருந்தேர்ந்துயவே
நந்தண்டபாணிவிசயத்தை நவின்றனையால் (எ)

சொற்றநினக்கவன்றன் றூயவருளாலுலகப்
பற்றென்பதற்ருசான் பாதப்புணைநாடு
நற்றொண்டினர்வழுத்து ஞானநிலையுங்கதியி
லுற்றென்று மீளாவுயர்வும் பொருந்துகவே (அ)

தந்த தானன தய்யத் தனனு தனனு

அண்டர் வாழ்வையு மெள்ளப் புரிசீரினதே
யந்தணாளர்கள் கொள்ளத் தருமாதரவே
கண்டபாவனை மையற் றெறுவாழ்வினதே
கண்டுதேறலும் வெள்கச் செயுமேன்மையதே
தொண்டர்யாவரு நள்ளிக் களிகூர்தருமோர்
துங்கவீடினி தொல்லச் செயுமோர்துணையே
தெண்டபாணிவி சையப் பெயர்சேர்தரவே
செந்தினுயகன் விள்ளற் புதநூலிதுவே. (சு)

முற்றிற்று.

குருபாதமேகதி.

உ

குருவேதுணை.

விஷய அட்டவணை.

விஷயம்.		பக்கம்.
பாயிரம்	...	க
பூர்வபாகாரம்பம்	...	௩
அவதாரம்	...	ரு
பாலச்சடங்கு	...	௬
உபதேசம் பெறல்	...	,,
கவிபாடுதல்	...	எ
திருவேடம்	...	அ
திருமலையேறி யுருளல்	...	௯
விசேடபூசை	...	க0
வாக்கேற்றல்	...	கக
பிரயோக விநோதம்	...	,,
வடதிசை யாத்திரை	...	க௩
சென்னைப்பிள்ளைத் தமிழரங்கேற்றல்	...	கச
புதுவைப் பிரபந்த மரங்கேற்றல்	...	கஎ
அறுவகை யிலக்கண மரங்கேற்றல்	...	க௯
முற்பிறப்புணர்தல்	...	,,
அருணையிற் சகத்திரதீபமியற்றல்	...	உ0
கழுகுமலை யடைதல்	...	உக
காரணமுரைத்தல்	...	உஉ
கனவிற் பொதியை சேர்தல்	...	உச
நனவிற் பொதியை சேர்தல்	...	உரு
சருவபிரசாதம் பெறல்	...	,,
குருமகிமை யுணர்தல்	...	உஎ
திருச்செந்திலடைதல்	...	௩0
வண்ணத்தியல்புநூ லரங்கேற்றல்	...	௩க
வடலூராரைச் சந்தித்தல்	...	,,

விவர அட்டவணை.

குருபாதமேகதி.

உ

குருவே துணை.

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளின்

சாத்திரக்கவிகள்.

சூரியனே தெய்வமெனச் சொல்ல லொன்று
சுடர்மழுவான் கடவுளெனத் துதிப்ப தொன்று
வீரியசத் தியைப்பெரிதா விள்ள லொன்று
விட்டுணுவே யாகுமென விளம்ப லொன்று
சீரியக ணேசனெனப் பகர்த லொன்று
செவ்வேற்கைச் சேந்தனெனச் செப்ப லொன்றென்
றாரியநூற் றலைவர்புகல் சமயக் கூட்ட
மாறுமெங்கள் கவுமாரத் தடக்கந் தானே.

பரம்பொருளின் பிரகாசம் பரிதிப் புத்தேள்
பலவுலகு மொடுக்குகின்ற பண்பே யீசன்
காந்தவற்றை யுதவுவது சத்தி யாவுங்
காப்பதுமா லடியவர்தாங் கருதுஞ் செய்கைக்
கூரங்கொடுத்து முடித்திடுதல் கணேசன் ஞான
வுபதேசம் புரிந்திடுத லொள்வேற் கையான்
வரந்தருமட் டுபாசித்துப் பெற்றோ ரிந்த
வகையறிவார் மற்றையர்க்கு வம்பா மன்றே.

எங்கெறிந்த கல்லுநிலத் தினில்வீழ்ந் தாற்போ
லெவ்வுலகத் தியாவரெவ்வா றெண்ணி னாலு
மங்கவண்போ யருள்வதொரு பெருந்தே வென்ன
வறிந்தோரே யோகநிலை யாள ராவா
ரிங்கிவண்வீற் றிருப்பதுநங் கடவு ளென்போ
ரிளம்பருவக் காரர்தெய்வ மில்லை யென்பார்
தங்களையோ சிக்கிலிவர் தேவர் போல்வார்
சத்தியம்பின் னுளிலுண்மைத் தகைதோய் வாரே.

ஒருபரமே யளவிறந்த கோடி வண்ண
முருவெடுக்கு மெனுஞாய முணர்ந்திட் டாலுந்
திருவுருவ மத்தனையுஞ் சமமென் றெண்ணித்
தெண்டனிட்டுப் போற்றிசைத்துத் திரியொண் ணாது
குருவடிவ மாகவரு மேன்மை தோய்ந்து
கொல்லாத பூசைகொள்ளுங் கொள்கைத் தாகும்
பெருமகிமைத் தெய்வமுற்று நலமா மென்னப்
பேணலா மற்றவற்றாற் பிழையுண் டாமே.

எவ்வகைய சமயத்துத் தெய்வந் தன்னை
யிறைஞ்சிடற்கு மிக்கநிலை யென்றென் றுண்டீங்
கவ்வழிக்காம் பருவமுறு மவரே கொள்வா
ரதையுரைத்தான் மனத்தகத்தி லையுற் றாலு
மெய்வழியென் றனைவர்களும் வாயா லேனும்
விளம்புவது கடனேயாம் வேறு சொல்வோர்
பவ்வநிகர் பழிப்படைந்து கெடுவா ரந்தப்
பழயபொருள் குருபரன்பொற் பதங்க டாமே.

மந்திரமட் டுரைப்போரிற் சிலைசெம் பாதி
வடிவநினைப் போருயர்ந்தோர் மற்றன் னோரிற்
புந்தியினு னுருவமைப்போர் மேலா வாரப்
புலவரினுங் குருவைநம்பும் புனிதர் மிக்கோர்
தந்திரரிந் நால்வரினுஞ் சிறந்தோர் நாளுஞ்
சலியாமற் றியானிக்குந் தவத்தின் மாண்பா
லிந்திரவி யுள்ளமட்டு மழியாக் கீர்த்தி
யெய்தினோ ரெனத்தெளிவ தெளிதன் றம்மா.

குருபாதமே கதி.

உ

திருவேதுணை.



மஹான் வண்ணச்சரபம்

திருப்புகழ்ச் சுவாமிகள் முருகதாச சுவாமிகள்

என வழங்கும்

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள்.

உ

குருவே துணை.

தண்டபாணிவிஜயம்.

பூருவபாகம்.

பாயிரம்.

குருவணக்கம்.

பொதுத்தரு.

பரிதியாய்ச் சிவனா யுண்கட் பரையுநா ரணனுமாகிக்
கரிமுகத் திறையாய் வேற்கைக் கந்தனாய்க் கருதுந் தொண்டர்க்
குரியவா றனைத்துமாகி யொளிரருட் குரவன்பாதம்
பெரிதுவாழ்த் தெடுத்துநாடிப் பிழையறப் பணிந்துய்வோமே. (க)

சிறப்புத்தரு.

அகம்புறமென் றுளசமய மாறிரண்டுந் தனதுருவத் தங்கமாக் கொண், டுகந்துகொலை புலையிஞ்சை யிலார்சொலுந்தே வெல்லாமு மொப்பித் தொண்டர்க், கிகம்பரமுற் றுளபோகங் கடந்தமுதற் கதி வழிகாட் டிடச்சேயாகித், திகழ்ந்ததண்ட பாணிதிருப் புகழ்முருக தாசனிரு திருத்தாள்போற்றி. (உ)

சந்தானதரு.

தவமிகுமுத் தமிழ்வண்ணச் சரபதண்ட பாணியருட் சலதிமூழ்கிப்
பவமறுமெய்த் தவநெறியி னநுபூதி யடியருறப் பகர்ந்தீடேற்றி
யவனிவனா யிவனவனா மத்துவிதக் காட்சியென தறிவிற் காட்டிப்
புவனியிலெற் கொருதுணையாப் பொலிராமா னந்தனடி போற்றி
[வாழ்வாம். (௩)

அடியவர்வணக்கம்.

நீறுமிகப் புனைந்துகண்டி யணிவோராகி
நிகழ்த்துகொலை புலையிஞ்சை நீத்துப்பல்லோர்
கூறுபவு ராணிகத்தின் மயங்கிவாடிக்
குலையாம லதனுறுதி குறித்துக்கண்டு
பேறுதவுங் குருபரனே யாவுமென்னும்
பெருநெறிகொண் டிலகுகவு மாரர்தங்க
ளாறுமலர்ப் பதம்பணிந்து துதித்துநெஞ்சா
ளடியெலா நலமுமுறக் கூடிவாழ்வாம். (௪)

அவையடக்கம்.

குருபாதத் துவப்பெருங்கா வியவேதத் திடையெமது குரவனை, பொருவிறண்ட பாணிமுனி தனதருபூ தியுங்கதையும் புகலக் கண்டும், பருவமிலே னிங்குதண்ட பாணிவிச யச்சிறுநூல் பகர்தல் வானிற், றிருமலிசெங் கதிரவன்முன் மின்மினிதன் னொளிபரப்புஞ் செய்கைத்தாமால். (௫)

நூற்பிறப்புக்காரணம்.

திருப்புகழ்த்தே சிகன்முருக தாசன்செஞ்சொற்
செறிபெருங்கா வியத்தினிற்றன் சீரைத்தாழ்த்தி
விருப்புறுமுள் ளன்பதனாற் றன்பங்காட்டி
விளம்பியதா லதனையன்பர் வினவப்போற்ற
வருத்தமடை குவரதன்றி முன்பின்னாக
வைத்துளஞா யமுந்தெரியார் வந்ததாகு
முருப்பொலிதன் னவதாரந் தந்தைதாய்செய்
யுயர்தவமா தியவிளங்க வுரைத்ததின்றே. (௬)

இடையிடையே யிலைமறைகாய் போலக்காட்டி
யிசைத்துள்ளா ரதைமுறையா விசையவைத்துக்
கடைவரையிற் சுருக்கியுரைத் தந்நூலின்பின்
காசினியி னடந்தபல கதையுங்கூறி
நடைசெறிமெய்த் தொண்டர்கொளப் பாடுகென்ன
நளிர்பொழில்சூழ் சிரவணமா புரத்திலன்ப
ருடையதவக் குருவாகு மிராமானந்த
னேதுமொழிப் படிதமியே னுரைப்பேன்மாதோ. (௭)

முற்றிற்று.

குருபாதமேகதி.

உ

குருவேதுணை.

தண்டபாணிவிஜயம்.

பூருவபாகம்.

நூல்.

திருவிளங்கிய பூமகண்முகமெனத் திகழும்
பொருவில்பாண்டிநாட் டிடையருள் செறிதமிழ்ப் பொதியைப்
பருவதந்தனிற் றோன்றியேகுணதிசை படர்ந்து
பெருகுதாம்பிர வன்னியாறதன்புகழ் பெரிதே. (க)

செப்புமந்நதி யிருகரைப்புறத்தினுந் திகழும்
பப்புபல்வளத் தலம்பலவவற்றினுட் பரமன்
றப்புறுதுவேய் முளையிடைதோன்றுபு தவத்தோ
ரொப்புபேறெலாங் கொடுக்குநெல்வேலிமிக் குயர்வே. (உ)

அந்தமாநக ரதன்புகழ்சொலப்புகி லடங்கா
முந்தஞானசம் பந்தர்செந்தமிழ்த்தொடை முதலா
வந்தநின்றசீர் மாறனுதியர்பணி வாய்ந்து
செந்தகைத்திரு மகள்கலைமகளருள் சிறக்கும். (ங)

நீர்வளந்திகழ் நிலவளங்குடிவள நிறைந்த
கார்வளம்பொலி பொழில்வளந்தொழில்வளங் கனகச்
சீர்வளம்பெரி தோங்கியாலயந்தொறுந் தெய்வத்
தேர்வளங்கொள்பல் விழாவணிமதிதொறுஞ் செழிக்கும் (ச)

அத்தகைப்பதி யிடையுழுதொழிலின்வே ளாண்மைச்
சுத்தமாமர பினன்கலைபலதெரி தூயன்
பத்தர்பாவலர் வறிஞர்பாலவரவர் பண்புக்
கொத்தவாறுரி மைத்திறத்துதவிசெ யுரவோன். (ரு)

நெல்லைமாநகர்ப் பரன்*வலப் பாகத்தி னிலவும்
வில்லைநேர்நுதற் காந்திமதியின்பதம் விரும்பி
யெல்லையின்றிய பணித்திரம்புரிபவ னெழிற்செங்
குல்லைவேளுறழ் செந்திநாயகப்பெயர்க் குரிசில். (சு)

இல்லறத்துணை மனைவியர் நால்வரை யினிது
வல்லவேதநூல் விதிவழிமுறைமுறை மணந்து
மல்லறீர்ந்துவப் புறச்சுதனுதிக்கிலா தயர்ந்து
நல்லதானதன் மங்களுேனுன்பாதிய நடத்தி. (எ)

வருந்துநாளினிற் றுலாமதி நெல்லையின் †வடிவாள்
பொருந்துசீர்த்திரு மணப்பெருங்காட்சியிற் பொலிந்து
திருந்துவீதியிற் பவனிகொண்டருளினள் சென்று
குருந்துநேர்தவச் சிசுவிலாக்குறைசொலிக் குழைந்தான். (அ)

உடனத்தாயச ரீரியாய்க் கொடுத்துளே னுவகைப்
படல்விடுத்தினித் துயருறேலென்றனள் பகர்சொற்
றிடமுறச்செவி யேற்றுமுன்றுணையிற் சேர்த்துக்
கடவுள்வாக்கெனக் கண்களோடொற்றுபு களித்து. (கூ)

மனைபுகுந்தன னதுமுதலவன்கடை மனையாள்
புனையணிக்கலைப் பேச்சுமுத் தம்மையாம் புனித
வனையினல்வயிற் றிடைதவக்கருவடைந் தருளா
லெனையனுருமுய்ந் திடக்கொளுந்திருவுரு வெய்த. (கo)

நலங்கொள் சொப்பன மளவறக் கண்டன ளுள்க
டுலங்குமையிரு மதியினுங் கேளிர்கள் சூழ்ந்தே
யிலங்குநல்விழா வெடுத்துவப் புற்றன ரெழில்வேள்
பலங்கொடன்புயத் துறுதமிழ்க் கிளியின்பாற் பகர்வான். (கக)

புவியிடத்தினிற் சமயவாதனையறப் போக்கிக்
கவியுமெய்ச்சம ரசக்கவுமாரமார்க் கத்தை
நவிலலுங்கொலை புலையிலாவுத்தம நலஞ்செய்
தவிருநன்னெறி பற்பலர்க் குதவவு மாற்றி. (கஉ)

* நெல்லை யென்னும் திருநெல்வேலியில், சுவாமிக்கு வலப்பக்கத்தில் அம்மன் சந்நிதி யிருக்கின்றது.

† வடிவாள்-என்பது காந்திமதி யம்மனுக்குரிய உபநாமம்.

சந்தவான்கவி யன்றியெக்கவிகளுந் தமிழின்
முந்தவந்தவர் சொலாதவாறனந்தமா மொழிந்து
பிந்தநம்பதம் புகுதியென்றுரைத்தனுப் பியதால்
வந்தருட்டிரு நெல்லையிற் கருவிடை வாய்ந்தான். (௧௫)

வேறு.

அவதாரம்.

இக்கலிக்கணு லாயிரத் துத்தொளா யிரத்துநாற்பத்தொன்ருய்ப்
புக்கதோர்விகா ரியில்விருச்சிகமதி புகல்பதினுருநாண்
மிக்கசீர்த்திர வாரநற்றசமியில் விளங்குமத் தந்தன்னிற்
செக்கர்மேனியங் குமரவேளருள்கொடு செகத்துதித்தனன்மாதோ.

அரியநற்சிசு வுதித்ததென்றுடற்பிதா வந்தணர் முதலோருக்
குரியபொன்விதை யாடைபாகடைகுள முதவிநூல் வகைதேர்ந்த
பெரியசோதிடப் புலவராற் சாதகம் பிழையறக் கணிப்பித்தான்
பிரியமாமவ ரிடையொரு தெளிஞனும் பிள்ளையன்றிதுவென்ருன்.

சொல்லுமம்மொழி கேட்டுளந் துளங்கியென் சொற்றனை யெனச்சோர்வோ, டல்லலெய்தியா யுட்குறை வுற்றதோ வறைதி யென்றனனன்றன், றில்லகத்திருந் துமதுபேர் சொல்லிடா திகதலத்தினர்க்கெல்லாம், வல்லதோர்பெருங் குருவெனத் திகழ்ந்தருள் வாழ்வடைந்திடுமென்ருன். (௧௬)

அதுவினுவியுட் பயந்தவிர்ந் துவந்தனோர்க் கானபல்பரிசீந்து
கதுமெனச்செல விடுத்தபின் குழவியின் கவினுணர்ந் தளிகூர்ந்தும்
விதுமுகஞ்சிவந் தழுகிலதிருகைகால் விதிர்த்தமு துணலின்ருு
விதுபிழைப்பதெவ் வாறெனப்பலர்சொனு ரின்னலுற்றனன் றந்தை.

*புன்னைமாவனத் தாவுடைநாயகி புணர்ந்தசங் கரலிங்கர்
தென்னைசூழுநெல் வேலியிற் செயிருறு செந்தினுயகன் றன்பா
லன்னைநேர்கரு ணையொடருச் சகனுரு வாத்திகழ்ந் தருணீறு
தன்னைநீலமாஞ் செவந்திமாமலருடன் றந்திவை சேய்க்கிட்டு. (௧௮)

---

* புன்னைவனம்-சங்கரநாராயணர்கோயிலென்னுந்தலம். அங்கு அம்மன், ஆவுடை நாயகி-சுவாமி சங்கரலிங்கர்.

எனது சங்கர லிங்கமாந்திருப்பெய ரிசைத்துமு விசைகூவி
னனது சஞ்சல மறச்சிசு வுய்ந்திடு முறுதியென் றுரைத்திட்டார்
மனமுவந்தெழச் சாக்கிரத்திலுமவை வயங்கின சொலுமாறே
தினகரன்றிகழ்ந் திடலுமஃதாற்றினர் செய்பிழைத் ததுமாதோ.

பாலச்சடங்கு.

பின்பு தொட்டிலேற் றுதலரை ஞாண்கையிற் பிறங்குகாப்பிடல்
சென்னி, முன்புறுஞ்சிகை களைதல்பல் லடியவர் மொழிதமிழ்த் துதி
மாலைக், கன்புசெய்செவித் துணைதுளைத் தணியிட லன்னமூட் டிட
ருணை, யின்புறப்புணர்ந் திடறமிழ்கற்பதற் கேற்றசாலையிற் சேர்த்
தல். (உ௦)

ஆதியாயபா லியச்சடங்குகளெலா மன்னைதந்தையர்கேளிர்,
பேதியாமனக் களிப்புடன் புரிந்தனர் பெருந்தமிழ்க் கலைவாரி, நீதி
யாற்குறு முனிவனுண்டமையென நிகழ்த்துமு னெளிதோர்ந்தார்,
கோதில்சேயினுக் கைந்தின்மே லாறெனக் குலவுமாண்டுறுநாளில்.

பெறுமவற்றிடை யறிவறிந்திடுமகப் பேற்றின்மேற் பிறிதின்
றென், றுறுதிகூறிய தமிழ்மறைக் கிலக்கிய மொழிர்ந்தசேய்பெறு
தந்தை, மறுவில் பூமிவிட் டும்பர்நா டடைந்தனன் மைந்தருமிவர்
பின்னுற், சிறுவனுமொரு குழவியுங் கண்டுளந் திகைத்தனர்
பலரம்மா. (உஉ)

உடலினுக்கொரு தந்தையாய் நேர்ந்தவ னும்பர்நாடுறி லென்
றுங், கெடலிலாவுயிர்த் தந்தையாங்குகனருட் கிருபைவாய்த் துள
தன்றே, வடல்குலாமனத் தெளிவுடன் பிதுர்க்கட னாற்றினர்வய
தேழின், மிடல்கொணெல்லையிற் கவுரிதன் குலத்திடை விளங்கு
சீதாராமன். (உஙு)

உபதேசம்பெறல்.

தனதுசோதரன் புரைசெந்தி ஞயகன் றன்றவச் சுதனென்றே,
மனமுவந்திப முகன்மறை திருமகண் மந்திரத்துடனோதி, யனக
மாமுபா சனைசெயும் விதங்களு மறைந்துமற் றையசிட, ரினம்
வியப்பமே லாமநுபவமுற வினிதுகண்டெழில்வேலோன். (உச)

மூலமந்திர மாறுசடாக்கரமறை மொழிந்துபா சனைச்சீருஞ்,
சாலவோதின னிராப்பகலளவறச் சாற்றிடுந் தகையெய்திச், சில
மாந்தினந் தமதுதாய் முன்னைவாழ் சிர்ச்சுரண் டையிலேகி, மேல
தாந்தமிழ் கற்றிருந்தனரநாள் விளைந்ததோர் விளையாட்டே. (உரு)

கவிபாடுதல்.

அந்தவூரினர் பூமிகாத்தாளென்றோ ரம்மனைத் தொழல் கண்டே, யிந்தநாமமெய் தியதிவட் கென்றுகேட் டிட்டன ரவ ணுள்ளோர், வந்தவாறுபல் வகைபதி லுரைத்தனர் மாதவச்சிறு பாலர், முந்தவேயமு தங்கடைந் திட்டநாண் முதிர்கனலெனவாலம்.

திமுதமிட்டெதிர் பரவிடத் தீயுருச் சிவபிரான்கையி லேற்றே யமுதமேயென வுண்டனர் கண்டமங் கவள்காத் தாற்பற்றிக் [ஞ் குமுறிடாதுகாத் தனளதாலெனும்* வெண்பாக் கூறலு மனேவோரு சமுசயந்தவிர்ந் தளவறவியந்திவர் தமையுப சரித்தாரே. (உஎ)

அன்றுதொட்டறு முகன்றிருவடித்துதி யனந்தமாச் சொல லுற்றோர், குன்றுதோறுமா டிடுமவனிடமென்பாற் குலவுநின் னரு ளுண்டே, லின்று சாட்சியொன் றியற்றுதி யெனவிரந் தினிதுகண் டுயில்போது, நன்றுளார்வியந் திடவருட் செயலினு னடந்தமை யுரைப்பேனே. (உஅ)

அந்தநாட்கன விடையொர்மாந் திரிகன்ரு னகங்கரமிகக் கொண்டு, வந்தவிர்ந்துதன் பரிசனர்பறையொலி வளர்த்திடத் தனின்மேலோ, ரெந்தவூரினு மிலரெனத் தனைப்புகழ்ந் திசைத்தன னதுகண்டு, மைந்தராமிவர் சென்றுனோர் பலரைநான் மாநிலத் திடைகண்டேன். (உகூ)

உன்னைப் போற்றனே வியந்திலர் சபையிடை யொடுங்கியே பணிவுற்றோர், தன்னைப் போற்றுதன் முறையல வெனவதைத் தான் பொருட் படுத்தானு, யென்னைமீறுந ரிருந்திடில் வருகவென் றியம் பினன் றவஞான, மன்னையன்னருன் சிறுமொழி குறிக்கொளார் வயங்குமென் னிட நீதான். (௩0)

உன்றன் வல்லவ முழுவதுங் காட்டுகென் றுரைத்தன ரவன் சீறி, முன்றனேரொரு கூடையைத் திறந்தனன் முதிர்பெரும் பாம் பொன்று, வன்றகைப்படம் விரித்திவர் தமையுற மண்டலித் தது கண்டுங், கன்றலுற்றிடா தின்னமென் செய்குவை கழறுதி யெனக் கேட்டார். (௩க)

வெண்பா.

* அமுதங் கடையுநா ளாலம் வெடித்துத்
திமுதமெனத் தீயெறித்துச் சென்ற—தமுதமெனத்
தீக்கடவுளுண்டார் திருக்கண்டத் தைப்பிடித்துக்
காத்ததனுற் பூமிகாத்தாள்.

அவனொர்மந்திரஞ் செபித்தலும் பேயொன்றங் கதிசினத் துடன் றேன்றிற், றிவரொர்பாடல்சொற் றனருடன் வெண்ணிற மிலங்குமோர் பெருஞ்சேவல், பவளநேர்சிகை யிடியுறழ் தொனி யுடன் பறந்துவந் தப்பேயை, நுவலும் பாம்பினை யவனையப்பறை யினை நொடியிடைவிழுங்கிற்றே. (௩௨)

அந்தக்காட்சிகண் டுடன்விழித் துவகைபூத் தருட்டிருநீறிட் டுக், கந்தநாயகன் கருணையை வியந்தனர் கழறுநாள் வயதொன் பான், பிந்தநெல்லையம் பதியடைந் தநுபவப் பெருக்கெலாந் தமதா சான், செந்தகைக்கருத் துவப்புறச் செப்பவத் தேசிகன் றிருவா யால். (௩௩)

மருவுநல்விதி காரனென் றோர்பெயர் வகுத்தனன் கவிமாலே, பெருகுமற்புதங் கண்டுளம் வியந்தருள் பிறங்குமோ யாமாரீ, வருக வென்றொரு பெயருமிட் டழைத்தனன் மனத்திடைவைராக, முருகு மன்புடன் மிகுத்திடச் சிலதின முற்றன ரவண்மாதோ. (௩௪)

ஆண்டதாம்வய தொருபதின் மூன்றினி லணிகொள்வண்ண மும்பாடி, நீண்டவேலனைத் துதித்தெழுத் தாறையு நிதஞ்செபித் தனர் பின்பு, மாண்டயங்கிய பொதியையின் சார்பினில் வளர்திரு மலைச்செவ்வேட், கீண்டணித்திருப் புகழ்த்தொடை பாடியங் கேகியேத் தெடுத்தப்பால். (௩௫)

நெல்லையம்பதி யிடைதனோர் குரவனு நிலவுசிதாராம, னெல்லை யில்புகழ் படைத்தவன் றன்னுட னினிதுவாழ்ந் திடுங்காலே, யில்ல றத்திருந் தேகதிபெறனல மென்றனன் குருவின்னூர், வல்லதாந் துற வறம்புகுந் தடைவதே மாட்சியென் றுரைத்தாரே. (௩௬)

ஊனருந்திடு மவரினும் பெரியவ ருண்டெனக் குருவோத, மானவேள்வியிற் கொன்றுணு மவர்களு மடமைசேர் சிறியோரே, யீனமாம்புலை நீத்துளோர் பெரியரென் றியம்பினர் சிலநாட்போய்க், கானவேடர்மா தினைக்குகன் கவர்தரு கவின்வள்ளியூர் சேர்ந்தார். ()

திருவேடம்.

அந்தவூர்மலைக் குகன்றிருச் சந்நிதி யதனிற்காவியந்தானை, சந்தமார்தரப் புனைந்தன ரருள்பெறத் தவம்புரிந் திடுங்காலே, சொந்த மாமியற் குருபரதாசன்வந் தழைக்கநெல் லையிற்றுன்னி, முந்தவுற் றதேசிகனைவந்தடைந்தருண் மொழிபல சொலியுற்றார். (௩அ)

அவ்வணந்திருச் செந்திலோடுருமலை யாதியதலம் போற்றிச், செவ்வணத்திரு வருள்கிடையாமையாற் றிருக்கைவேற்குகப் பெம்மா, னெவ்வமற்றருட் செய்யநாட்செல்லினு மிகத்தின்சீர்தர வேறோர், கவ்வைதீர்சிறு தெய்வநாடுதுமெனக் கருத்திலெண்ணுத லானுர். (௩௯)

மாடனேச்சுட லையைய நு மாறனொடு வயிரவன் றனைநன்கு
நாடலுற்றனர் தனித்தனி யுயிர்க்கொலை யாதிய நண்ணுமை
லீடறக்கருத் தினிலவிர்ந்தொன்றலால் யாங்கள்வேறல மென்றோர்
நீடவேசெய்பூ சனையெலாமதற்கென நீர்கொடு சமர்ப்பித்தார். (சம)

திருமலையேறியுருளல்.

பிந்தச்சிற்சில நாள்கழித்தருள்வளம் பெருகுரு மலைக்கோயிற்
சொந்தப்பாவல னுங்குகன்றன்வசந் தொகுத்தபாட்டுறுமேட்டின்
பந்தப்பெட்டகம் வைத்துமேற்றிசைநெறி படர்ந்துவைராகத்தாற்
கந்தச்சோலைசூழ் திருமலைக்கேகியக் கந்தவேளடிதாழ்ந்து. (சக)

இன்றருட்பிர சாதநல்கிடினலா தினியுயிர் வாழேனென்
றன்றவன்றிரு முன்பினிற்றங்கின ரவன்வெளிப்படலின்றி
நின்றபாலினெய் யெனவிருந்தனனிவர் நிறைந்தவைராகத்தாற்
குன்றதிற்குண திசையினிற்சிலகவி கூறிநின்று ருண்டாரே. (சஉ)

உருண்டபோதுடல் சிதைந்துகைகால்பழு துற்றுயிர் போகா மற், றெருண்டசிந்தனை யுறுதிமாருமற்றன் றிருவருளாற் காத்தே யிருண்டகங்குலின் கனவிலிப்படியுருண் டிடத்துணிந்தனைவீணே, மருண்டிறந்திடி லென்செய்வாய் தாங்கினேன் யானென்றான் வடிவேலன். (சங)

அதற்கென்றன்னுட லழிந்திடில் வேறுட லயன்செயக் காத் துள்ளா, னிதற்கெனென்றனர் குகன்மகிழ்ந் திருகையா லெடுத் தணைத்திதழ்முத்தி, விதத்திவேளையி லுய்ந்ததாற்றிருவுரு வாள னென்றொருமெய்ப்பேர், நிதத்ததாவுரைத் தருளினன்விழித் துன்ற னெஞ்சமீதோவென்ன. (சச)

சிலதினம்பல தலந்திரிந் தருண்மிகு திருநெல்வேலியிற் சேர்ந்தா
ரிலகிடப்புயத் திடையொருகாயமுற் றிருந்தது தினமூழ்கிக்
குலவுவெண்பொடி யதன்மிசை யணிந்தனர் கூறுமும்மதியாயு
நலமதாயுல ராதிருந்ததுகசி நாற்றமாதியுமின் றால். (சரு)

ஒருகணுவினிற் குறமக ளங்குவந் துற்றன ளெனக்கேட்டுத்,
தெருவி லேகிநேர் கண்டன ரவளுருத் தெரிசனை யதுகண்டு, மருகு
சென்றடி பணிகிலா திருந்தன ரவள்வலிதினிற் பேசித், திருவெண்ணீறு
தொட் டணிந்துபுண் மீதினுஞ் செறித்தனண் மொழிகின்றாள். (சசு)

என்னைநீயறி யாய்கொலோ வுருமலை யினன்சிறுமனையன்றோ
முன்னைநாளினி யங்கு வந்திலைகொலோ மொழியென்றுடியினீங்கி
யன்னையென்றறி யாதிருந்தனமென வயர்ந்தன ரந்தப்புண்
மின்னையொத்திரண் டொருதினத்தாறியே மேயதுவடுவாயே. (சஎ)

உருமலைத்திருக் கோயிலில்வைத்தவே டொக்கவந்நதிவெள்ளம்
பெருகலானனைந் தழிந்தமைதெரிந்துபல் பிரபந்த முளவெல்லாம்
பொருவிலாற்றிடை கிழித்தெறிந்திட்டனர் புலமையுந் தவஞானத்
திருவுந்தீரவை ராகமுங் கலந்தவர் செயலெவர் தெரிவாரே. (சஅ)

தனதுடற்சகோ தரனெனத் தோன்றிய தம்பிகற்றிடலின்றி
யினமதாஞ்சிறு ருடன்விளை யாடல்செய் திருந்ததா லதைநாடி
மனம்வருந்துபு கல்வியின் சாலைதாம் வைத்தறு மதிக்குள்ளாய்
வினவுபாடல்க ளியற்றிடும் புலமையில் விளங்கிடப் புரிந்தாரே. (சகூ)

விசேடபூசை.

நெல்லையிற்றம துடல்வரு மனையிடை நிகழுமுன் கூடத்தி
லெல்லையில்லருட் குமரவேளுருவமவ் வெழிற்சுவரிடைதீட்டி
வல்லைநேர்முலைத் திருவருட்சத்தியா வயங்குவேல் வைத்தன்பான்
முல்லைதாமரை வெட்சியாதியகொடு முறையிற்பூசனைசெய்தார். ()

அந்தநாளினின் மொழிந்தபாமாலைக ளனந்தமாமவையன்றிச்
சொந்தமாமநு பூதியும் பற்பல சொல்லிடின் முடியாவே
கந்தநாயகன் றிருவருட் கடலிடை கவினலை பலபோலா
மிந்தவாறெலாங் குருபரதத்துவ மிசைத்திடும் விரிவாயே. (ருக)

யானவற்றினை யியம்பிடிற்பெருகிடு மேற்றசத்தனு மல்லேன்
ஞானசாதகர் விரும்புவரெனச்சில நவில்குவன் சொலக்கேண்மின்
மானமார்தரு சரியையாதியநெறி வாய்ந்துபூமியிற்றோன்று
மோனதேசிகன் றிருவடித்துணைகொடு முயனு மெய்ப்புலவோரே. ()

வேறு.

கும்பமுனிநா ரதமுனிவன் குலவுவீர வாகுமுதற்
செம்பண்புறுபல் பரிவாரஞ் சேர்த்துக் கும்பம் பலவைத்துப்
பைம்பொன் வெள்ளி தாம்பிரத்தாற் பலயந்திரங்க டாபித்து
நம்பன்புடைனக் கினியோம நடத்திப் பூசைசெயு நாளில் (ருங)
செங்கனுடைந்த வொருபாதி திகழ்சக்கரைக்கட் டியதாகிப்
பங்கமறுசீ ரெனுமிச்சம் பழமொன்றருளா னுண்டாயிற்
றெங்கண் முருக னுத்தரவா லீதுகொணர்ந்தே னென்றொருவன்
றுங்கமலிவெண் ணீறுமிகத் தொழுது கொடுத்துச் சென்றானே. ()

உண்ணுஞ்சிலசிற் றுண்டிவகை யொருவையணவவே தியன்கொணர்ந்து, நண்ணுமுருக னுனக்களிக்க நவின்றானெனச்சொற் றுதவினனு, லெண்ணும் பயனெல் லாமடியார்க் கிடுமெய்க்கருணை யினனவனென், றண்ணுமறிஞர் தெரிந்தவன்பா லன்புபுரிவதறமாமே. (ருரு)

வாக்கேற்றல்.

என்றும்பூசித் திடுமுருக னெழிற்சித்திரத்தின் றிசைசிரம்வைத்
தொன்றுமிரவிற் றுயில்கூர்கா லொருநாட்கனவி னாதன்றான்
றன்றும் வீணை கரத்தேந்தித் துலங்கினுன்கண் டடிபணிய
நன்றுகருதும் போதவன்றா னணுகித் தலைப்பாங் கரிலிருந்தே. (ருகூ)

இந்தப் பெருவாக் குனக்களித்த தியாரெனறனன்சித் திரவடிவக்
கந்தன் குமர குருபரனு மடியே னென்று கவினபயச்
சந்தக்கரத்தாற் றனதுரத்திற் றட்டி முக்கா லுரைத்தனன் பின்
சொந்தத்துணைவி ரனுமொருபாச் சொற்றானந்தக் கருத்திசைந்தே.

பிரயோகவினோதம்.

ஆங்கு நிகழுஞ் சிலநாளி லறிஞன் சீதாராமனென
வோங்குங் குரவன் றன்மைந்த ரொருமூவரின்மூத் தவனுளந்திற்
றீங்குமுதிரு மழுக்காறு செறிந்தோன் முத்துக் கிருட்டிணப்பேர்
தாங்குமவன்மாந் திரிகவழி தனது தொழிலாக் கொண்டுள்ளோன்.()

தன்னைநிகர்சே யருள்கொடவ தரித்த வெமது குருநாதன்
மின்னைபுறழ்வே லினையிகழ்ந்து விளம்பிப் பின்னு மிவரைப்பார்த்
துன்னையறிவு நிலைகலக்கி யூரிலிரந்துண் டிடச் செய்வே
னென்னைமதியென் றனனப்போ திவரோர் மாற்ற மெதிர்சொல்வார்.

இரந்துண்டிடலென் றுறவுநெறிக் கேற்ற தவமா மெனக்கொள்வேன்
பரந்தவெனதுள் ளறிவுகெடப் பண்ணு வாயே னீயுலகில்
வரங்கொ ளொருவற் கேபிறந்த மகனு மென்று ரதுகேட்டு
முரண்கொண் டாசா னிசந்தானு வென்ன முனிந்தா னப்போது. ()

உன்னைக் குருவாக் கொண்டொழுகு முண்மையென்பா லுள ததுபோ, லென்னை மகவாக் கொடுபேணு மினிய பொதுநோக் கெனு முரிமைப், பொன்னையுறழுங் குருத்துவ நின் புந்தி யிடங்கொண் டிலேநீயென், றன்னையுருவேற் படையானை யகத்திற் கருதி யகன் றுரே. (௬௧)

அன்றேமுத்துக் கிருட்டிணன்று னைமுகனைச் செபித்திவனை
யின்றே யழித்து வருவாயென் றேவல்புரிந்தா னவன்களிருச்
சென்றோர் மலிநெல் லையின்றளியிற் றிகழுத்தரபா லிருந்தடர்ந்து
கொன்றேவிடநா டுபுகாலிற் குலவுந்தளையைக் கழற்றியரோ. (௬௨)

றுதிக்கையினிற்கொண் டதிவிரைவிற் றூரத்தக் கனவு கண்டஞ்சி
மதிக்க முடியா விதமோடி வாமேற்றிசைவா யிலினிடையே
ததிக்குக் கருணை செயுங்குகன்முன் சாற்றுமணிதக் குருவடிவா
யுதிக்குமதிபோற் றிருநீறக் குடன்முற் றிலும்பூண் டவிர்ந்தன்பால்.

அஞ்சேலந்தக் களிறிங்கே யணுகா தணுகி லழிந்தொழியுஞ்
செஞ்சேவலங்கைக் குமரகுரு பரன்றன் றிருச்சந் நிதியிதென்றுன்
மஞ்சேப் குழற்பார்ப் பதியிவர்தாய் வடிவாத்தோன்றி யவனழிய
நஞ்சேயனைய வினையவற்கு நணுகிற்றென்றுள் விழித்தனரே. (௬௪)

மற்றோர்தினத்துக் கனவினிடை மதமால்களிறென் றணித்தெருவி
லுற்றேயுலவு கின்ற துநீ யுரைத்தாற்கொன்று விடுவமென
விற்றோளுடைய சிலவீரர் விரைந்து கேட்டா ரதற்கந்தோ
சற்றுயினுமந் நினைவுகொள வேண்டா மென்றுர் தவமுதல்வர்.(௬௫)

கனவினிலுமோ ருயிர்க்கிறுதி கருதலாகா தெனப்பிறர்க்கு
மனநொந்துரைக்கு மெங்குரவன் மகிமையெவராற் சொலலாகு
மனகமகிமைக் கவுமாரர்க் கானவிரதங் கொலைபுலைதீர்த்
தினமாமடியா ருடன்சித்தி யியற்றிப் பிறவாக் கதிபுகலே. (௬௬)

அதன்பினுமையா டணையேவ வவளைந்தாண்டி னுருவாவந், திதங்கொளொருபாட் டெனக்குரைத்தி யான்போருவனென் றிரந் தனளவ், விதந்தேர்ந் தரிய கவியுடனே விளம்பக்கேட்டு மறைந்த னண்முன், கதங்கொளமணற் கதுசொலலாற் கவினுருடல்போ னமைக்கிரங்கி. (௬௭)

இந்தப்பிறப்பி லவன்கொளுமா றேவக் கடுங்கோ ரங்காட்டா
தந்தக்குழவி புருவாகி யருமைக் கவிகேட் டகன்றனளால்
சொந்தக்கருணைத் தாயுளத்திற் றோயுங்கருணைக் களவுண்டோ
மந்தக்கருத்தோர்க் கிவ்விவரம் வயங்காதென்கை நிசமாதோ. (௬௮)

வேறு.

அவ்வளவிற் பகையடங்கி யவனமைந்தான் குருவானோன்
செவ்வடிவேற் குகன்மறையைச் செபித்திவரை யழிக்கும்வண்ண
மெவ்வமுறப் பிரயோக மியற்றிடலு மவன்வயிரங்
கைவ்வயிற்கொண் டெதிர்வந்தான் கண்டெமது குரவனிடம். (௬௯)

உற்றவயி ரவனுயா யோடிமுனி தனுந்திரும்பி
நிற்றல்செயா தேகினனு னிகழுமுபா சகன்றிறம்போற்
பற்றருட்டெய் வமுந்தனது பண்புவிளக் கிடுமென்கை
நற்றவத்தோ ரநுபவத்தி னன்கறியத் தக்கதுவே. (௭௰)

வடதிசையாத்திரை.

இந்தவகை களைவிரிவா யியம்புவதற் கடங்காதால்
வந்தயட்டி னிறுத்தியினி மற்றசெய லுரைக்கின்றேன்
கந்தனருட் பூசைபல கடன்பொருள்கொண் டியற்றியதா
லந்தயிகு பொருள்வேண்டி யணிவடபாற் றிசைசென்றார். (௭௧)

தண்டமணி முழுநீறுந் தனிக்கீளுங் கோவணமு
மெண்டகுகா வியந்தானை யிடையினிற்சுற் றியவனப்புங்
கண்டவர்கண் களித்தருள்சேர் கவின்றண்ட பாணி யென்றார்
விண்டசந்தத் தொடையல்பல வினவினோர் வியப்பெய்தி. (௭௨)

இனியதிருப் புகழ்க்கார னெனவொருபே ரிசைத்திட்டார்
நனிமுருகன் றனைப்பணிந்து நாடுதல்கண் டவரெல்லா
முனிமுருக தாசனென மொழிந்திட்டா ரொருதிருப்பேர்
தனிமகிமை திகழ்வண்ணச் சரபமென்றுஞ் சாற்றினரால். (௭௩)

அணிமதுரை பரங்கிரிநே ரனந்தவிடந் தொழுதேகிக்
கணிதமுறு திருமயிலைக் காபாலீச் சரம்புகுந்தார்
துணிவுமலி யுளத்துறவோர் சிலரிவரைப் பார்த்திளமை
தணியுமுனித் தவவேடஞ் சார்ந்தனனென் றறைந்திட்டார். (எச)

அவ்விவரந் தெரிந்துகதி யடையவிரும் புநர்குழுவில்
வவ்வியடைந் தவன்முனியான் மனமறியா திகழேன்மின்
செவ்விலைவேற் குகனடிகள் சிந்திக்குங் குணமுடையேன்
மூவ்விதமாந் தமிழெனக்கு முருகனளித் தருளியுளான். (எரு)

சென்னைப் பிள்ளைத்தமி ழரங்கேற்றல்.

அறிமினென விடித்தொனிபோ லரியவண்ணக் கவியுரைத்தார்
நறியசுவை தெளிவுணர்ந்தார் நற்றிருச்சிற் றம்பலப்பேர்க்
குறிகொள்பெரி யோன்றுணையாக் கூடினன்சென் னைப்பதியுட்
பிறிதிணையி லாறுமுகப் பெயருறுநா வலன்முதலோர். (எசு)

இடந்தொறும்போய்க் கண்டுகவி யிசைத்திருந்தந் நகர்க்கோயிற்
கடம்பணிதோட் கந்தனுக்குக் கவின்பிள்ளைத் தமிழ்பாடித்
தடங்கலிலாதரங்கேற்றச் சந்நிதியிற் சென்றுசொலத்
தொடங்கினர்பல் புலவர்சபை துன்னினரத் தருணத்தில். (எஎ)

கச்சிநகர்ச் சபாபதிப்பேர்க் கவிஞன்மிகு கலைவல்லோன்
மெச்சிடுசீர் பெற்றுள்ளான் விளம்புபிள்ளைக் கவியூடே
நச்சியகாப் புப்பருவமுதலாய நவிலக்கேட்
டுச்சிதமாந் தாற்பருவத் தொன்பான்பாட் டீற்றடியில். (எஅ

செக்கருமொஞ் சியசெம்மை யென்னுமொழி செப்புதல்கேட்
டிக்கருஞ்சொற் பயன்யாதோ வெனக்கேட்டான் றமிழ்க்குரித்தா
மிக்கவெங்க ணுட்டிலொஞ்ச லென்னுமொழி மெல்லியருந்
தக்கபடி சாற்றும்வெண்சொன் ஞண்குறிக் குஞ்சரதமென்றார்.(எகூ)

யானறிந்த விலக்கியத்தி லில்லையென்று னிக்கூட்டத்
தீனமில்சீர்ப் பாண்டிநாட் டினனின்றே வெனக்கேட்டார்
ஞானகுரு பரனெருநன் னுவலன்போ லெழுந்துநின்று
நானறிவே னிந்தமொழி நமதுநாட் டுண்டென்றான். (அ0)

இதுபோற்பற் பலமாற்ற மெங்களுட் டுண்டென்னப்
பொதுவாகப் புகன்றன்பாற் புகல்சப்பா ணிப்பருவ
மதுவாசித் தானமுடி வாங்கவியில் வைகியெனுங்
குதுகூலப் பதச்சந்தங் கூறுகென வவன்கேட்டான். (அக)

தய்யவென்று ரன்றென்னச் சாற்றினனன் றுகின்முன்னோர்
செய்யமுறைப் படியென்றன் செவிபோமன் றுவெல்லாம்
வையமிசை தெரிந்தோமென் மதமெனக்கின் றுயினுமிங்
கையமின்றெற் சேர்ந்தோர்க்கு மணிச்சந்தத் தளவிலென்றுர். (அஉ)

அதுபிதற்று மொழியெனக்கொண் டப்படியா னுல்யானின்
றிதுசபையி லிருசெவியு மிழப்பேனென் றிசைத்திட்டான்
பதுமமலர்க் கலைவாணி பரிந்திவண்வந் திலங்காம
லெதுபுரிகின் றனளென்று ரெங்கடிருப் புகழ்முனிவர். (அங)

அக்கணமே யிரண்டுதா ரணம்விளங்கி யருணேசன்
மிக்கதிருப் புகழ்க்கவியின் மெய்தளரு மானென்றுன்
றக்கபுகழ் மீனுட்சி தகுபிள்ளைத் தமிழுரைத்தோ
னிக்கலைய வைதிகப்பாட் டினரென்ன விசைத்துள்ளான். (அச)

அந்தமுறைப் படியானு மறைந்துள்ளே னெனச்சொற்றுர்
சந்தநிலை யணிவோர்க்குஞ் சந்தேக மறவிளங்கிற்
றுந்தமுழக்காற் றவன்மட்டு மொளிரரைச்சந் தமென்றுரைத்தான்
வந்தவெனக் கரையோவம் மாதவர்க்கு மரைதானே. (அரு)

சாற்றுகென்று ரவர்க்குமரை தானென்று னவரென்னை
யேற்றுவந்தாற் போதுமுன்போ லிகண்மதிப்பு வேண்டுகிலேன்
றேற்றுமதி யுறழ்குடைக்கீழ்த் துங்கமறை வேதியரா
லூற்றுபுனன் மூழ்குமுடி யுறுதமிழ்வேந் தவையானுல். (அசு)

காதுடனீ யெழுந்தேகிக் களித்துலவ விடுவாரோ
தீதுறுதோன் முடியாளர் செலுத்தரசன் றேவென்ன
வோதுமப்போ தங்குள்ளா ருன்புகழை விளங்குவித்தான்
பேதுறு துவத்தியென்றுர் *பெரியோனு மவையறிய. (அஎ)

---

* பெரியோன்—காஞ்சீபுரம்—சபாபதி முதலியார்.

நல்லதிரு வாகியென நவின்றானவ் வளவில்விடுத்
தெல்லவரும் வினவமுத்தப் பருவமது மியம்பினரால்
வல்லகுகன் வரிற்றனொளி மழுங்குமெனச் சுடர்ப்பரிதி
மெல்லவலைக் கடன்மறைந்தான் மிகுசபையோ ரெழுந்தாரே. (அஅ)

மற்றைநாட் சபையிலவன் வாரானைப் பருவமுதற்
சொற்றவைகேட் டிடவந்து துலங்கிலன்றன் மாணாக்கன்
பொற்றைநே ரட்டாவ தானியெனும் புகழ்மேவக்
கற்றசபாபதிப் புரசைக் கவிஞனைச்சொற் றனுப்பினனே. (அகூ)

அவன்முதனு ளிருக்குமிட மறியாம லடங்கியுற்றோ
னுவமையிலா முழுமதிநே ருறுங்கடல்போன் மிகமுழங்கி
நவமுறுபல் பொருள்விரித்து நவின்றுபிள்ளைக் கவிவிதித்தோ
னுவல்கவியா யிரமென்ன விதித்திலனே யெனநொந்தான். (கூ0)

அத்திறமை யறிந்திவர்தா மட்டாவ தானமுறுஞ்
சத்திகொளுஞ் சபாபதிக்குச் சரிசொலற்கெச் சபாபதியு
மொத்தியையார் முழுப்புலமை யுடையானன் புடையான்வேல்
வைத்திடுதோட் குகனருட்சீர் வாய்ந்தவனென் றொரு*வெண்பா ()

அச்சபையிற் சொற்றருளி யணிகொணெல்லைக் கேகினர்பின், மெச்சணிச்செந் தமிழ்பாடி விளங்குசென்னைக் கிரண்டுதர, மிச்சை யுறச் சென்றுபுக ழிலங்கவரங் கேற்றினரென், றுச்சிதமாங் குருபர தத் துவத்திருநூ லுரைத்துளதால். (கூஉ)

ஒற்றியூர்க் காளியைப்பார்த் தோதும்வெண்பா முதலாகச்
சொற்றிருக்குஞ் சரிதமெலாஞ் சொலிலிதுமோர் பெருநூலாங்
கற்றிடுமெய்த் தொண்டர்சில கதைதெரிந்திட் டாலுமெல்லாம்
பெற்றிடுவா ரெனனிசமாற் பேசுவேன்சில மாதோ. (கூரு)

---

* சந்தமலியட்டாவ தானச்சபாபதிக்கிங்
கெந்தச்சபாபதியுமீடில்லை கந்தனருள்
பெற்றோனறிவாற் பெரியோரைப்பேணுநல
முற்றோன் முழுப்புலமையோன்.

வேறு.

திருநெல்வே லிப்பதியி லொருபெரும்பூ சையினிமித்தஞ் சீர்தோய்பந்தற், பொருவிலலங் காரவகைபுரிந்துகுகன் றிருக்கைவேல் பொருந்தநாட்டி, யருண்மலிபூ சனைதுவக்குஞ் சமயமுகிற் குலஞ்செறிந்தே யதிகவெள்ளம், பெருகமழை பெயுங்குறிப்புக் காட்டிய தெங் குருமுதல்வர் பெரிதுகண்டார் (கூச)

கண்டொர்சிறு துளிபுவியில் விழுந்தாலு மிவ்வணியைக் கணத்தில்யானே, விண்டழியக் குலைப்பேனென் றுரைத்திடலுஞ் சிறிதுமின்றி விலகிற்றப்பா, லண்டர்பணி குகன்பூசை நிறைவேற்றி யடியர்பலர்க் கன்னமாடை, கொண்டளித்துத் தியானமுறை பழகியிருந் தனரருட்சீர் குலவிற்றம்மா. (கூரு)

புதுவைப்பிரபந்த மரங்கேற்றல்.

சிலதினமவ்வாறிருந்து வடதிசைநோக்குபுபுதுவை சென்று நல்லோர், பலர்புகழ வங்குவளர் சண்முகமா முனிவரன்பாற் பழகிச் செவ்வேண், மலரடியிற் றிருப்புகழ்ப்பா முப்பதுசொற் றனரந்நாண் மறுவில்சிந்தை, யிலகுகண்ணுவப்பெயர்கொள் வேதியன்கண்டருந்தமிழ்ப்பா வியம்பக்கேட்டு. (கூகா)

தனைமறந்த வானந்தம் பெருகியருட் குகாமுருகா சரவணவென், றனைவருங்கேட் டிடக்கூவி யிவரை யிருகைகளினு லணைத்து முத்தி, முனைமலியவ்வூர்த்தலைமை விசுவகுலத்தானப்பன் முன்போய்ச் சொன்னான், வினைநலத்தா லவன்பலரோ டெய்தியழைத் துபசாரம் வெகுவாச் செய்தான். (கூஎ)

முப்பதாந் திருப்புகழ்ப்பா முடிந்தநாண் முழுதுணர்ந்த முருகன்றேன்றிச், செப்பமுறு மெனதுமுக மாறிலொன்றே களித்ததின்னுஞ் செப்புமைந்நா, றப்பறக்கேட்டன்றிவிடேன் சாற்றுகென்றான் மகிழ்ந்துபிள்ளைத் தமிழுமேலோ, ரொப்பருமைக் கலம்பகமு மலங்கார பஞ்சகமு முரைத்துப்பின்னர். (கூஅ)

பாதாதிகேசமியற் பதிற்றந்தா தியுமினிதாப் பகர்ந்துபின்பு, காதாரக் குகன்றிருச்சந் நிதியிலரங்கேற்றுவது கருதிக்கற்றோ, ரோதார்வப் பத்திரிகை யெழுதியச்சிட் டதையுரிமை யுறுதானப்பன், மீதாகப் பலருமறி தரவிடுத்தானதுநருணம் வெருவிச் சில்லோர். (கூகா)

இப்பதியிற் புலவர்சில ரழுக்காறுற் றவையினில்வந் தெதிர்ந்து வாது, செப்பநினைத் துளரெனல்கேட் டெனதுகுகன்றிருவுளம் போற் செய்புமென்று, கைப்பகடுமதம்பொழிந்து தனைமுறித்துச் சென்றங்கு கடிதுசென்றார், துப்பவிர்செவ் வாய்ச்சிறுவர் விளை யாட்டி லொருவனங்கு சொல்வான்மாதோ. (க௦௦)

அஞ்சேலங் கேகியொரு பாட்டுரைத்தா யெனிலவர்க ளதிக வஞ்ச, நெஞ்சேங்கி யொடுங்குவரென் றனனதுகேட்டுளமகிழ்ந்து நெடுவேலேந்துஞ், செஞ்சேய்முன் வணங்கியடி யவர்பலரோர் சாரி ருப்பச் செறிநெஞ்சாண்மை, மிஞ்சேண்மைப் புலவரொரு சாரி ருப்பவிவர்பனுவல் விளம்பலானார். (க௦க)

அருமைமிகு கலம்பகத்தின் மறவர்சினந்தோதுமுறுப் பதனி லன்னோர், பெருமையுடன் கவளமுண்ணு மத்திமிசையுமதரசு பிறங்கிப் போர்க்கு, வருகினும்வெட்டிக் களத்தில் வீழ்த்துவமென்று ரெனலும் வரும்பாவல்லோ, ரொருவியத்தி மரங்கவள முண்ணுமோ வெனக்கேள்வி யுரத்துக் கேட்டார். (க௦௨)

அரசமரம் பெண்கேட்கி லத்திமரங்கவளமுண்ண லறமேயென் றெங், குரவனுரைத்தலும்பலரும் வியந்துவகைக் கடலினிடை குளித்தார் மேலாந், தரமுறுசெந்தமிழ்ப்பனுவ லாறுமரங்கேற் றியபின் சபையோரெல்லாங், கரமுகிழ்த்து வணங்கினர்சண் முகப் பெயர்கொளொருவணிகன் கனகந்தன்னால். (க௦௩)

யான்செயவேண்டியதுனக்கியா துரையென்றனெல்லையில்யா னினிதுவாங்கும், வேன்செய்கடன்றீர்த்திடெனச் சொற்றனரக் கணமேயவ் விதஞ்செய்திட்டான், கான்செய்மலர்த் தொடை புனைதா னப்பனும்பொன்மிகையளித்தான் கந்தவேட்கு, வான் செய்புகழ்வசந்தவிழா நடத்தியதியுவப்புடன் சின்மதியங்குற்று. ()

பின்புநெல்லைக் கேகியருந் தமிழ்ப்புலவர்க் குயிர்போலும் பெருமைசான்ற, வன்புறுவண்ணத்தினிலக் கணமாம்வண்ணத் தியல்பு வகுத்துவல்லோர், முன்புகலு மெழுத்துடன்சொல் பொரு ளணியாப்பதுமவைதேர்ந் திடுசீராகு, மின்புலமையிலக்கணமுஞ் சேர்த்துவகையாறெனறு லிசைத்தாரன்றே. (க௦௫)

அறுவகையிலக்கண மரங்கேற்றல்.

ஐவகைப்பூதமுங்கடந்த வநுபூதிஞானநிலை யமைந்தவெங்க, டெய்வவுருக்குருபரனை திலக்கணத்தின் மேற்புலமை திகழவோதிக், கைவருநெல்லிக்கனிபோற் கருணைபுரியுருமலையிற் கந்தவேண்முன், சைவர்முதலோர்சூழ விருந்தரங்கேற்றிடல்பலர்க்குஞ் சாற்றினால். (க0சு)

அப்போது தெரிந்துலகிற் பலர்மகிழ்ந்தாங்கடைந்தனருள் ளழுக்காறெய்தி, மைப்போலு மனமுறுஞ்சில் கவிஞர்நெல்லைப்பதியினுள்ளார் வருங்கேள்விக்குச், செப்போர்மையுடன்சபையிற் செல்லுகவென்றொருவனிடஞ் செலுத்துமோலை, கைப்போதில்வரவுணர்ந்து கருத்தில்வியந்தொருகவிதை கழறியுய்த்தார். (க0எ)

ஓதுவாரெனுஞ்சிறப்புங் கவிராயப்பட்டமுங்கொண் டுளதையெண்ணி, வாதுபாடத்துணிந்து வரவேண்டாம் வருவீரேல் வண்ணப்பாட்டு, காதுதான் வேண்டுமென்று கடிக்கவருமிதுநிசமெங் கந்தநாதன், றீதுதீர் வேற்கரத்தன் முழுதுணர்ந்த புலவனெனுஞ் †செய்யுளஃதே. (க0அ)

அதுதெரிந்துள்ளிறுமாப்பற் றச்சமுநாணமும்பொருந்தி யறுமுகேசன், சதுர்வேதப்பிரமனழப் புடைத்தவன்கண் ணருளுளதாற் றூழானென்னப், பொதுஞாயக் குணமுடனன் குருமலைவேலவன்சபையிற் புகன்றநூலை, மதுவாரியருந்துமளி யினமெனக்கேட் டடிவணங்கி மகிழ்ந்தார்மன்னோ. (க0கூ)

வேறு

முற்பிறப்புணர்தல்.

தண்டமிழ்ப்பொதி யையிலிருந்திறங்குறு தாம்பிரவன்னிப்பேர், கொண்டமாநதி யிடைதிகழுருமலைக் கோயிலிற் சிலகாலந், தொண்டமைந்தமெய்த் தவம்புரிந்திருந்தனர் சுடரயிற்குமரேச, னெண்டருந்திருக் கனவினில் வீரனின் றிருகைகூப்பிடுமாறே. (கக0)

---

† ஓதுவார்கவிராயரெனும் பெயரேமலையிலக்கென் றுன்னி வாழ்வீர்
வாதுபாடத்துணிந்து வரவேண்டாம் வருவீரேல் வண்ணப்பாட்டு
காதுதான் வேண்டுமென்று கடிக்கவருமிது பழமைகண்டீரெங்கண்
மோதும்வேற்குரு பரன்றன்முழுதுணர்ந்த புலவனெனுமொழி
பொய்யாதே.

நீறுபூசிய பவளமேனியுமணி நிலவுகண்டிகைகாவி
யேறுதானையுஞ் சிகையுமார்தரவினி திருந்தன னதுகண்டு
மாறுதீரவன் றுடைமிசையிருந்திரு வண்கைதோண் மிசைகோத்தே
மீறுநெஞ்சுவப் புடனென்முற்பிறப்பினை விளம்புகென் றிரந்தாரே.()

அதுதெரிந்துபுன் முறுவலோ டவனம தருணகிரியென்றிட்டான்
பொதுவதாங்கதி யடைந்தன னெனப்பலர் புகல்கின்றூரேயென்றூர்
கதுமெனுவதட் டியப்படித்தானெனக் கழறினன் றுயினீங்கி
யிதுகுகன்றிருக் கிருபையென்றெண்ணியங் கிருந்தன ரதுவன்றி. ()

மற்றிரண்டுமூன் றருட்கன விடைசெந்தூர் மறையவனெனச் செவ்வே, ஞூற்றிவாசகம் புகன்றனன் பின்னூர்நா ளூணும்படி சிற் றுண்டி, பற்றிவந்தளித் தனன்சிறிதெடுத்துணும் பண்புகண்டொரு வன்றூன், றிற்றிநன்கெடுத் தருந்துகென்றலுங்குகன் சிறுகிளி யிவ் வாறே. (கக௩)

அருணையிற்சகத்திரதீப மியற்றல்.

உண்ணுமென்றன னிப்படிப் பலவிசை யுரைத்தனன் சிலநாட்போய்
நண்ணுசீர்த்திரு வருணையிற்சென்றவ ணளிர்பொழி லீசானத்
துண்ணிகழ்ந்திடு மடத்திருந்தருந்தவ முளுற்றினர் குகப்பெம்மா
னெண்ணுசிந்தையின் கனவினஞ்சிகரிவா யெய்துக வென்றூனே. ()

அந்தவேளைவல் லாளமன்னவனுமங் கவிர்ந்தன னுவந்தாங்கே
வந்தருட்குகன் றிருவருட்சிகரியின் மறுதினமேசென்று
கந்தநாதனை வணங்கிமுன் மறைத்துள கனசுவ ரிடித்தன்பாற்
செந்தமிழ்த்தொடை *சகத்திரதீபமென் றூயிரங்கவி செப்பி. (கக௫)

தனதுகையிடை வைத்தருச் சனைசெயுஞ் சத்திவேற்படைசாத்தி
மனவிருப்புடன் பூசனையாதிய வண்மைக ணடப்பித்தா
ரனகமெய்யநு பூதிகளனந்தமிவ் வகிலமோர்தரு மாடற்
கனமளித்தரு ளென்றிரந்திருந்தனர் கனவிலோர் நாளூடே. (கக௬)

---

* சகத்திரதீபம் ஒரு பிரபந்தம்.
சோறிட்டகையினர் வாழருணைபுரித் தொல்சிகரிக்
கூறிட்டதான வடபாதிக்கோயிற் குருபரனே
சீறிட்டவாவற் குலமோடவாயிரந் தீபம்வைப்பா
னீறிட்டமேனியுந் தண்டமுந் தோன்றமுன் னின்றருளே.

முருகன் பொய்பல மொழிபவன் றந்தைபோன் முதிர் கொடைக் குணமில்லான், பெருகுலோபமுற் றவனெனச்சினத்து டன் பேசினாதுவேளை, யருகிலோர்சிறு மைந்தனைந்தாண்டின னதிக மண்புரண்மேனி, யிருகணீர்சொரிந் திடவழுதேங்கல்கண் டேனென விவர்கேட்டார். (கசஎ)

தெய்வநிந்தைகேட் டுளம்பொருதென்றனன் செப்பரும் வியப் பெய்தி, நைவடைந்தநீ யாரெனச் சலிப்புட ஞன்முருகன்றனென், மெய்வருத்துரைத் தருளுருக்கரந்தனன் வெற்பின்மேற் சிலகாலம், பொய்வறந்திடத் தருதவமியற்றினர் புகலொர்நா ளிரவின்கண். ()

ஆலயத்தினுக் கிறங்கிவந்தன்னமுண் டச்சிகரியிற்றங்கி
யேலவைகறை யெழுந்துவெற்பேறின ரெறும்பிருபுலிவந்து
சாலவேபடுத் துலவியசுவடுதாந் தங்கிடத் துறல்கண்டு
வேலனீங்குறு தழைத்தளித்தனமை யென்றுளம் வியந்தாரே. ()

கழுகுமலையடைதல்.

அதன்பினிவ்வகி லத்தினரறியமெய் யருளளித் திலனென்னக், கதங்கொடோர்*கவி யுரைத்தணிப் பாண்டியின் கழுகுமா மலை சேர்ந்து, சதங்கைதோய்கழற் குமரன்மேன்மூவிரு தமிழ்த்தொடை வனைந்துற்றார், விதங்களாயிர மாந்திருக்காதையில் விளம்புவேன் சில வாறே. (கஉ0)

அந்தவெற்பின்மே லொருபிராமணத்தவ னறுமுகக்குகனன்பால்
வந்தமைந்துகீ ழிறங்கிடா நியமமும் வைத்தருந்தவஞ்செய்தான்
சொந்தமாமுடற் சூடுறுதொளிர்தரச் சுகமுறுபனங்கற்கண் [போய்
டெந்தவாற்றினு லோவழைத்துண்டிருந் தனன்குகனவன்பாற்

மலையின்கீழடி வாரத்திற் கவிபுகல் வாய்கொளு மொருவன் றான், விலையிலாமணி யுறழ்கவிப் பனுவலென் மீது பாடுவதானுன், கலைஞனுமவன் முன்பருணகிரியாக் கவின்றவ னவன்பாடு, மலைவினு லுடல் வெதும்பிடா வணங்கற்கண் டவற்கொர்சற் றுதவென்றுன்.()

---

* கோதுபடாத் தென்னருணைக் கோபுரத்துவேளுறவு
போதும் போதும் போதும் போதுமே—வாதுசெயும்
பொல்லார் பகையும் பொடிப்புநோ யுங்கொடுத்தா
னல்லானு னுற்பார்க்கலாம்.

அதுவினுவியன் னவன்பிரா மணர்களஃ தருந்தல்கூடா தால்யா, னிதுகொடுத்தனுப் புவதெவர் வசத்திலென் றிடைந்துபின் குகவேள்பான், மதுரவாய்த்தமிழ்ப் புலவனுமவனிங்கு வரிற்கொடுக் குவ லென்று, னுவலுமத்தின மிவரவற் கண்டிடு நோக்கமெய் துபு சென்றூர். (கஉங)

கண்டனேன்வியந் தியன்றதன் னநுபவங் கழறியப்பனங்கற் கண், டொண்டகக் கொடுத் தனன்களிப்புடனதை யொப்பியேற்றி வர்தம்மு, ளண்டர்போற்றுதங் குமானுட் டினவியந் தடியில்வந் தருளாகுர், தண்டமிழ்த்துதி சொலிமுடித் திருந்தனர் சாற்றுமச் சமயத்தில். (கஉச)

அங்குபெண்மக ளொருத்திபேய்ப் பிடிப்பினு லதிதுயர் கொடு சோர்ந்தா, டங்குமன்னவட் சார்ந்தவர் வந்திவர் தமையடி பணிந் தேத்திப், பொங்குமித்துயர் தீரென வேண்டலாற் புனிதநீ றெடுத் திட்டார், வெங்குரோதமுற் றந்தவன் பேயுன்போல் வேலனன் புளன்யானும். (கஉரு)

சிறியபேயின மெனவெளி தகன்றிடே னென்றது சினமீறிக், குறிகொளும்பிரம் பாலடித்தனருடன் குலைந்தகன் றதுபின்பின், னறியவந்துவந் தலைத்தது குமரனீ தகன்றிட லரிதென்று, னறிய செந்தமிழ்ப் பனுவல்க ளாறையு நனிசினந் தெடுத்தாரால். (கஉசு)

எடுத்த வேட்டினைக் கிழித்தவூரினிலகி லாண்டப்பேரிசை வாவி, நடுப்புகச்சொரிந் தனர்சிலோர்வருந்தினர் நருக்கிவெந்திடு மீன்கள், வடுப்படாதுயிர்த் தெழக்குகன் செயன்மெயேல் வரப் பெறலாமென்றிட், டடுத்துநெல்லையூர்க் கேகியுற் றருந்தவ மாற்றி வாழ்ந்தனர் மாதோ. (கஉஎ)

வேறு.

காரணமுரைத்தல்.

அப்படியாங் காலத்தோர் கனவி லோர்தூ
  தவிர்ந்துரிமைச் சாமிவந்துள் ளானுன்றன்னைச்
செப்பமுற வழைத்தனனென் றுனு ரென்னச்
  சீரியவேற் கந்தனென்றுன் சென்றுகாணி

லொப்பறுநற் சிவிகையொன்று கபாடமூடி
 யுற்றதிதுள் ளுளனென்று னுடன் கீழ்வீழ்ந்து
தப்பறக்கும் பிட்டனருள் ளிருப்போ னன்பாற்
 சாத்துகபா டந்திறந்து சாற்றுகின்றான். (கஉஅ)

நீயொருகா ரணத்தாலிவ் வுலகில்வந்து
 நேர்ந்துள்ளா யெனமூன்று முறைசொற் றிட்டான்
றூயொருகோ டியுமொவ்வாக் குக னிவ்வாறு
 சாற்றிடல்கேட் டலு மறைந்து பாதசாரி
யர்யொளிரக் கண்டுனையெங் குமரனென்ன
 வறிந்துள்ளே னெனதுமனத் தமைந்தகோல
மேயவிளங் குதியென்னச் சினந்துசொல்லு
 மேல்வையிற்சாக் கிரமுநித்த திதையமஞ்சி. (கஉகூ)

திருநீற்றை யெடுத்தணிந்தா றெழுத்தை யோதித்
 தியானமுஞ்செய் தனரதன்பி னொருநா ணெஞ்சிற்
பெருமாண்கொள் குகன்றாதென் றொருவன் வந்தான்
 பிழைதவிர்சண் முகனுனையிப் பெருநீர்ப்பாரி
லொருமாயோ னெனவாழப் புரந்து வானி
 னுமாபதிபோல் விளங்கவைப்ப துறுதியென்றான்
பொருவாவின் னவவீரர்குழுவிற் றுன்முன்
 புகல்வீர வாகுவென்றும் புகன்றான் மாதோ. (கநூ0)

ஒருநாளி லவசரத்தா விருளிராவி
 லோடும்போ தொருகருங்கற் றூணின்மோதித்
திருவார்நெற் றியினுமுழந் தாளி னூடுஞ்
 செந்நீர்சிந் திடவருந்தித் திகைத்துற்றான்
றருள்வேலன் கனவிலொரு பணவனுவந்
 தரைத்திடுபச் சிலேச்சாந்து மவுடதங்கொ
ளொரு தேங்காய்ச் சிரட்டையுங்கொண் டிதனை யுட்கொண்
 டுன்காயத் தினுமிடென வுரைத்தீந்தானே. (கநூக)

வருமவன்ற னுடலினுமக் கோரங் கண்டு
 மற்றிதென்னென் றிவர் வினவ வந்தோன்யானு
மிருளிடைகற் றூணின்முட்டிக் கொண்டேனீதே
 யிட்டனனென் றுடன்மறைந்தா னிதுபோலவ்வத்

தருணமியன் றிடும்விளையாட் டனைத்து மோர்ந்து
சாற்றிடல்வா ரிதிப்புனலை யளந்து கையி
லொருவிரலு மில்லாதா னிவள வென்ன
வுரைக்கமுயன் றிடுமதனை யொக்கு மன்றே. (கஙஉ)

கனவிற்பொதியை சேர்தல்.

மற்றொருநாட் கனவிலெழிற் பொதியைமீது
வாய்ந்துளதோர் மண்டபத்தில் வலியச்சென்று
பற்றகன்ற முனிவர்பல கோடி கோடி
பரிந்துதவ மியற்றுகுழு நடுவி னின்றே
சற்றுமனத் திரக்கமிலீர் புவியிற் றோன்றித்
தவம்புரிந்திப் பேறடைதன் மறந்துள் ளீரோ
முற்றுமற மழிந்துபவ மலிந்து நல்லோர்
மொழிவருந்துன் படைந்தழுதன் முன்னிலீரே. (கஙங)

தீங்குசெயுங் கொடியோருக் குள்ளமஞ்சித்
திகைத்தீரோ நுங்குழுவிற் சிந்தைத்தீர
மோங்குறுமெய் வீரனொரு வனுமின் றேவென்
றுரத்தகுர லாலனந்த விதம்வினவ
வாங்குறைவோ ரெழுதுசித்தி ரங்கள் போல
வணுவுமசை யாதுபதி லறையாதுற்றார்
தேங்குவளை வயற்றிருநெல் வேலி யூரிற்
றிடரெனவந் திவர்பொதியை நோக்கி நின்றார். (கஙச)

அப்போதோர் முனிவனெதிர் தோன்றிக் கையா
லரியபன்னீ ரிலைத்திருநீ றள்ளி யீந்து
செப்போர்மாற் றமுநவிலா துருமறைந்தான்
றிகழுமவன் குறுமுனிவ னெனப்பின் றேர்ந்தார்
தப்போதும் பகைவன்முத் துக் கிருட்டிணன்றன்
றனிவீடங் கெதிர்விளங்குந் தருணத்தொன்றை
யிப்போதே யிவனழியப் போடு வோமென்
றெண்ணியிந்தப் பிரசாதத் தினைவீணாக. (கஙரு)

நனவிற் போதியை சேர்தல்.

செலவிடுதல் கூடாது முருகன் றேன்றித்
 திருவருட்பே றுதவியபின் றிகழு நந்தம்
பலவடியார் குழுவிலொரு வணக்கொண் டேயப்
 படிநடத்த வேண்டுமெனக் கருதிச்சென்று
ரிலகுநனவுதித்ததுகண் டுவகை துன்ப
 மிரண்டு மடைந்தனர்சிலநாள் கடந்தக்குன்றி
னலமுறுசாக்கிரத்திநெடுந் தூரமேகி
 ஞாயமாஞ் சிலமாற்ற நவிலலானுர். (கசுசு)

பலமுறவே யாணைமொழிந் தருள்சேர் சித்தர்
 பலரிவணுள் ளாரென்னப் பகர்தன் மெய்யே
லிலகொருவனேனுமென்முன் னவிர்ந்து கேள்விக்
 கேற்றபதில்கூறுமினென் றிசைத்தார் யாருங்
குலவிலர்வாய் மொழிமறைந்துஞ் சொல்லவில்லை
 கொலைபுலையற் றுலகினர்வாழ் வுறவே யெண்ணு
நலமுடன்பூ மியிலிறங்கித் தமிழினுலே
 நாடுசித்தாந்தாதி நவின்றூர் மன்னே. (கசுஎ)

குறுமுனிவன் மீதினுமந் தாதி யொன்று
 கூறியருட் பேறிலகாக் குறையை நாடி
மறுகியழலிடைகிழித்துப் போட்டார் செவ்வேள்
 வந்தவிர்ந்தாற் பின்பலரும் வருவாரின்றேற்
சிறுமையொழி யாதெனமெய்த் தவமே செய்து
 செந்தமிழ்மாரியும்பொழிந்து திகழ்ந்தார்பின்னு
மிறுதியுறப் பசுமுதற்ப லுயிர்கட்கொன்றுண்
 டிறுமாப்போர் பெருமகிழ்வோ டிலங்குந் தீங்கும். (கசுஅ)

சருவபிரசாதம் பேறல்.

கொல்லாமை வருத்தாமை யூனுண்ணுமை
 குணமிகுசத் தியமுடையோர் குலேந்துவாடி
யில்லாமை யெனும்பிணியிற் சுழலுமாறு
 மெப்படிக்கண் டிருப்பேனென் றிதயம்புண்ணுய்

வல்லார்சூழ் பொதியைவரைக் குகையிலேகி
வடதிசைநோக் குபுதவத்தில் வாய்ந்தவேளை
யெல்லாருங் காணவுரைத் திடநினைக்க
வியலாவற் புதக்காட்சி யியன்றதம்மா. (கங௬)

தூலவெளி யேயண்ட வெளியதாகிச்
சுடர்மதிதா ரகையினமுந் தொடுகாராழி
ஞாலமும்பற் பலமலையு நவில்வயாவு
நன்குவிளங் கினவதன்றி நாடுந்தாமுஞ்
சாலவிளங் கினர்முருக னன்பும்வீரத்
தன்மையுமிக் குண்டாகித் தனிவெற்பேறி
யேலவுருண் டுங்குகனேர் வந்திலானு
லினியுயிர்விட் டிடுவேனென் றிசைத்துச்சென்றார். (கச0)

செலும்போதா காயமதிற் கருடனென்று
சிகியெனச்சூட் டுடன்பறந்து வட்டமிட்டு
நலந்தோய வொருவிதமா யோசைகாட்ட
நாடினரீ தயன்சிருட்டி யன்றுமேலோர்
சொலும்பரம வெளியினது பூதியென்று
தொழுதனரவ் வுருமாறித் தொடுஞ்செவ்வேல்கை
யொளுங்கோலக் குருவாகி வட்டமிட்டா
னுவகையுடன் மனங்குழைவுற் றேதலானுர். (கசக)

மண்டலத்தில் வந்தருள வேண்டுமென்ன
வழுத்தினரவ் வாறருகில் வந்துநின்று
கொண்டவிருப் பியாதுனக்கென் றனனஃதுள்ளங்
குறிக்குமுனஞ் சருவபிர சாதமென்ன
வெண்டகைப்பா ரதிவாய்நின் றுரைத்தாள்பச்சை
விளங்குபன்னீ ரிலையில்வைத்த வெள்ளைநீற்றை
யண்டர்வியந் திடவளித்து மறைந்தானந்தோ
வதன்புகழ்சே டனும்விளம்பற் கடங்காதம்மா. (கசஉ)

அக்காட்சி முடிந்துநன வுதித்தவாறு
மதன்பினடந் துளதொடர்பு மறியேனெங்கண்
மெய்க்காட்சிக் குருபரன்சொல் காவியத்தும்
விளம்பவில்லை சருவபிர சாதம்பெற்றுத்

திக்காட்சி யினர்பதமும் வெறுத்துமேலாந்
திருவருண்ஞா னநுபவஞ் சேர்ந்தபின்ன
ரிக்காட்சி யுலகநடைக் கவர்வந்தில்லா
ரியன்றதருள் விளையாட்டென் றியம்பலாமே. (கசங)

குருமகிமை யுணர்தல்.

அதன்பினொரு நாள்புவியிற் குமரன்கைவே
லதைநிறுத்திப் பலவிதமா மபிடேகங்கள்
விதம்படுபன் மாலைவகை யலங்காரங்கண்
மிகுந்தநிவே தனங்கள்வைத்துப் பூசைசெய்து
சுதந்தரமற் றிளைப்புடனுற் றிடும்போது
தூவெளியிற் கதிர்வேல்கை துலங்கவாசப்
பதங்களிற்பா துகைசிரத்திற் சடிலமேனி
பரந்தவெண்ணீ றக்கமுடன் குரவனின்றான். (கசச)

மனமகிழ்ந்து வணங்கியென்னோ டிருக்கவிங்கு
வருகவென வழைத்தனர்மா நிலத்துட்காரி
லெனதுபுகழ் மங்குமென்று னனதுசீர்த்தி
யாதென்றார் குருவெனப்ப வுருவங்காட்டி
யனகவிளை யாடல்புரிந் திடலுஞ்சொல்லற்
கமையாநிட் களபரமா மதுவுமென்றான்
வினவியுயிர்க் கொலைபுரிதீ மதத்தர்போற்றும்
வெறுங்குரவர் களுநீதான் கொல்லோவன்றி. (கசரு)

கனகசபைப் பரனடிநாட் டனதுநெற்றிக்
கண்வழிதந் தவனெனச்சொல் கதைமெய்யன்றோ
வெனவினவ வெனையலதோர் பொருளின்றென்று
னிவர்சதுர்மா மறைநெறியோ ரியம்புமாறு
கனவடிவங் காட்டுகென்றார் சிறிதுநக்குக்
கண்டவுன்சிற் றறிவளவி லுரைத்தாயென்றிட்
டினமறைபல் கோடியுள வவையெல்லாமு
மிசைந்தபொது வெளியாய்நீ யிசைத்தவாறு. (கசசு)

அறுசமய மூர்த்தியுமா யெங்கேயாவ
 ரறைந்திடு மெம்மூர்த்தியுமா மாற்றஞேன்ற
வுறுமுனது வடிவமுங்காட் டுவன்பாரென்று
 னுடன்புகைபோன் மறைந்தேழ்பைம் புரவித்தேர்மேன்
மறுவில்கதி ரவஞகி விடைமேற்கையின்
 மழுமான்வைத் தாஞகி மடங்கன்மீது
சிறுமயில்போற் பரையாகிக் கருடன்மீது
 திருமாலா யாகுவிலங் கரனுமாகி. (கசஎ)

நீலமயிற் பரிமீது முகங்களாறு
 நிறைபுயமா றிரண்டுமுற நெடுவேலேந்துங்
கோலமுடைக் குகஞகி யிந்தவேடங்
 கொளும்பல்பிற வியினீயுட் குறித்ததாகுஞ்
சாலவிதிற் றிகழ்முகங்க ளாறும்வேதஞ்
 சாற்றுமறு சமயவகைச் சகளமாகும்
போலநிட்க ளத்தினுமிப் பண்புகாட்டும்
 புகறிசையா றேமுகங்கள் புயமுந்நான்கு. (கசஅ)

அகச்சமயம் புறச்சமய மென்னப்பேசு
 மாறிரண்டு மெனலாகு மரன்வேதாமுன்
றகப்பகர்ந்த நூலிரண்டும் பதங்களாகச்
 சாருமெனை யன்றியொரு தலைவனின்று
மிகப்பலதே வென்றெனையே புராணக்கூட்டம்
 விளம்புதல்பொய் யன்றுமுழு மெய்யுமன்றே
யுகப்பமக வினுக்கனையாள் சொல்லித்தேற்று
 முரைபோலும் பக்குவமொத் தொளிருமன்றே. (கசகூ)

முன்னைமா தவத்தினருந் தேவர்தாமு
 மொழிந்தபல நாமமன்றி மொழிகிலாவா
யுன்னையா களித்தினனென் பதுமுன்ஞுக
 வோதரும்பல் கோடிபெய ருள்ளவென்று
தன்னைநேர் கருணையினூற் புகன்றக்கோலந்
 தனைமறைத்திட் டிவருருவஞ் சார்ந்துநின்றிட்
டுன்னையான் காத்தருளீ குவன்வருந்தே
 லுறுதியென மார்புதட்டி யொளித்தான்மாதோ. (கரு௦)

இந்தவுண்மை சிற்சிலநூ லுணர்ச்சிகொண்டிங்
  கிரவுபகல் வாதமிடு மிளைஞர்தேரார்
சொந்தமுறு மனிதவடி வாகிப்பாரிற்
  றோன்றுகுர வன்பகர்சொற் றுணையாப்பற்றி
யெந்தவித மூர்த்தியையா னூலுநாடி
  யிருளறமெய்த் தவம்புரிவோ ரினிதாக்கொள்வார்
சந்தமறை யாகமங்க ளனைத்தின்மேலாந்
  தனிக்கவுமா ரத்தினுண்மைச் சாரமீதே. (௧௫௧)

கவுமார மென்பதுடற் பருவத்தோன்றுங்
  கழறுவதுண் டறுசமயக் கணக்கிலொன்றாய்ப்
பவுராணி கப்புலவோர் பகர்வாரந்தப்
  பகுப்பிரண்டு மன்றிங்கே புகன்றவாய்மை
சவுபான மெனவதனைத் தாண்டிமேற்போய்ச்
  சகதேகப் பற்றறுமெய்த் தவமார்க்கத்தை
மவுனக ரக்குறியா லுரையாற்காட்ட
  வந்தவனே பரத்தினருட் குமாரனென்றும். (௧௫௨)

அருவமா யமைந்திடின்மெய்ப் பரமாமென்று
  மதுவேநல் லுருவமெய்திற் குமாரனென்றும்
பொருவருமெய்ப் பரமேநற் குருவென்றாலும்
  புகலுமதன் குமாரனெனல் பொருத்தமென்றுங்
கருவிலுடற் கொடுவருமோர் குரவன்றன்னைக்
  கருத்திலருட் பரமெனக்கொள் கடமையாளர்க்
கிருமையுந்தாண் டியபரமப் படிவமாவந்
  திலங்குமென்றுங் கவுமார ரிசைப்பார்தாமே. (௧௫௩)

குமாரனையே தெய்வமென்றுங் குரவனென்றுங்
  கூறுவது கவுமாரக் கொள்கையாகுஞ்
சமானமிலா வெமதுகுரு நாதன்கண்டு
  சாற்றியகௌ மாரமுறைத் தனிவேதத்தி
லுமாபதியோ தியவேதத் துச்சியான
  வுரியபொருட் டெளிவனைத்து மொளிருமன்றி
யெமாசையினு லெடுத்திதனிற் றெரிக்கநாடி
  லெறும்புகடற் புனனீந்தற் கெண்ணல்போன்மே. (௧௫௪)

வேறு.

திருச்சேந்தி லடைதல்.

கந்தன்வாழ்தலங்கள் பலவினுஞ்சிறந்த கடற்கரைச்செந்திலம் பதியிற், சொந்தமாமுரித்துற் றெத்தனைதரமோ துன்னிவாழ்த் தெடுத்தனரவ்வா, றிந்தமாதவரோர் தடவைபோமுதனு ளிரவினின் முருகனவ்வூரிற், செந்தலைகயுறுகோ விந்தவேதியன்றன் கனவினி லிவர்வரற்றெரித்தான். (கருரு)

மற்றைநாட்காலை யிவரைநேர்கண்டு மகிழ்ந்துவேலவனென்பா னுரைத்தாங், கிற்றைநீயடைந்த தருட்செயலென்று ளியாவருமின்ப மிக்கடைந்தார், பிற்றையோர்தினத்தி லிவர்கவித்திரளைப் பிழையில் கோவிந்தைய னன்பாற், கற்றறிந்தோதித் துதிக்குதறகுமோ யாமெனக்கருத்திலையுற்று. (கருசு)

சிலதினங்கழித்தா னவனிடமுருகன் றிகழ்ந்துநங்குறுமுனி யனையான், பலவிதங்கருதே லென்றனன்பயந்து பகர்ந்துபெற்றே திடலானுன், குலவுமோர்தடவை யங்குசென்றிடுங்காற் குமரன்வந் தருந்தமிழ்ப்பனுவ, னலமுறப்பதினு றுரைத்திடுவாயே னவில்பன் னென்றுயநூன்முடிவில். (கருஎ)

கந்தலோகத்தி லுளதிருநீறுங் கண்டியுமளிப்பனென்றுரைத்தா, னந்தணெல்லையிற்போய்த் தொடங்கியையிரண்டு மானபின்கந்த மாலிகைசொற், றுந்தவாவுடனேற் றிருந்தனரவ்வா றுதவிலனென மனச்சினங்கொண், டந்தநூன்முழுதுந் தாம்பிரவன்னி யாற்றிடை கிழித்தெறிந்தனரால். (கருஅ)

மற்றோர்நாட்கனவிற் குகன்றிகழ்ந்தருணை வருங்கிளிப்புலவனு யுறுநாள், செற்றமிக்கலைவா ரியிலிடுமேடுஞ் சேர்த்துதவுவமென்றுன் மகிழ்ந்து, குற்றமிலருட்செந் தூர்க்கடற்றுறையாங் குளிர்வதனாவிந் தத்தி, லுற்றறைந்திடுமா றுதவெனவிரந்தா ருதவிலான்குகன்வறி திருந்தான். (கருகூ)

ஆதலான்மனநொந் தருந்தமிழ்க்கவிக ளமைந்தவேட்டினைமணி வடத்தைப், பாதகமகற்றுந் திருவெணிறடைத்த பையினைத்தண் டினைவேலை, யோதநீரிடைவிட் டெறிந்தடியவர்தா ளுதிர்துகள ணிந்துமற்றெல்லாம், வேதமாமுனிசொல் வித்தையின்றிறமே மெய் யெனச்சூளுரைவிளம்பி. (கசுo)

தெய்வமுண்டென்போ ரனைவர்க்கும்பொதுவாத் திகழ்ந்தனர் நெல்லையூரடைந்தார், மெய்வளர்மனத்தின் கனவினிற்குமரன் விளம்பு சட்சமயவேடமுங்கொண், டுய்வழியடியார்க் கருளெனவுரைத்தா னுகந்தவாறனந்தநூலுரைத்துச், சைவநீற்றொடுமண் சிந்துரமாதி தமதுடற்புறத்தினிற்றரித்தார். (௧௯௧)

சமயவாதனைதீர் சமரசஞானஞ் சார்ந்தவர்சிலாதன்செருக் கால், விமலநிட்களமே நிசமிவையாவும் வெறும்பிழையென்னமிக் கிகழ்ந்தார், கமலநான்முகன்சொல் வேதமாதியநூல் கழறுதேவ னைத்துமாயாகா, வமலமெய்ப்பரமென் றறிந்தவற்றினைத்தம் மங்க மாத்தழுவினரிவரே. (௧௯௨)

வண்ணத்தியல்புநூ லரங்கேற்றல்.

அப்படிச்சிலநாள் போய்வடதிசைநோக் கடைந்துதென்பரங் கிரியதனிற், செப்பணிமுலைக்குஞ் சரியைவேட்டணைந்த சிவகுரு பரன்றிருமுன்பின், முப்பழச்சாறே யனையசெந்தமிழின் முதன்மை வண்ணத்திலக்கணத்தைத், தப்பறப்பலமா தவத்தினர்வினவத் தாம ரங்கேற்றினர்மன்னோ. (௧௯௩)

அச்சபையதனிற் சோழவந்தானூ ரமர்ந்திடுகந்தசாமிப்பேர்ப், பொச்சமின்முனிவன் மகிழ்ந்திவர்க்குறவாப் பொருந்தினனங்கிருந் தறிஞர், மிச்சமாங்தொண்டை நாட்டினுட்கூட லூரிலோர்வீட்டி டைவடலூர், மெச்சருட்குரிசி லிராமலிங்கப்பேர் மேலவன்றன்னை நேர்கண்டார். (௧௯௪)

வடலூராரைச் சந்தித்தல்.

கண்டுமிக்குறவா யநுபவத்திரங்கள் கலந்துபேசுபுமிகக்களித் திட், டொண்டுவர்க்கிரிநேர் குகனவன்றுரு மானவனெனவிவருளத் தில், விண்டுளவாற்றை யவனிடங்கூறி வினவினரவன்மிகவியந்துட், கொண்டுதன்வாயா லிருக்கலாமென்னக் கூறினனவ்விருவோரும். ()

தன்னலந்தாழ்த்தித் தாரணிவாழுந் தனிநலமுயர்த்திடுந்த வஞ்சே, ருன்னதக்கருணை யுடையாராலவர்தம் முரிமையாருரைத் திடவல்லா, ரின்னவாறியலுஞ் சிலதினத்திவர்தா மியப்பும்வண்ணத் திலக்கணத்தை, யன்னவன்வினவிக் களித்தொர்சூத்திரத்தி லைய முற்றிவரிடமிசைப்பான். (௧௯௬)

இடையினத்தொற்றோ டுறழுமாய்தமெனா வியம்பியதியாது காரணமோ, விடையுரைத்திடுகென் றனனதற்கிவர்முன் விதித்த தொல்காப்பியர்தாமு, மடைவுறவிதனை விரித்திலர்யானே யறுமுகக் குகன்றிருவருளாற், றடையறவிதனில் விதித்துளேன்வண்ணத் தமிழ்ப்புலவோரதுதெரிவார். (கசுஎ)

என்றலுஞ்சிறிது மனங்கடுத்தியானெண் ணிடிலொருநூறு வண்ணங்கட், கன்றவென்காலாற் றேய்ப்பனென்றனனுட் கனன் றிவர்சிறுநகைகாட்ட, வன்றதன்குறிப்பை யறிந்தனோனுன்ற னருந்தமிழ்க்குருகிடாவறிஞ, ரின்றகிலத்தியா னதைவெறுத்து ரைக்கி லென்கவிப்புலமையென்னாமே. (கசுஅ)

ஆதலானுன்ற னுளத்தபிமான மமைந்தவாற்றினையிகழ்ந்து ரைத்து, வாதனைச்சினமுன் னுளத்தினிலுளதோ வெனத்தெரிந்தே னெனவகுத்தா, னோதலென்னிடமேன் றிருவருளறிய வுரைத்தி யென்றனரதோடந்த, வாதமற்றருநீர்ப் பிளவெனக்கலந்து மகிழ்ந்து சின்னாளிருந்தப்பால். (கசுகூ)

திருவயிந்திரபுர மடைதல்.

அந்நகர்விடுத்தே யயிந்திரபுரத்தை யடைந்துநாரணன்றிருத் தளியின், மன்னனையவர்சிற் சிலர்தமைச்சூழ வணங்கினரந்நகர்மறை யோர், நன்னலத்திருநீ றுடன்முழுதணிந்து நவிலிருவகைத்திரு நாமந், துன்னவேயிருதோ ளினிலணியிவர்தந் துணிவுகண்டுள மிகத்துளங்கி. (கஎo)

பலரொருமுகமாத் திரண்டுவந்திவரைப் பார்த்துநீயெம்வட கலையை, யிலகிடத்தோளி லணிந்ததேனென்று ரிவரவர்ப்பார்த்து நும்மனத்திற், குலவும்வெண்ணீற்றி லதிகந்தென்கலைமேற் கொண்ட கோபந்திகழ்ந்ததுநீ, றலகறப்புனைந்தே யதன்மிசைதிருமண் ணணிந் ததேனென்று நெற்றியினில். (கஎக)

அணிந்திடாவிதமென் னென்றுங்கேட்டறியா ததுவினவுற்றதா லென்றார், துணிந்ததுமுரைத்தி யென்றனருமக்குத் துங்கநாரண னவதாரந், தணிந்திடாவொருபத் தினுமபிமானஞ் சமப்படத் திகழ்தல்போலெனக்குப், பணிந்தசண்மதமுஞ் சமமதாலவ்வப் பண்புமேற்றணிந்துளேனென்றும். (கஎஉ)

சமத்துவத்திரண்டு கலையிலொன்றிணையென் றன்முகத்தணிந் தரையாகேன், றமக்குணத்தினதொன் றெனிற்கெடுமந்நா டரிப்பதற் குள்ளமொல்கலுறேன், சுமக்குமாநிலத்திற் கிழக்கு நோக்கிடிற்றென் ளுேளிற்றென்கலையணிந்ததுவு, நமக்குரித்தாய வடகலைவலக்கை யாலிடுமகிமையுநோக்கிர். (கஎங)

என்றுந்தென்கலையிற் பிரியமுற்றுளநா னிடக்கையில் வடகலை யணிந்தாங், கொன்றுந்தென்கலையைப் புனைதகையுமக்கிங் குளது கொலென்னவுங் கேட்டார், வன்றுங்கமாயை கடந்தமேதகுரா மாநு சப்பெரியனங்கெய்தி, யின்றுங்களெதிரித் தவன்வரலாலே யெளிய னென்றெண்ணுதறகாதே. (கஎச)

அண்டகோடிகளெல் லாந்தனதுருவி லடங்கவப்பாற்பரந்தவி ருங், கொண்டன்மேனியனே யாவுமென்றறிந்த குருகைமாமுனி வனையனையான், கண்டவாறதிக வாதமிட்டிடல்வீண் காரியமென்ற னன்பலரு, மெண்டகவியந்து புகழ்ந்தனர்பதிக மிசைத்தரங்கேற்றி யங்ககன்றூர். (கஎரு)

வேறு

நான்குநூ லரங்கேற்றல்.

பரவுபொதுநூல்சிறப்பு நூறிருவெண்பாவுடன்விற் பனமென் னும்பேர், விரவுமொருநான்குநூ லியற்றியருளாட்சியொன்றும் விளம்பிவேத, மரபின்வழியனந்தவகை யுறவியற்றுமவற்றையருள் வளமைசான்ற, விரதநெறியினர்பணிதில் லையின்சபையிலரங்கேற்றி விளக்கினரே. (கஎசு)

வள்ளுவனுர்வாய்மலர்ந்த மறைமகளைவள்ளிதரு மகனுமின்னுன், கொள்ளுமுறையான்மணந்து குலவுமைந்துநூன்மகளிர்க் கொடுத் தானஃதால், விள்ளுமுயர்தவவேடத் தாண்டிவடிவாயினனென் வெண்பாவொன்று, நள்ளுபுகழ்க்குமாரபுரிச் சண்முகமாமுனிவ னன்று நவின்றிட்டானே. (கஎஎ)

வேலாயுதபூசை.

கந்தனருட்சத்திவேற் பூசைசெயுமாசைபின்னுங் கவின்றதா லங், குந்தணிகொள்வாருகாற் பட்டெனுமூரினிற்கதிர்வே லொன்று செய்வித், தந்தணாகமவேத விதிப்படிகும்பப்புனலா லபிடேகஞ் செய், தெந்தநகரினுங் காங்கொண் டேகியருட்டிருவிளையாட் டியற் றலானுர். (கஎஅ)

அந்தநாளினினடந்த வற்புதங்களித்தனையென் றறைதற் கொண்ணு, சந்தமாலிகைபதிக மந்தாதிவகுப்புமுதற் றமிழ்நூலாங் காங், கிந்தமாநிலத்தினுவன் றெழின்மிகுவேலூரினிற்போ யிருக்கு நாளிற், பைந்தமிழ்வண்ணப்பதிக மூர்ப்பதிகங்குகவேளின் பதிகத் தோடு. (கஎகூ)

தமிழலங்காரம் பாடல்.

அமுதச்சித்தரின்பதிக மாதியனபாடியவை யாங்கேற்றிப்பின், குமுதச்செவ்வாய்க்கலைமி னருள்சிறந்துவாழ்ந்தனரக் கொள்கை யார்பாற், கமையற்றமனத்தொருவே தியனும்வே ளாளனுநேர் கவின்றுமேன்மை, யமைவுற்றகலையெமது வடமொழியேயெனவாத மறைதலானுர். (கஅ0)

வேதமெங்கள்வடமொழியி லுளதென்றுசெங்கடமிழ் வேத மேடஞ், சாதலுறக்கொலுமாறு விதிக்கவில்லையென்னவிவர் சாற்றி ஞர்பின், ஞேதவக்கரக்குறைவுள் ளதுதமிழென்றுரெகர வொகரமில் லாப், பேதமுற்றதுமதுவட மொழியென்றுரிரவுமுற்றும் பெயர்ந்து வெய்யோன். (கஅக)

வந்துதித்தும்வாதமுடிந் திலதுமுழுப்புலவனென வயங்குஞ் செவ்வேண், முந்துகாத்தணிவேலி னிடத்திருகட்சியுங்கலந்தே மொழிகுவோமென், றுந்துதமிழேயுயர்ச்சி வடமொழியேயுயர்ச்சி யெல்லா முயர்ச்சியென்று, மைந்துறுதேயங்குலநாட் டுடன்மானத் தாலுயர்ச்சி யென்றும்வாய்ப்ப. (கஅ௨)

ஏழுசீட்டெழுதியங்கிட் டொருவனைவிட்டவற்றினி லொன் றெடுக்கச்சொன்னர், சூழுமாதவமுனிவர் சிறுமடப்பெண்வந்தெடுக் கச் சொன்மினென்றார், வீழுமாறழைத்திடும்போ தணிக்கலைமாதொ ருமகளாய் விளங்கியேழிற், ருழுருதொருதமிழே யுயர்ச்சியெனுஞ் சீட்டெடுத்துத் தந்துபோனுள். (கஅ௩)

அதுதெரிந்தன்னவருனது பாசனைத்தேவுனக்கிசைய வறைந்த தென்றார், பொதுமுதலாம்பொருளெனக்குச் சொந்தமான துநலமே புகன்மினென்று, கதுமெனச்சீட்டினைச்சிரத்திற் கண்ணிலொற்றிய ருந்திமிகு களிப்பினுலே, முதுதமிழேயுயர்ச்சியென்று சீட்டளித்த பெருமாளென் முடிவுதோன்ற. (கஅச)

திருப்புகழொன்றேதினர்கேட் டவர்வணங்கியேகினர்பின் றிறமைகாட்டி, விருப்புமலிவுற்றதமி ழலங்காரப்பனுவலொன்றும் விளம்பித்தீர்த்தார், குருப்புலவனுங்குகன்மெய் யருள்பெறுங் கௌமாரரெதிர் குறுகியாவர், பொருப்புறழ்சீர்ச்செயமடைந்து போகுவரப்பானடந்த புகழ்ச்சிசொல்வாம். (௧அ௫)

புதுவைசேர்தல்.

வேலலங்காரத்திேைடு மயிலலங்காரப்பனுவல் விளம்பித்தண் டைக், காலலங்காரக்குமரன் காவல்புரிசென்னையிற்போய்க் கலம் பகப்பா, நூலலங்காரத்திதழ கலந்தாதியாதியன நுவன்றுபோற் றிச், சேலலங்காரக்கண்மட வார்நடனம்பொலிபுதுவை சேர்ந்தா ரன்றே. (௧அ௬)

அங்கிருந்ததானப்பன் சுவர்க்கமுற்றானெனல்வினவி யதற்கோர் *பாச்சொற், றிங்கிதமாங்குமாரபுரிச் சண்முகமாமுனிவனைக்கண் டியைந்துவாழ்ந்தார், தங்கியநாள்குகன்புனையத் தகுபனுவல்பாடி யரன் றனக்குமாற்குஞ், செங்கிரிநேர்கணேசனுக்கு, மம்பிகைக்குஞ் சிலபதிகஞ் செப்பியப்பால். (௧அ௭)

குகன்றிருச்சந்நிதியிலரங் கேற்றுவதற்கானதினங் கூறிப் பல்லோ, ரகந்தெரியப்பத்திரிகை யிட்டளித்தங்கேகினரன் றறுமு கேச, னுகந்ததியற்புதமாகு மலங்காரத்துடனிருந்தா னெளிரும் வானிற், றிகழ்ந்தமுகிற்குலமழைபெய் தெங்கும் வெள்ளமோடிய தாற் சிலாப்போது. (௧அ௮)

பொருளுடையார்யாருமின்று வந்திலரானுலியிவை புகலலா மென், றருகினில்வந்துரைத்திட்டார் பொற்பணங்கொண்டுள்ளவர் வந் தடையாவாற்றாற், றெருளுமென்சொல்கடப்பேனோ விக்கடவு ளுளங்கொண்டாற் றேவர்போற்றுந், திருவருட்பேறுதவானோ வென்றுபிரபந்தமுற்றுஞ் செப்பித்தீர்த்தார். (௧அ௯)

வேண்பா.

* மானப் புலவர் மகிழ வழங்கு செங்கைத்
தானப்ப னில்லாத் தனிப் புதுவை—வானத்தி
லெல்லாப் பொருளு மிருந்து மிலங்கு திங்க
ளில்லாத தன்மை யொத்ததே.

திருமணம்.

அவ்வாறங்குறுநாளிற் குமரேசன் கனவினிடை யவிர்ந்தென் றங்கை, செவ்வார்வங்கொளவுனக்குத் தருகுவேனெனச்சொன் ஞன் றிகழ்வெண்கஞ்சம், வெளவாதிக்கலைமகளைக் குறித்ததென நினைத்தனர்பின் வருந்தொண்டர்க்கு, ளொவ்வாமெய்யன்புமலி திருமலைப்பேரம்மையென்பா ளொருத்திமாதோ. (கக௦)

மிக்கசைவநெறிவழுவான் கருணீகத்தொழிலினன்வே லாயுதப் பேர்த், தக்கபுகழ்வேளாளன் றனதுமனையவள்கனவிற் சண்முகே சன், புக்கவள்பெற்றுளமகவைந் தினினடுவாய்ச்சுந்தரப்பேர் புனைந்தமாதைத், திக்கறியவிவர்க்களிக்கு மாறுரைத்தானினுஞ் சிலர்க்குஞ் செப்பினுனல். (கககூ)

அவர்களெலாமிவரிடம்வந் தியன்றகனுத்திறமுரைத்தா ரந்த வேளை, பவமில்பெரியோர்சிலரு மேற்றிடுகென்றூர்குகவேள் பரிந்து நெஞ்சி, லிவளுனைச்சேர்ந்திடுபொருளென் றுரைத்தனன்பின்விளை யாட வியலுமாற்ருற், கவலையுமுட்களிப்புமுற வேற்றுமயிலாசலத் துக் கந்தவேள்பால். (ககூஉ)

வந்துபலதொண்டர்குழாம் பணிந்தரவோசைகண்முழக்கி மலர் கடூர்ப்பச், செந்துவர்வாய்க்குஞ்சரியைப் பரங்கிரியிற்றேவருயச் செவ்வேள்வேட்டாங், கெந்துகடீர்த்திடுகுரவன் ஞானமணக்காட்சி யளித் தினிதுவைகி, முந்துபுகழ்ச்சிவஞான பாலையதேசிகன்பான் முழுநண்பாகி. (ககூ௩)

வசித்தனரக்கான்முருக னருணகிரியாயுறுநாண் மனத்திலுன் றன், விசித்திரமாமுடற்றழுவ விரும்பியவாகாமியத்தான் மேவிஞ ளிவ், வசிக்கண்மகளெனவுரைத்தா ஞெருசிறிதுமணமிணங்கி யமைந் தாரந்தோ, நசித்திறவாக்கதிதருசண் முகப்பெருமான்றிருவுளமார் நவிலற் பாலார். (ககூச)

மயிலாசலப்பிரபந்தம் பாடல்.

சிவஞானபாலையதே சிகனிவர்பான்முருகனுக்குன் றிருவாக் காலே, நவரசச்செந்தமிழ்மொழியிற் கலம்பகமொன்றுரைத்தியென நவின்றுனனந்நா, டவமிகுமெங்குரவனவ்வா றியற்றியணித்திருப்புக ழுஞ் சாற்றிப்பின்னு, மூவகைமலிபதிகம்வகுப் போதியருட்பாலை யற்கு முரைத்தார்மாதோ. (ககூரு)

அத்தமிழ்நூன்முழுதுமரங் கேற்றியநாள்பாலையனன் பதிகங் கொண்டு, கைத்தலத்தாற்றழுவிமுத்திக் காவியந்தானையைபிவர்மேற் கவினச்சாத்திச், சுத்தமிகுதிருநீற்றுப் பிரசாதங்கொடுத்தனன் மெய்த் தொண்டரார்த்தார், வித்தகப்பாவலர்தலைவ ரவண்விடுத்துப் பலதலங்கண்மேவிப்போற்றி. (௧௯௬)

சுந்தரப்பேரம்மையொடு தொண்டர்குழாஞ்சூழ்தரப்போய்த் துதிசேர்வேற்கைக், கந்தன்வளர்காவிரியின் கரைத்திருவேரகந் தொழுது கவின்வெண்பாவி, லந்தமுடனுதிதொட ரொருநூறுகவி யுரைத்தவ் வரங்கிலேற்றிச், செந்தமிழிற்பதிகமுஞ்சொற் றருளி யணிப்பரங்கிரியிற் சேர்ந்தாரன்றே. (௧௯௭)

திருப்பரங்கிரி யடைதல்.

அம்மலையிற்குகனைமகிழ் வுடன்வணங்கிச்சிலதினமங் கமர்ந்தா ரங்நாள், செம்மணிக்குன்றனையவவ ரொருதவன்போற்கனவினிடை திகழ்ந்தான்கண்டு, மும்மைவிதத்தமிழ்ப்புலமை யிலனெனவெண் ணினர்தெரிந்து முருகன்சற்றே, வெம்மைமனக்குறிகாட்டி யெதிரி லிருந்திம்மாற்றம் விளம்பலானான். (௧௯௮)

வேறு.

காண்பரங்கிரி யெனவெடுத்தொருவெண்பாக் கழறி
யேண்படப்புக லுனதுசொற்புலமையா முணர்வேம்
வீண்படாதென வெதிரினிலிருந்தனன் விரைவி
லாண்பசுஞ்சிகி யிவர்குகன்றனைநினைத் தறைந்தார். (௧௯௯)

வெண்டளைக்குத வாக்கனிச்சீர்சொலி வெண்பா
கொண்டறைந்திடு கென்றனன்முழுதுணர் குமரன்
கண்டதோரள பெடைகலந்துரைத்தனர் களிப்புற்
றெண்டகும்பதி கத்திற்குமகுடமொன் றிசைத்தான். (௨௦௦)

சாக்கிரந்திகழ்ந் துவகையுற்றறைந்தசொல் சாரத்
தேக்கிசைத்தமிழ்ப் பதிகமொன்றோதிப்பின் செப்பும்
பாக்கியத்திரு மகுடமார்பதிகமும் பகர்ந்து
சீக்கிரஞ்சபை யிடையரங்கேற்றினர் சிறப்பாய். (௨௦௧)

அங்கிருந்திடை பலதலந்தொழுதுசென் றன்னை
தங்கிவாழ்திரு நெல்லையிற்றன்மனை சார்ந்தார்
பங்கிலுள்ளபல் கேளிரும்பரிவுடன் மகிழ்வாய்
மங்கிடாநிறைச் சுந்தரத்தம்மையை வளைந்தார். (உ0உ)

திருச்செந்திற்பிரபந்த மரங்கேற்றல்.

அப்படிச்சில தினங்கழித்தணிமலி செந்தூர்க்
கொப்பறுந்தமிழ்ப் பனுவல்பன்னொன்றுமுன் போதிச்
செப்பறற்றிரு நதியிலிட்டமையெணிச் செயிருந்
றப்பரன்றிரு வருளினலங்குசென் றனரால். (உ0௩)

சென்றுவேலவற் காறிரண்டிபமருள் செல்விக்
கொன்றுவேடர்தம் மகளினுக்கொன்றுவீ ரனுக்குத்
துன்றுமோரிரண் டெனப்பதினறுநூல் சொல்லிக்
குன்றுதோறுமா டியபதத்தணிவது குறித்தார். (உ0௪)

அந்தவூர்த்திரி சுதந்தரப்பனவர்க ளன்பாய்த்
தந்தமாப்பிடர் மிசைகவியேடுறச் சகல
வந்தனச்சிறப் புடன்பன்மாதவர்கவி வாணர்
முந்தனந்தவூ ரவர்களுஞ்சூழ்ந்துசார் மொய்ப்ப. (உ0௫)

செந்தின்மாநகர்க் குகன்றிருவருள்பெறுஞ் சிலர்க்
கெந்தவாற்றினுங் குறையுறுதெனுநிச மிலங்கச்
சந்தவீதிநான் கினும்வலம்புரிந்துபின் றனிவேற்
கந்தனலய முகப்பினிற்களிற்றினின் றெடுத்தே. (உ0௬)

கொண்டுபோயருட் குமரன்முன்வைத்தருச் சித்து
மண்டுவாசநீர் கருப்புரச்சுடர்பணி மாறி
யண்டுதொண்டரார்த் திடவிலைப்பூதிசந் தனமீந்
தொண்டுதித்தமி ழமைந்தவேட்டினையெடுத் துதவி. (உ0௭)

வாசமார்குகன் றிருப்புயமாலையும் வாங்கித்
தேசவிர்ந்திடு மெமதுதேசிகன்புயஞ் சேர்த்துப்
பேசருட்பிர பந்தமோதுகவெனப் பிறவிப்
பாசநீக்குமெய்ப் பரமஞர்ஞகரர் பரவ. (உ0அ)

இருந்துநூல்படித் துரைவிரித்துரைத்தன ரிமையோர்
பருந்துநேரவை முழுதரங்கேற்றலு மகிழ்வாய்ப்
பொருந்துமாதவர் வேதியர்பாவலர் புகழ்ந்தார்
திருந்துசெந்தினா யகன்றிருவுளமெவர் தெரிவார். (௨௦௯)

தென்னைச்சோலைசூழ் செந்திலானிவருளிற் றிகழ்வுற்
றன்னைப்போற்றுக னடியருளொருவன்றான் யானுன்
றன்னைக்காட்டிலும் பெரியன்சற்றென்றனன் சாற்றும்
பொன்னையன்னசொற் பொருளநுபூதியின் புணர்ப்பே. (௨௧௦)

அதுவினாவிநெஞ் சகத்தினிற்சினந்தொர்பாட் டறைந்து
கதுமென்றாங்குவிட் டணிகொணெல்வேலிபோய்க் கவின்றார்
பொதுநிலைக்குண முறுதமுன்னாளெனிற் புகல்பாட்
டெதுமலைக்கட லிடைகிழித்தெறிந்துசெல் குவரே. (௨௧௧)

கேரளதேசஞ் செல்லல்.

அதன்பின்கந்தன்வேற் பூசனைகடன்பொரு ளதனால்
விதம்படும்பல சிறப்புறப்புரிந்தனர் மேலாஞ்
சுதந்தரத்தொடு கேரளத்தரசன்பாற் சொற்சீர்ப்
பதங்கொள்செந்தமிழ்க் கவியிசைத்தவன்கொடைப் பண்பால். ()

பொருளடைந்துதன் கடன்றவிர்த்திட-வெணிப் போதன்
கெருவமற்றழப் புடைத்தவன்வள்ளியூர்க் கிரியி
லொருதமிழ்ப்பதி கழும்புகன்றுரியமேற் றிசைபோய்த்
திருவனந்தையூ ரடைந்தரசனுக்கொர்சீட் டுய்த்து. (௨௧௩)

வலியமேலெழுத் தெனுமமைச்சன்றன்பால் வைகி
மெலிவிலாதுபல் விதத்தினுமுயன்றனர் விரும்பி
மலிதமிழ்ச்சுவை நுகர்ந்திடாதிறையவன் வறிதே
நலிவடைந்தநெஞ் சகத்தனாநாள்கழித் தனனே. (௨௧௪)

மாதமூன்றுமட் டிருந்தனரொருசிலர் வந்து
நீதமன்னன்பா லிருகைசேர்த்தொருகைவாய் நேர்வைத்
தாதரத்தொடு பேசுதல்வழக்கமென் றறைந்தார்
வேதநாயக னாங்குகனருள்செயா விடினும். (௨௧௫)

மன்னன்பாலென்றன் வாய்புதையேனென்றோர் *வெண்பாச்
சொன்னபோதவ ணிருப்பவர்வணங்குபு துதித்தா
ரன்னவேந்துவீ தியில்வரக்கண்டிவ ரணுகி
யுன்னதிந்தநா டொன்றுமென்னுடுல கெல்லாம். (உகசு)

உனக்குச்செந்தமி ழாசையின்றேவென்றோர் †வெண்பா
கனக்கவோதின ரவன்பதிலோதிடக் காணுர்
சினக்குநெஞ்சிலு லவனநியாயத்தன் றீரா
மனத்துலோபன்பாற் போய்ப்பிச்சையின்றிநான் வந்தேன். (உகஎ)

நீயிருந்தனை யோவிலாயோவென நெடுவேற்
சேயின்மீ‡துரைத் தங்குவிட்டைதினிற் சென்றே
மாயிரும்புகழ்க் கொச்சியூரடைந்தவூர் மன்பாற்
போயியன்றமட் டுழைத்துநேர்கண்டிலர் புழுங்கி. (உகஅ)

அஞ்சல்வள்ளமீ தேறினர்காயல்வா யதனை
மிஞ்சவோச்சுநர் குடிவெறியினருடன் மேயோர்
வஞ்சமாகொலை புலையினரிருளிரா மறலி
யிஞ்சையாவது நெருங்கியதோவென வெண்ண. (உகசு)

கையினோர்பெரு விரல்கொளுந்துளையதிற் கண்டு
மையினேர்கடற் புனல்கசிந்ததுபலர் வருந்தி
மெய்யினுர்துணி யடைத்துமேற்கசியுநீ ரிறைத்து
நையினுவுற மனம்பயங்கொளுந்ததி நாப்பண். (உஉo)

---

* எங்கும்புதையா திலங்குதமிழ்ப் பாடலெனும்
பொங்குமதுரம் பொழியும்வாய்—நங்குகவே
ளின்னருளாற் றேயாதிலங்கு புகழ்க்கோளத்து
மன்னனிடம் போய்ப் புதைக்குமா.

† உன்றனது கோளநா டொன்றுமே யிங்கிலகு
மென்றனது நாடுலக மெங்குமே—பொன்றாநீ
மாட்டாயோ சேரமக ராசனே மதுரப்
பாட்டாசை யின்றே பகர்.

‡ ஆயிலியச்சேர னனியாயக் காரனவன்
வாயிலிற்போய்ப் பிச்சையின்றி வந்தேனே—நீயிலையோ
வேலாயுதக் குகனேவெள்ளி மலைபோற்குலவுங்
காலாயுதக் கைமுருகா.

வள்ளமோச்சுவோர் கடலினுக்கேகிடும் வழியிற்
கொள்ளவோச்சின ரவ்விருளிடையொர்வேற் குழக
னெள்ளலாகவை துளவழியுரைத்தன னிதன்சீ
ருள்ளதாந்திரு வருட்செயலன்றியொன் றுண்டோ. (உஉக)

அந்தவேளையிற் சிறுதுயிற்கனவிடை யயில்வேள்
வெந்தநீறுடன் முழுதணிதவசியா மிளிர்ந்துன்
சொந்தமாந்திரு நீற்றுக்கோயிலினுருத் தோய்ந்து
சந்தமார்தர வசித்துளேனென்றுரைத் தனனே. (உஉஉ)

இந்தவற்புதக் கனவினையுரைப்பதற் கியாரு
மந்தவள்ளமீ திலரதாற்குகன்றிரு வருளைச்
சிந்தனைக்கணு டுபுதிருநீறெடுத் தணிந்தார்
வந்தவிர்ந்தனன் கதிரவன்குணதிசை வயங்க. (உஉங)

கண்டுதெண்டனிட் டனர்கரையடுத்தது காய
லண்டுவள்ளம்விட் டிறங்கியேநடந்தன ரருகின்
மண்டுநீறிடா மதத்தின்வேளாளனோர் மனிதன்
விண்டுநற்றமிழ் மொழித்துணையாகிமே வினனே. (உஉச)

நடந்திராப்பொழு தினிற்பெருவனப்பதி நண்ணி
யிடந்துலங்குமோர் குடியில்பாழரண்மனை யெதிரில்
விடந்திகழ்ந்தவாய்ப் பார்ப்பனச்சிறுவர்பால் வேட்கை
யுடன்கடைத்தெரு வெங்கென்றூர்தூரமென் றேத. (உஉரு)

என்பொருட்டினிற் போய்வருவீர்கொலோ வென்றூர்
வன்பொடன்னவ ரிகழ்ந்துரைத்தனரதான் மனநொந்
தன்பொடியான்பசி யாலுழன்றிடுமதி தோடஞ்
தன்பொறுப்பெனப் பலவுயிர்புரப்பவற் சாரும. (உஉசா)

ஸ்ரீ நாராயணன் அன்னமளித்தல்.

என்னவோதுபு படுத்திருகடிகைகண் டுயின்றூ
ரன்னபோதொரு வயிணவப்பனவன்வந் தன்னந்
தன்னதங்கைவைத் துணவிலாதிங்குதங் கியதாச்
சொன்னதாரென வினவலும்யானென்றூர் துலங்கி. (உஉஎ)

நீயுரைத்தவா சகமெனவருத்தலா னினக்காப்
போயுணற்கிவை கொணர்ந்தனன்வாங்கெனப் புகன்று
னேயுமித்தலத் துண்டிடேன்புனலரு கீந்தால்
வாயுடன்கரங் கழுவியுண்பேனென வகுத்தார். (உஉஅ)

உடனொர்வாவியி னருகிலுய்த்தன்னமோ ருப்புந்
திடமறுமிள காயிரண்டுங்கொடுத் திட்டா
னடல்கொள்வேதிய ருட்டுணச்செல்லவிடை யருளென்
றுடல்குழைந்திட நயமொழிகாட்டின னுரித்தால். (உஉக)

தேவனேவிவன் மணிநகேனெனமனந் தியங்கி
நீவசிக்குநா டிதுகொலோவென்றனர் நின்றோ
னுவதீதல வென்றனன்பேரெனென் றதற்கு
நாவதாலுயர் சீநிவாசப்பெயர் நவின்றான். (உஙo)

வேறு

அதுவினவிமாயவனேற் றெட்டிடினுந்தோட
மாகாதுவேதியனே லதிபிழையாமென்று
மிதுவரைவந்தவனேரிற் காட்சிதருங்கால
மிருக்குமென்றுநினைத்துவிடை யிந்தனர்சென்றிட்டான்
மதுரமிகுமன்னமலை வாழையிலையதனில்
வைத்திருந்ததிருவருக்கும் வாய்ந்தவளவதனைக்
கதுமெனவாங்கிருபகுப்பாப் பிரித்தொருகூறருந்திக்
கருதுமற்றொன்றினைத்தனுடன் கண்டுயில்வான்றனக்கே. ()

வைத்துவந்தன்னவற்கூவி யுண்ணுகவென்றனரம்
மடமையினனீறணியா மதத்தினனுலிவர்தா
மொத்துடன்முற்றணிந்தவரீந் திடுமுணவுண்டிடுதற்
குளமிசையானுய்மறுத்தா னுறுத்திவர்தாமவனை
நத்துமுன்றன்றுதைமூ தாதையென்றன்மதத்தி
னன்கிருந்தோரன்றேவுன் னன்மகன்காலத்தின்
முத்துறழ்நீறணிந்தா லு மணிவனன்றேவுனையே
முழுதருட்பேறுறுமொருவன் முனிந்துநீறணிய. (உஙஉ)

திருப்பிடினுந்தருமன்றோ தெய்வபிரசாதத்
திருவமுதுதசையருந்துந் தீவாய்கொளுனக்கிங்
கருத்துவதுதகுமோபட் டினியாகித்தளரு
மான்மாவென்றிரங்கியன்றோ வளிக்கின்றேனென்றார்

விருப்புடனச்சங்கொடெழுந் தடிவணங்கியுணவை
மிசைந்து துயின்றானவன்பால் விளைதவமென்னென்பேன்
குருத்துவந்தேருக்கயவர் கொச்சிவளநாட்டின்
குலவுபெருவனத்திலன்னங் கொடுக்கவந்தகருணை. (உகூகூ)

அந்தணனேயந்தவண்ணஞ் சொன்னமளித்திட்டா
லாகாதோவென*வெண்பா வறைந்துதுயில்கூர்ந்தார்
பிந்தமறுநாளுடன்வந் தவன்பிரிந்துபோனான்
பெருந்தவரங்கிருந்துகுகன் பெய்கழற்றாள்கருதிச்
சந்தநடைகொண்டுவந்து புகைச்சகடமிவர்ந்து
சாற்றுசிலதலந்துதித்துச் சார்ந்துகொங்குநாட்டி
னுந்தணிச்சீருடுமலைப்பேட் டையிலடைந்தாரங்கே
யொருசைவனுபசரித்தங் குணவருத்திச்சகடம். (உகூச)

ஒன்றமைத்துப்பழனிமலைக் கேகுமாறனுப்ப
வுவந்ததிலூர்ந்தேகினரங் குறும்வழியிற்சற்றே
நன்றவிர்சாக்கிரக்கனவிற் பழனிமலைக்குமர
னுவலன்போல்வந்துகவி நவில்குழிப்புச்சாற்றிக்
கன்றவிலாதிதனைநீ பாடுகென்றான்விழித்துக்
களித்துவழிநோக்கினர்நங் கந்தன்வளர் தருமக்
குன்றமவிர்ந்ததுவணங்கி நீறணிந்தாறெழுத்துங்
கூறியங்குசேர்ந்திழிந்து குளித்துநியமங்கள். (உகூரு)

முடித்துமலைமீதிடையோர் கோயிலென்னென்றனரான்
மொழியிடும்பன்கோயிலென்று ருயிர்ப்பலிகொள்வழக்கம்
பிடித்தவனென்றறிந்தமலை மிசைபோகேனென்னப்
பேசியிருந்தனர்கனவிற் பெருமயிலூர்குகவேள்
வடித்தகதிர்வேலுடனன் னவருளத்திற்றோன்றி
மகிழ்வுடனீரேரினம்பால் வருகவென்றான்வியந்தே
படித்தகலைப்புலவர்புக ழெமதுகுருநாதன்
பணிந்துமலையேறியிடை பகரிடும்பற்கண்டு. (உகூகூ)

வெண்பா.

* குருவனப்புக் கண்டறியார் கொச்சிவள நாட்டின்
பெருவனத்தி லென்னை யன்பிற்பேணி —யருமையுட
னன்னங் கொடுக்கவந்த வந்தணனே யந்தவண்ணஞ்
சொன்னங் கொடுக்க வொண்ணாதோ.

பழனிமலை யிடும்பனுக்குப் பாடுதல்.

கொலைகண்டுமாமிசமுட் கொண்டுவக்கவேண்டாங்
குகனருளின்செயலதனைக் குறித்தறிந்துமேலா
நிலைகண்டுநில்லெனவோர் *கவியுரைத்துச்சென்று
நீடயிற்சேவகற்றொழுது நிகழ்த்தருமானந்தத்
தலைநின்று துதித்திருந்தா ரந்நாளிற்சந்தத்
தமிழ்ப்பதிகம்வகுப்புமுதற் சாற்றியசங்கேற்றி
மலையென்றபுகழ்செறிமாம் பழக்கவிராயனையு
மற்றவர்சிற்சிலரையுங்கண் டுவந்துவசித்தனரே. (௨௩௭)

அப்படியாங்குறுநாளி லம்மலையின்சார்பா
யமைந்தவேலாயுதம்பா ளையத்திலோர்வேளாளன்
கைப்பருமெய்யன்பினொடு தருமம்விடாக்குணத்தன்
கறுப்பவேற்கவண்டனிவர்க் கனவினிற்கண்டவனான்
முப்படியும்புகழ்முருகோ னிவனெனக்கொண்டின்னன்
முழுதொழியக்கருணைசெயென் றனனிவர்யான்வேற்கைச்
செப்பமுறுமுருகனல்லே னவனடியார்பாதத்
திருத்துகள்பூண்டுளசென்னிச் சிறுவனென்றாரன்றோன். ()

கனவினிற்சில்போதுவந்தாய் நனவினாலுமோர்நாள்
காட்சிநல்கியென்பணிகள் கருணையொடேற்றொளித்தாய்
தனதுருவாயின்றெதிரிற் றோற்றியும்பொய்மாற்றஞ்
சாற்றுகின்றாயெனப்பணிந்து பலர்க்குமதுசொன்னான்
சினவரவத்தண்டைமயிற் பரியுடையானருளின்
றிருவிளையாட்டெனமனத்திற் றேறியவன்வேண்டுந்
தனமுதலாவனபெருகக் கருணைவெண்ணீறருளித்
தங்கியபோதொருநாளிற் சாக்கிரசொப்பனத்தில். (௨௩௯)

கவி.

* பாடுமன்பர் போற்றும் பழனிமலைப் பாதியினின்
றுடும்டும்பா வறையக்கே—ணீடுங்
கொலைகண்டு மாமிசமுட் கொண்டுவக்க வேண்டா
நிலைகண்டு மெய் யருளினில்.

முருகன் கனவிற் காட்சியருளல்.

தம்மைப்போன்முருகனயில் வேல்காத்திலேந்தித்
தணிமயின்மேற்குறப்பெண்ணொரு சாரிருப்பமகிழ்வாய்
வெம்மைப்பாழ்வினையறுக்குங் கருணையருட்காட்சி
விளங்கவடியவர்சூழ வீதியதனூடே
செம்மைப்பாங்குடனுறக்கண் டடன்பணிந்தார்முன்பு
திகழ்ந்தோன்யான்முருகனென்றே சிந்தித்துப்பணிந்தாய்
மும்மைத்தீமலமகற்று மவன்போலவுலகோர்
மொழிந்திடநல்வேடமிடு முறையுடையேனென்றான். (உசo)

என்றலுமங்கிவர் துணிந்து நீமுருகனேனு
மேற்றபொய்வேடத்தினனே யெனினுமென்றன் வணக்கங்
குன்றனைத்துநடிக்குமவன் றனக்கேயாமுண்மை
குலவுபுகழ்ச்சேரமான் குஞ்சரநின்றிறங்கி
யன்றுவர்மண்படியுடல்வண் ணானையரனடியா
னெனக்கும்பிட்டனன்கெட் டழிந்திலன்மெய்வீட்டிற்
றுன்றலுற்றானுதவினென் றனர்மறைந்துநனவு
தோய்ந்ததிவ்வாறனந்தமவை சொலிமுடியாதனவே. (உசக)

அவ்வணமாங்குறுநாளிற் குமரவேளிவர்தம்
மகத்தினிலோர்செட்டியுரு வாகியவிர்ந்தருமைச்
செவ்வணவாய்கொடுநமது செட்டிகளாங்கிருக்கத்
திரிந்துபலவாறுழன்று செயிரடையேலென்று
னிவ்வசனம்பெற்றுமது ராபுரியிலப்போ
திருந்ததனுக்கோடிமன்ன னிடம்வசனித்தவன்சொன்
மெய்வசனப்படிசேது பதியானைப்பார்க்க
விழைந்தமனத்துடன் றுயிலும் வேளைமயிற்குமரன். (உசஉ)

சேதுபதியிடஞ் செல்லுதல்.

அங்குவசிப்பவன்முன்னு ளிருந்துபலர்க்கிடர்செய்
தழிந்ததிருமலைராய னவனிடமேன்செல்ல
லிங்குவிருப்புற்றனைவேண் டாமென்றானிவன்சொல்
லெத்தனையோபிழைத்துள்ளா னிதுநிசமோவென்று

பொங்குவிரைவுடன்சென்றன் னவனரங்கின்கேண்மைப்
புலவன்மனைத்தலைவசித்தார் பொழின்மதுராபுரியிற்
றங்குநர்சில்கடிதமவற் குய்த்திவர்சீர்தெரித்துந்
தனதவையில்வருகவெனச் சாற்றியழைத்திலனே. (உசங)

பலபுலவோர்மகிழவருட் கவிகளுரைத்துரைகள்
பகர்ந்துறுநாளவனொருவெண் பாவினீற்றடிதான்
குலவுகண்விண்பெண்பொன்பண் கனியெனவைத்திவர்க்குக்
கொடுத்துவிடுத்தான்றமக்குக் கொடுத்ததெனச்சிலர்தா
நலமுறச்சொற்றிவரிடமீந் தனர்பொருயைத்தண்ணீர்
நயந்துணுமென்னிடமுவர்நீர் நாளுமருந்திடுநீர்
விலகுநெறிப்பொய்யுரையேன் புகல்கின்றீரென்று
*வேலவனுக்கறுமூன்று மேனொட்டளித்தல். (உசச)

உருகுமயலீதலுறு பூண்பெருகுசெவிக
ளுண்மகிழ்ச்சிசேர்ப்பதுல கதனைச்சூழவிடல்
பொருவினிரைநிரைப்பொருளி லமைத்துரைத்திட்டுங்கள்
புலமையிதுதானோவெண் டளையின்மாண்பெல்லா
மருமைவண்ணங்கழித்திடுமா பாசமெனவீங்க
ளறிகிலீர்போலுமவ்வண் ணத்தினிலக்கணந்தான்
றெருளுறயாமேயிசைத்து ளோமிலக்கியங்கள்
செகத்திலனந்தம்புலவோர் செப்பியுள்ளாரன்றி. (உசரு)

கிரிதொறுமாடியமுருக னருளதனலியாமுங்
கிளத்தியுளோம்பலவறிமி னவற்றின்சான்றென்று
தரிகிடதச்செந்தணந்திந் திமிதாவென்றெடுத்துத்
தக்கவொருகலையெழுதித் தந்திந்தக்குழிப்பில்
விரிதருமெண்கலைநீங்க ளேனுமுங்களரசா
மேவுநனேனும்பகர்ந்தால் விண்டபடிநடப்பே
னரிதெனில்யான்சொன்னபடி நடப்பதேமுறையென்
றறைந்துவிடுத்தனரதுகண் டாயினுமப்பொல்லான். (உசசு)

---

* முருகனுக்கு மூவாறு முன்புதொட்டுக் காத்த
லுருகுமயலீத லுறுபூண்—பெருகுசெவி
யுண்மகிழ்ச்சி சேர்ப்பதுல கதனைச் சூழவிடல்
கண்விண்பெண் பொன்பண்கனி.

மனமகிழாதவமதிப்பென் றெண்ணியறிவில்லா
மறையவனாமருச்சகனால் வருத்துமாறிசைத்தான்
வினவியவன்முருகனா வேசமெனக்காட்டி
விரைந்தருகுற்றெடுத்தனன்கண் டிவரவனைநோக்கிச்
சினமலிந்துமேற்குலத்தோர்க் கிச்செய்கைதகுமோ
சீயெனச்சீறினர்விடுத்துத் திடுக்கமுற்றானன்னோன்
கனவருத்தமுறக்கசக்கி விட்டதாச்சில்லோர்
கழறுவரவ்வாறிலையென் றுரைத்ததுகாவியமே. (உசஎ)

மறுதினத்தோராள்வசமவ் வரசன்றான்கன்னி
மாதம்வந்தானீயுரைத்த வாறுநடப்பேனென்
றுறுதிசொற்றுவிடுத்தனனோர் கண்டிடற்குமொப்பா
வுன்னிடநீகொலைப்பூசை யுஞற்றுமந்நாளணுகே
னறுமுகவேளதற்குளென்றன் விருப்பநிறைவேற்றி
யருள்வானென்றோதியவ்வூ ரகன்றணியார்தேவைக்
குறுதியுறச்சென்றுவே தாந்தப்பேர்கொளுமோ
ருத்தமன்பாலினிதுவசித் துற்றனரச்சமயம். (உசஅ)

தேவைநகர் சேர்தல்.

இலக்குமிணச்செட்டிமகன் சிதம்பரப்பேருடையோ
னிவரிடம்வந்தடிபணிந்துள் ளிசைவுறுமன்பதனாற்
குலக்குருந்தாங்குழவியிலாக் குறைசொலிவேண்டினனாற்
கொண்டவென்றன் கடன்பொருளைக் கொடுத்திடுவாயாகிற்
றுலக்குபுகழ்ச்சிசுவுதிக்கக் குகனருளுமாறு
துதித்தமிழாற்புரிகுவனென் றனர்மகிழ்வுற்றன்னைக்
கலக்குதுயர்ப்பொருட்டொகையைத் தனையெனக்கேட்டிவர்தாங்
கழறியவாறாயிரம்வெண் காசுகொடுத்தனுப்பி. (உசகூ)

குன்றக்குடி சேர்தல்.

அத்துயர்தீர்தரப்புரிந்தா னன்றுமுதற்குகன்பா
லருஞ்சிசுவன்னவற்குதவென் றநுதினம்வேண்டுதலாய்ச்
சத்துளசெந்தமிழ்வண்ணத் திருப்புகழாறாறு
சாற்றியாங்கேற்றியங்கு தங்கியிருந்தப்பால்

வித்துவசேகரர்புகழ்குன் றக்குடிவாழ்முருகன்
விரைமலர்த்தாட்கணிதிகழ்சந் தப்பதிகம்பாடிக்
கொத்துமலர்க்கடம்புறமும் வகுப்புகளோராறுங்
குறைவில்கலம்பகமும்வண்ணக் கொழுங்கலவித்துறையும். ()

சொல்லிமுடித்தாங்கேற்றுஞ் சூழ்ச்சிபலர்க்குரைத்துச்
சுப்பிரமணியனடியிற் சூட்டியருச்சித்து
நல்லிதயத்தவர்புலவர் வியப்பவுரைத்திட்டார்
ஞாங்கரணிகரக்குமர னல்லருட்சீரளித்தேன்
வல்லிதயமகிழ்கவென்று னீசொலன்மெய்யாகின்
மடையர்கருங்குடைநிழலில் வருந்திநிற்பேன்கொல்லோ
கொல்லியமனெனவருத்து மேடணேதீர்த்தெட்டாக்
குலவுசித்திமுத்தியுடன் கொடுத்திடெனக்கூறி. (உ௫க)

காரையம்பதி சேர்தல்.

அம்மலைவிட்டணித்தாகுங் காரைநகரதிற்போ
யந்தணர்வீதியிலொருவீட் டமுதுணற்காச்சென்று
செம்மலைநேர்குமரனடி கருதியுற்றூரண்டைத்
திண்ணையினிலருணகிரி செப்பும்வகுப்போசை
தம்மதுகாதுறப்புகலாற் கவனமுறக்கேட்டுத்
தக்கதொருபெரியவனோர் சிறுவனுக்கோதுவதா
மெய்ம்மறையைவினவவவ ணடைந்திவனுக்கிந்நூல்
விளம்பலரிதென்றனரம் மேலவன்பாட்டறைதல். (உ௫உ)

நிறுத்தியருகிருக்கவைத்துன் பதியாதென்றிட்டா
னிகழ்திருநெல்வேலியென்று ரவனந்தப்பதியின்
மறுத்தவிர்சீர்முருகதா சனையறிவாய்கொல்லோ
வாய்ந்ததொந்தமுனக்குண்டோ சுகந்தானோவிந்நாள்
பொறுத்தபுகழ்ப்பதியெதனி லுள்ளானோவிவரம்
புகலென்றான்பழவினையாற் புலர்ந்தலைந்துபொல்லார்
வெறுத்திடச்சுற்றிடுமெனைத்தா னப்படியிவ்வுலகோர்
விளம்புவரென்றனரதுகேட் டுளத்தடங்காவுவகை. (உ௫௩)

பூத்தனனுலட்டாவ தானியென்றுமேலாம்
புகழ்வாலசுப்பிரம ணியப்பெயரோனென்று
மேத்தநிகழவனிடஞ்சில் போதுகலந்திருந்தா
ரிலைவேலாற்கினியதிருப் புகழ்த்தொடைசொற்றணிந்து

காத்தருளும்படிதவஞ்செய் துறுநாளிலிவரைக்
கண்டறிந்தவொருபனவன் கவின்குன்றைப்பதிபோய்
வாய்த்தபுகழ்க்காரைநகர் வரும்வழியிலிவரை
மற்றொருவேதியத்தவசி யுடன்வரக்கண்டங்கே. (உ௫௪)

வேதியமாதவன்சுமைக ளிவரெடுத்துச்செல்லும்
விதமுணர்ந்துன்பொருளையவன் றொடலாமோவென்றான்
சாதிமுறைகருதேலென் சீடனவனென்னத்
தவசியுரைத்தனன்மகிழ்ந்து தன்மனையிலந்தக்
கோதிலெதீச்சுரனையுணக் கேட்டிணங்கப்பெற்றுக்
கொண்டிவர்பாற்றன்மனையிற் கூட்டும்வண்ணஞ்சொல்லி
நீதிகொள்வேற்றூரிலுண வினுக்குரியதேடி
நேர்க்துதன்வீட்டிலந்த முனிவனைக்கண்டில்லான். (உ௫௫)

வேறோர்பிராமணத்தவன்வந் திருப்பதைக்கண்டதனால்
விளங்கமுதற்றவனையெங்கு விட்டனையென்றிவர்பால்
வீறுவேதியன்விரைந்து வந்துவினவினனால்
விளம்பன்முற்றுங்கனவோகண் விழித்துளவிந்நனவோ
கூறுகென்றார்நனவேயென் றனனிவர்யானன்று
குமானருளாட்டெனத்தன் குழுவினராற்றெறித்தார்
மீறுதுயரடைந்தன்னோன் புரண்டழுதானவன்பால்
விள்ளெனக்கேட்டனைவர்களும் வியந்துபுகழ்ந்தனரே. (உ௫௬)

துட்டேமெய்த்தெய்வமெனச் சுழல்வேனையுனது
தொண்டுபுரிசீடனெனச் சொலவிசைந்தாய்கொல்லோ
மட்டேயும்பொழிற்குன்றக் குடியானேயெனவோர்
வண்டமிழின்பதிகமங்கு வழுத்தினர்சண்முகன்றன்
கட்டேய்ந்தமொழியுமன்னோன் விருப்புமவமாகிக்
கழியாதுதவனொருவற் காணவனுப்பினன்மெய்
நட்டேயங்குறுமவனுங் குகன்றானேதவனே
நன்குதிருவருளறியு நாரறியொண்ணாதே. (உ௫௭)

விடைகருடன்மயின்முதலாம் பரிகண்மிசைமுன்னோர்
விளம்புசிற்பபுராணநவில் விதியில்வருந்தேவைத்
தடையறக்கண்டடிவணங்கித் தம்விருப்பமெல்லாந்
தருமாறுகேட்டடைதல் சகசமேயாகு

நடையுடைநம்போற்பொருந்தி யுடனிணங்கிநின்று
ஞானவமுதூட்டவரு நற்குரவன்வடிவை
யுடையபரம்பொருளெனநிச் சயித்தகத்தும்புறத்து
மொத்தவநுபூதிபெற லுரைத்திடின்மிக்கரிதே. (உருஅ)

வேறு

திருநெல்வேலி சேர்தல்.

அங்குசிலநாளிருந்து கோவிலூர்த்திருமடத்தி லடியார்தம்பாற், பொங்குமகிழ்வுடனிரண்டோர் நாளிருந்தாரவர்களிவர் பொற்பைநோக்கிக், கங்குல்பொருமிருண்மாயை கடந்தமுத்திக் காரணந்தான் கழறுகென்றார், நங்குருநாதன்றிருக்கண்ணோக்கமே யாகுமென நவின்றார்மன்னோ. (உருகூ)

அதைமறுத்துநூலுணர்வே யாமென்றாரிவர்சிவன்முன் னாற்கீழ் நால்வர்க், குதயமதியெனத்திகழ்ந்து ஞானநல்கல்கடாட்சமன்றே வுரைமினென்றார், கதையுரைத்தேயென்றாரன் னவரையிகழ்ந்தொருகவிதை கழறிச்சென்றே, புதையுறுவேய்முளையிலரன் றோன்று நெல்லையடைந்துபலர் போற்றவாழ்ந்தார். (உகூ௦)

தமதுடற்சோதரன்மணமா தியமுடித்துப்பலபணுவல் சாற்றி வேற்கைக், குமரகுருபரனருளின் குறியினிலைத்திருந்திடுநாள் கொளுமவ்வூரில், விமலதவப்பெரியர்பலர் கூடியருள்விளையாடல் விளைப்பமேலாஞ், சமயமறிந்தொருமடா லயமுநந்தாவனமுமன்பிற் சமைக்கவெண்ணி. (உகூக)

முன்போலக்கடன்வாங்க வொண்ணாதுவேண்டுபொருண் முயன்றுசேர்த்திட், டின்போங்குமடமமைத்தல் குணமெனக்கொண் டெழிற்*றிருமந் திரத்தூரேகி, வன்போங்கவடதிசைநோக் குடன்றுயின்றார்குகன்கனவில் வயங்கிநீயுள், ளன்போடுபுகைக்கலமூர்ந் தணிக்கொழும்புக்கேகுதியென் றறைந்தான்மாதோ. (உகூஉ)

அந்தவுரைப்படிமறுநாட் பிரயாணம்புரிந்துவங்க மதனிலேறிச், செந்தகையவணிகர்சிலர் துணையுறச்சென்றேகொழும்பு சேரும்வேளை, வெந்தகைப்பொல்லார்பசுவா தியவதைத்தூன்விற்குமிடம் விளங்கலானோந், திந்தவிடத்தினுச்குவரச் செய்தானென்றே குகன்மே விதயநொந்தார். (உகூ௩)

---

* திருமந்திரத்தூர் என்பது தூத்துக்குடி.

அவ்வாறுசென்றுடன்வந் திடும்வ்ணிகர்மொழிவழியங் கவர்க ளாற்செய், செவ்வானத்திருமேனிக் குகன்றிருச்சந்நிதியினிற்றுன் சிலநாடங்கி, யொவ்வாச்செந்தமிழ்ப்பதிக மாதியசொற்றரங்கேற்றி யுற்றூர்செவ்வேண், மெய்வாக்குப்படியோரா யிரம்வெள்ளிக்காசவர் தாம் விருப்பாலீந்தார். (உசுச)

நெல்லையில் மடாலயந் தொடங்கல்.

பெற்றபொருட்டொகையுடன்மீண் டணித்திருமந்திரத்தின் வழி பெயர்ந்துநெல்லை, யிற்றமதுமனையில்வந்தவ் வூரின்வடபான் மனைகொண் டினிதுநல்லோர், றுற்றமைதற்கானமடஞ் செயத்துவக்கி மேடைவகுத் துள்ளநாளிற், குற்றமில்பூமலியுநந்தா வனத்தினுக்குப் புனலிறைப்பு குறையாதோங்க. (உசுரு)

பாறைக்கிணறு வெட்டுதல்.

கூபமொன்றுசமைத்திடில்வெங் கோடைகாலத்தினுக்குக் குண மாமென்னு, ஞாபகம்வந்ததுசெயற்குத் தெரிந்தவரைக்கொடுதுவக்கு நாளிற்றூப, தீபமெடுத்தொருமுளையங் கறைந்துவெட்டக்கருங்கன் மலைச் சிகரந்தோன்றி, யேபலர்நெஞ்சினுஞ்சலிப்பு விளைத்தது வேறிடத்தெடுத்த லினிதென்றுரே. (உசுசு)

கந்தனிவர்மனக்கனவிற் றேன்றிநன்னீரூற்றதனிற் காணு மென்று, னந்தவுரைப்படிமுயன்று சுரங்கவேட்டாற்கலுடைத் தாழஞ்செல்ல, வந்தபொருடீர்ந்துமிகும் வட்டியின்மேற்கடன்வாங்கி வாங்கிவேலை, மந்தமுறாததிவிரைவிற் செய்துவந்தார்கைமுழமை யைந்துமட்டில். (உசுஎ)

பொதியையிற் றவமியற்றல்.

வெறும்பாறையாய்வறண்டு போகாமனீர்க்கசிவு மேவலானீ, ருறும்பாரவூற்றுளதென் றெண்ணிமுயன்றிடுநாளி லுறுகார்காலம், பெறும்பான்மையானிறுத்திப் புனற்பெருக்க முறத்தவஞ்செய் பெற்றிநோக்கி, நறும்பூகப்பொழிற்பொதியைக் கேகியகத்தியன் கோயினண்ணினுரே. (உசுஅ)

அம்மலையிற்குறுமுனிவற் குரியபூசனைபுரிவோ னகத்தியப் பேர்ச், செம்மறைவேதியன்பிரம சரியனறுமுகனெதிரிற் செபஞ் செய்துற்றுன், மம்மாறுமம்முனிவ னெதிரிலிவரருந்தவத்தின் மருவி நின்றூர், வெம்மலவாதனை தவிர்மெய்த் தவத்தநுபூதியின்றிரமியான் விளம்பொண்ணுவே. (உசுகூ)

ஒருநாள்சாக்கிரக்கனவிற் றாதொருவன்காசிதமொன் றுதவி
னுன்கொண், டருளாரெந்தனிமுதல்வர் தமிழல்லாவேற்றெழுத்தா
யமைந்ததாலிப், பொருளாராய்ந்துரைப்பவரா ரென்றுநினைபோ
தொருவன் புலப்பட்டஃதுட், டருமாற்றமின்னதெனப் படித்துரை
செய்தனன்மிருவந் தனமுன்பால்யான். (௨௭௰)

வேண்டுவதொன்றுன்கிணற்றி னீர்வரச்செய்குதியதையான்
விரைந்துகாண்டற், கீண்டுவசித்துளனதுகண் டிடிலென்றேயம்
புகுவே னெனலேயென்றான், மூண்டுநம்மேலித்தகைய கேலியுரைத்
திடுபகைவன் முந்நீர்ப்பாரில், யாண்டுளனன்னவனூற் றினிற்கை
யெழுத்துளதுகொல்கண் டியம்புகென்றார். (௨௭௧)

சயிலமெனுங்குறிப்புரைசொற் றதன்பொருடான்குழந்தை
யெனச் சாற்றலுற்றான். மயிலிவர்வானருளாலக் கருத்துணர்ந்தச்
சமுஞ்சிறிது மகிழ்வுமுற்றார், பயிலுமெந்தச்சமயத்துக் குரவருஞ்சுப்
பிரமணியப் பண்பாமென்னுந், தயிரியமுற்றிருந்துமவ னிழிசமயத்
திச்சைமிகத் தழைத்துமேலோர். (௨௭௨)

பற்றுமுயர்சமயம்வருந் துறவும்விடுவான்கொலெனும் பயத்தை
நீக்கி, முற்றுதெளிவுறப்புரிவா னொருவிளையாட்டங்கொருநாண் முரு
கன்செய்தான், சிற்றுணர்வாருலகாதன் பெருமையறியார்குரவன்
றிருத்தாள்போற்றிச், சற்றுமறுத்தியானவழி முயல்கவுமாரப்புனிதர்
தாந்தேர்வாரே. (௨௭௩)

வயிணவத்துணைவர் காட்சி.

அகத்தியனுலயத்திலிருந் தொருநாண்மாலையில்வெளிவந் தனரக்
கோயின், முகப்பிலிருவயிணவவே தியர்களகத்தியப்பெயரோன்
முன்னிற்பேசி, யகத்திலெங்களெண்ணமிதென் றனரிவரம்மூவரெதி
ரணிக்கைகூப்பி, யுகப்பொடடியேனெனச்சொற் றனரவர்கையெடுத்
தாசி யுரைத்திட்டாரே. (௨௭௪)

உங்கண்மனக்கொள்கையென்ற தென்னென்றாரிளையவனே
னுசாவுகின்று, யெங்கள்குறையாதெனினிற் கென்னென்றான்மூத்த
வனவ் விளைஞற்பார்த்துத், துங்கமுறுகருமமும்பத் தியுமுடையாய்
ஞானமில்லாய் துலங்குமிந்தப், பங்கமின்மெய்த்தவவேடத் தினன்
வினவற்கிவ்வாறு பதிற்சொற்றுய்ய. (௨௭௫)

அகத்தியனுதியரெதிர்வந் திடினுமிவ்வாறுருமிடித்தாங் கறை
வாயன்றே, மிகப்பழகுநமதுநிலைக் கிதுதகுமோவென்றிவரை விருப்
பானோக்கி, மகப்பருவத்திவன்மொழியாற் சினமடையேலெங்களூர்
மன்னர்கோயில்,விகற்பமிலென்றம்பியிவ னெங்களைப்பெற்றிடுதாயும்
யாங்கள்வேண்டி. (௨௭௬)

மணஞ்செய்மனைவியரிருவர் தாமுமுள்ளா ரென்றனக்கோர்
மைந்தனுள்ளா, னிணங்குமவர்தமைவிடுத்துத் தவம்புரிந்துபயன்
பெறவேட் டிங்குவந்தேன், குணங்கொணெடியோனடியா ரென்ன
வாயளவின்மொழி கொடியேமல்லேம், வணங்கியெதிர்தோன்றியரு
ளெனவிரந்துபோற்றுநெறி வாய்ந்துள்ளேமால். (௨௭௭)

மிடிக்கனலோடுலகர்நிந்தைக் கனலாலும்வருந்தியது விளம்பற்
கொண்ணு, பிடித்தமனவுறுதியுடன் கலியாணதீர்த்தமதிற் பெரிது
வாடி, முடித்தமயிற்பீலியணி தருநெடியோற்கருதியுற்றே மூன்று
டோர்நாள், கடிக்கமலத்திருவளர்மார் பினனிளையோன்கனவிலொரு
காதைகூறி. (௨௭௮)

அதன்முடிவுவிளங்கவுரைத் தருளாதுமறைந்தனனு லதிகத்
துன்பாய், விதந்தெரிவான்வாணதீர்த் தக்கரைபோய்த்தவம்புரிய
விரும்பிவந்தோஞ், சுதந்தரமற்றிளைத்துளயா மழைக்கொதுங்கியிங்
கடைந்தோந் தோற்றுமின்னோன், சதங்கொளகத்தியப்பெயரோ
னுதலாலிவனிடத்தியான் சாற்றலுற்றேன். (௨௭௯)

நீயுமுயர்தவவேடப் பொலிவினனுலுரைத்திட்டே னினைந்த
தென்றிட், டேயுமிளையோனைவிளித் திவனிடமுன்னநுபூதி யியம்பு
கென்றான், றேயுமவன்முருகனன்ப னொருவனிருக்கின்றானந் தூநீர்
வேட்டுச், சேயகிணறொன்றுதொட்டு வருந்துகின்றானந்தவத்தின்
சிறப்புள்ளோனும். (௨௮௦)

கோடைகாலத்திலுமா யிரங்கோட்டைவிதைவிதைப்பு கொள்
ளுநீர்ப்பே, ரோடையதிலுண்டாமா மவனுறவாலெமதுதுய ரொழி
யுமாமிச், சாடைமொழிந்தவனவனுற் றிடுமிடஞ்சொற்றினை தனுற்
றளர்ந்தோமிந்தப், பீடையறவிளக்கானே னுயிர்விடுதல்குறித்துள்
ளோம் பிழையன்றென்றான். (௨௮௧)

வினவியிந்தத்தகையின்வயி னவருமிந்நாளிவ்வுலகின் மீதுள்ளா ரென், றுனலருமாச்சரியமடைந் தியானேயப்பாவியுங்க ளுள்ள வேட்கை, தனைமுடிக்குந்தகையுடையேன் றனுவலக்கிணற்றுல்வா தனைகொண்டேனித், தினமெனச்சொற்றவர்க்குணவா தியவமைத் தாருண்டுமிகு திருத்தியெய்தி. (உஅஉ)

நாங்கள்செயுந்தவநிசமாப் பலித்ததெனக்களித்திவர்பா னண் ணிவாழ்ந்தார், பூங்கமலத்தயற்புடைத்த புனிதவேளுரைத்தவண் ணம் பொதியைக்குன்றி, லெங்கலறவேயிருபத் தொருமூன்றுதினம் வசித்திட் டினிதினன்னுர், பாங்கருறப்புவியிலிறங் குபுதமதுதிருநக ரிற் பதிதலானுர். (உஅங)

வேணுவனப்பதியடைந்தவ் வேதியருக்குவகையுற விரும்பு பைம்பொன், மாணுறத்தந்தனுப்பினரங் கதுமுதனல்வாழ்விலவர் மகிழ்ந்தார்சிந்தை, நாணுறச்செய்கற்பாறைக் கிணற்றின்முயற்சியை விரைவி னடத்தனுடி, யேணியொன்றிற்குரியபெரு மூங்கில்கொ ளச்செங்கோட்டை யெய்தினுரே. (உஅச)

இடைவழியிற்றென்காசி யெழிற்றிருக்குற்றுலமுத லிறைஞ்சி யேகி, விடையுகைப்பார்தருங்குகன்கை வேலினுக்கக்கிணற்றினிடை விளங்குநீராற், றடையிலபிடேகமியற் றிடிலலதன்னம்புசியாச் சாத நோன்புற், றுடையசெங்கோட்டையிற்சொக்க லிங்கப்பேர்வே ளாள னுரியவேந்தன். (உஅரு)

கண்டுவணங்கிடவவன்வீட் டினிலிருந்துமூங்கில்விழை கணக் குச்சொல்ல, மண்டுதனதேவலா ளரைப்பொதியைக்கனுப்பியொரு வாரத்துள்ளாய்க், கொண்டுவரச்செய்தனனெண் மூங்கில்வெட்டிவந் தனர்தங் குடியாநெல்லைக், கண்டுசகடத்திலவற் றினையனுப்பித்தா முமவ ணடைந்தான்றே. (உஅசு)

வந்துகொடுமுடித்தலத்தி னெட்டர்களுக்காளனுப்பி வரவ ழைத்தே, யுந்துகருங்கற்கிணற்றிற் பாறையுடைத்தாழமுற வுழைத் துப்பார்த்துஞ், செந்துவர்வாய்க்கங்கையந்தா தியும்பாறைக்கிணற் றந்தா தியுஞ்சொற்றிட்டுஞ், சிந்துபுனல்பொங்கியெழுந் திலதுகசிந் திருந்ததனுற் சிந்தைவாடி. (உஅஎ)

இனிப்பொருளான்முயற்சியெடேன் றிருவருட்பேறடைந் தாற்பி னெளிதிற்காண்பேன், மனித்தர்பலர்கற்பாறை யனையமனத் தினராகி மயங்கித்திய, தனிக்காமக்குரோதமத மாதியவாற்கடின முறுந் தன்மைமாறிச், செனித்திறவாக்கதிவழியா மிரக்கமுறவுங் காண்பேன் றிண்ணமென்றார். (உஅஅ)

பாறைக்கிணற்றின் சூக்குமம்.

புவியிலுளோர்மனமாங்கற் பாறையினிற்கடினகுணம் பொறு மைகோபந், தவிரவருட்கவிப்படையா லுடைத்திரக்கமன்புபொறை சாந்தமாதி, நவிலுயர்சற்குணநீர்பொங் கிடவிரும்புஞ்சூக்குமத்தை நமக்குத்தூலத், திவிதம்வெளிக்காட்டியதோர் விளையாட்டேயது வருங்கா லிதுவுமுண்டே. (உஅகூ)

வேறு.

பலதல சஞ்சாரம்.

பொருட்கடன் வெகுவாக்கொண்டு புந்திசோர்ந் துறுநாண் மேலாந், தெருட்பொலி வுடையார்போற்றத் தேவையம் பதியிற் செவ்வே, ளருட்பெருக் கதனாலன்பா யவிர்சிதம் பரப்பேரோனுக், குருப்பொலி யாண்சேய்தோன்ற லுணர்ந்துபின் சிலநாள்போக்கி.()

மதுரையம் பதியைத்தாண்டி வளமலி தேவையூரிற்
புதுமைசேர் சிதம்பரப்பேர்ப் புண்ணியன் மனையினண்ணிக்
குதுகுலத் தமிழால்வேலன் குரைகழற் றுணைக்கந்தாதி
முதுபுகழ்க் கவிதைப்பிள்ளைக் கவிமுதன் மொழிந்தான்றே. (உகூக)

அத்தனிச் சிதம்பரப்பே ராளனு மவன்கனிட்ட
ருத்தமர் மூவர்தாமு முரிமைமிக் கொழுகலுற்றார்
சித்தமுழு டுவகைபொங்கித் தேயமா னிடரிலென்னை
யித்தகை யினனென்றோர்ந்தோ ரிவரென்றோர்* கவிதைகூறி.(உகூஉ)

வியந்தன ரிவர்க்குவேண்டும் பொருளளித் தனர்கொண்டேகித்
தயங்கல்செய் கடன்றீர்த்திட்டார் சாற்றுமவ் வூர்க்குப்பின்னுஞ்
செயங்கொளச் சென்றுகாரைத் திருநகர்ப் பதிகமோதி
நயங்கொள்பல் லூருஞ்சென்று நறுந்தமிழ் பொழிந்தார்மன்னோ. ()

---

* சேயவேளாதியாய தேவரும் பொதியைக்குன்றின்
மேயவன் முதலாவுள்ள மேலவர் தாமுமன்றித்
தேயமானிடரி லென்னைத் தெரிந்தவர் தேவகோட்டை
வீயன்ன ரானலேன மேலவீட்டினி லுள்ளோரே.

தேவையூ ரிடத்தில்வாசஞ் செறியுநந் தனத்திற்செவ்வேண்
மாவைவென் றிடுவேலாதி மறைந்தணிக் குழைக்காதோடுட்
சேவைதந் தந்நாள்போகன் றிகழண்ட முகட்டிற்சென்று
கோவைநேர் சொருபசித்தர்க் கும்பிட்டா னவர்கள்கண்டு (உகூச)

இளஞ்சித்த னென்றூர்கண்டா யிதனைநீ யறிதிவீணே
யுளம்பற்று திருத்தியெய்தே லூரியசித் திகள்பெற்றப்பாற்
களங்கமின் முத்தியெய்துங் கனதவம் புரியென்றிட்டான்
விளங்கவிக் கதையைநன்கு நானிலைச் சதகம்விள்ளும். (உகூரு)

நெடுங்குள மென்னுமூரி னிலவொர்பார்ப் பனப்பெண்பா
லடும்பசிக் குணவுநல்கி யதன்விலை விரும்பாளாகிக்
கடுந்தவ முடையோர்கேட்குங் கருத்திரண் டிவர்பாற்கேட்டே
யிடும்பதி லுகந்தனுப்பி யினிய†வெண் கவிபெற்றாளே. (உகூசு)

விளங்குகோட் டூரிற்சைவன் வீட்டின்கூ டத்திலன்ன, முளங்கொளப் படைத்தவாற்றை யுவந்தோர்‡வெண் பாச்சொற்றிட்டார், தளங்கொள்வெண் கமலவாணித் தாயுன தருமையிங்கியார், களங்கமற் றறிவாரென்னக் கழறியே கினளோர்நாளே. (உகூஎ)

அந்தயாத் திரையிலையாற் றந்தணச் சிறுவனிந்தச்
செந்தமிழ்ச் சரபர்பூண்ட திருமலி பொதுவேடங்கண்
டிந்தமா மருள்வேடத்தை யிடச்சொனே னெவனென்றிட்டான்
சந்தவேள் வியிலூன்றின்னச் சாற்றினேன் றனென்றாரே. (உகூஅ)

பழனியம் பதியிலேகிப் பரமசற் குருவாஞ்செவ்வேள்
கழல்பணிந் தேத்தியைவர் மலைகவின் கொழுமம்போற்றிச்
செழிபொழின் மலிவிசாலத் திரிமூர்த்தி மலையைவாழ்த்தி
யழகிய சோழவந்தா னவிர்கந்த சாமித்தூயன். (உகூகூ)

---

† நெடுங்குளத்திற் பார்வதியை நேராமோரம்மை
கொடும்பசியைத் தீர்க்குங் குணத்தா—ளிடும்பரிசு
வேண்டாதா ளுண்மை விவேக மிகவுடையா
ளாண்டா னருளே யவள்.

‡ கோட்டூரிற் சைவன்முகங் கோணமற்கூடத்தி
வீட்டு தென்னையோலை யிலைகொணர்ந்து—போட்டெனக்குச்
சோறு மிலைக்கறியுஞ் சுண்டைக்காயும் பருப்புச்
சாறு மிட்டுப் பெற்றான் றவம்.

உடன்றுணை யாகிச்சேர வுயர்புகை வண்டியேறித்
திடம்பெறு கொடுமுடிப்பேர்த் தலந்தெரி சனைசெய்தேபின்
னிடம்பெறு கோயமுத்தூ ரிபமுகன் செவ்வேளீசன்
படங்கொணு கணைகொண்மாய னுதியர்ப்பரவினூரால். (௩௦௦)

வேறு.

பேரைநகர்ச் சாந்தலிங்கப் பெருமானைச் சிவனூரைக்
காரைநிகர் திருமாலைக் கவிபாடித் துதித்திட்டா
ராரையுறழ் தமிழெழுகூற் றிருக்கையெண்கூற் றிருக்கையணி
சீரைநவி லொன்பதுகூற் றிருக்கையதுஞ் செப்பினர்பின். (௩௦௧)

பத்துக்கூற் றிருக்கைவரை பாடியதை யிரட்டித்து
வித்துவஞ்சேர் தசாங்கக்கூற் றிருக்கையொன்று விளம்பியருட்
சித்துமலி மருதமலை திருவவினா சியும்போற்றித்
கொத்துமலர்த் திருமுருகன் பூண்டியைக்கை குவித்தாரே. (௩௦௨)

பெருமானல் லூர்திருப்பூர் பெருமைமலி திருச்செங்கோ
டருளார்பவ் றலம்போற்றி யணிச்செவ்வாய்ப் பதிகண்டு
திருவார்சே லப்பதியிற் சிவனுமையா தியர்ப்போற்றி
யருகோர்மண் டபத்தினிலுற் றயிலுணவட் டருந்தியபின். (௩௦௩)

சேலத்தில் விபத்து நீக்கம்.

இவரெழுந்து போகும்வித மேதுமறி யாதொருவ
னவணிருந்த வடுப்பின்கல் லதனையெடுத் தெறிந்திட்டான்
றவர்தலைமேற் கலைதடவித் தறைமிசைவீழ்ந் ததுகண்டு
நவமலியுங் கந்தசா மிப்பெரியோ னடுநடுங்கி. (௩௦௪)

மூர்ச்சையாய்க் கீழ்விழுந்தா னதுகண்டு முருகேசன்
கூர்ச்செவ்வேல் வழிபாடு கொண்டவிவ ரவற்றேற்றி
*நீர்ச்செல்லே யெனத்தமிழா னிகழ்பதிகம் வகுத்தருளி
யூர்ச்சென்னைக் கேகியணி யொருபாவோர் பவ்துசொலி. (௩௦௫)

புதுவை சேர்தல்.

வெண்பாவந் தாதிமுதல் விளங்கியரங் கேற்றிமிகு
நண்பாளர் தொழத்தென்பா னணுகிவழிக் கொண்டேகித்
திண்பாகற் பொழிற்புதுவை சேர்ந்துதிரி வந்தாதி
வண்பான்மைத் திருப்புகழா தியவகுத்துத் துதித்தனரால். (௩௦௬)

* நீர்ச்செல்—நீருண்டமேகம்.

திருமாலுக்கொருபதிகஞ் செப்பியநா ளவன்கனவிற்
பொருவாமெய் வயிணவவே தியவிளமைப் புத்திரனு
யருணீறு மேனிமுழு தணிந்திருதோ ளினுமிரண்டு
பெருநாமக் குறியிலங்கப் பிறங்கினன்கண் டிவரவனே. (௩0எ)

கட்டிமுத்த மிட்டுனினத் தினர்காணிற் சகிப்பாரோ
மட்டில்சினத் தாலுனுயிர் வதைத்திடவுந் துணிவாரே
யிட்டிருக்கும் வேடமின்றி யியலுமுன்ற னுருகோலந்
தொட்டியைந்தால் வெறுத்திகழுந் தூர்த்தனே யானென்றூர்.(௩0அ)

வந்தவனோ் மாற்றமுந்தான் வகுத்திடா திவர்கரத்தின்
சொந்தவிசி றியைவாங்கித் துகளிலிரு கலைக்குறிக
ளிந்தவிசி றியிற்புனைந்த தெனக்குவகை யளித்ததென்றான்
சந்தமுறு மவ்வுரையைச் சத்தியமாக் கிடுமாறே. (௩0கூ)

இருகலையின் பிணக்கமிலா திகத்தில்வயி ணவரெல்லா
முருகடிமைத் திரம்பொருந்த வுளுற்றுதியென் றிரந்திட்டார்
திருமருமார் பினன்கனவிற் றிகழ்ந்திவிரு பகுதியின்முற்
றருகுறிநெற் றியிற்புனையச் சாற்றினனப் போதிவர்தாம். (௩க0)

திருவருட்சீ ரளித்துலகைச் சீர்படுத்துந் திரமளித்தாற்
பெருமையுற வதுசெய்வேன் பிசிதமுண்பார் குடையின்கீழ்
மருவவிட்டா யென்றெல்லா மாற்றிவெண்ணீ றென்றுதம
துருமுழுதுந் தரிக்குநெறி யுற்றனர்பி னொருநாளில். (௩கக)

மூவாறு கண்ணுடைய முருகவே ளேயெனத்தந்
தேவாகு முருகன்மிசை செந்தமிழின் பதிகமொன்று
நாவாரத் துதித்தனர்பின் னல்வாயின் முகத்தானுக்
கோவாமும் மணிக்கோவை யுரைத்தரங்கேற் றிடச்சென்றார்.(௩கஉ)

வேறு

அந்தச்சபையூ டொருபுலவ னகங்காரத்தோ டழுக்காறு
சொந்தக்குணமாக் கொண்டுள்ளோன் றூயபரமொன் றேயடியா
ரெந்தப்படிநா டினுமவ்வா றிலங்குமெனுமெய் யுணர்வில்லான்
மந்தக்குணத்தான் புராணவழி மயங்கித்திரியு மதியீனன். (௩க௩)

சைவசமயஞ் சிறந்ததெனத் தக்கித்துழல்வோன் றவமார்க்கத்
தெய்வவழிபா டுபாசனையிற் சிறிதும்பழகான் சிவஞானங்
கைவந்துளவெந் தவமுதல்வர் கவிகேட்டுள்ளங் கனன்றதிகப்
பொய்வஞ்சகமாப் பத்திரிகை பொறித்துவெளியிட் டனனந்தோ. ()

இந்தப்படியெற் பழித்தெழுது மிகலோனியாவ னென்றி
வர்தாஞ், சொந்தக்குழுவில் வினவிட லுந்துணிந்தியானெனவன் னவ
னெதிர்த்துச், சந்தக்குமரற் கனல்விழிகள் சாற்றவிலையெந் நூலினு
மென், றுந்தச்சினந்தே வாதித்தா னுறுதீவினையின் றொடர்பாலே.()

ஐந்துமுகத்துச் சதாசிவனுக் கமைந்தவிழிமூன் றேயென்று
மிந்துவிழியைந் தினன்விழியைந் தெரியின்விழியைந் துறப்பதினைந்
தந்துமவனென் றுருமுறைத் தாண்டவழக்க மின்றென்றும்
வந்துபகர்ந்த மொழியினுக்கு மாறுத்தரமாங் கிவர்புகல்வார். (௩௧௬)

சங்கரனுக்கு மம்பிகைக்குந் தழற்கண்ணுளது நிசமாகி
லங்கன்னவர்தங் குமாரனுக்கஃ தமையாதுறுத லெவ்வாறே
திங்கண்முகப்பார் வதிகற்பிற் சிதைவுற்றனளோ வதுவன்றி
யங்கணிலத்திற் றுய்தந்தை யமிசஞ்சேய்கட் கமையுமன்றே. (௩௧௭)

நெற்றிக்கண்ணு றனற்பொறியாய் நிமலனளித்த செவ்வேட்கவ்
வெற்றிகண்ணின் றெனக்குளறும் வெள்ளைமதியென் மதியேயோ
பற்றித்தவஞ்செய் தநுபூதிப் பரமஞானத் துறைபழகில்
மற்றிச்சரதம் வெளியாகும் வாய்ப்பேச்சதனால் வாராதே. (௩௧௮)

அட்டோத்திரத்திற் றிரிசண்ணேத் திரனென்றொருபே ரான்
றோரா,லிட்டோதிடுத லதும்பொய்யோ விதுவுமன்றி வடநூன்முன்,
விட்டோதியவாய் வியாதமுனி மிளிர்பன்னெட்டுக் கண்ணுளதென்,
றுட்டோற்றிடச்சொற் றனன்றமிழி னுரைத்தோன்புகலா தொழிந்
தனனே. (௩௧௯)

சைவாகமத்திற் சதாசிவன்றன் சகளவடிவ பாவனையின்
மெய்வாசகமாய் முகந்தோறும் விளங்குமுக்க ணென்றுளதே
யிவ்வாய்மைகளெல் லாமறவிட் டிகன்றுபேசன் முறையன்றென்
றுய்வாசகமோ தினரவன்று னுடனச்சபைநீங் கினனிவர்பின். (௩௨௦)

குமாரபுரியடைதல்.

அவ்வூர்விடுத்துப் பலதலஞ்சூழ்ந் தணியார்குமார புரியூரில்
வெவ்வூறொழிக்குஞ் சண்முகமா முனிவன்மடஞ்செய் தமைவினவிச்
செவ்வூழ்க்கந்த சாமிமுனி சேரவவண்போய்ச் சிலகாலம்
வௌவூகத்தோர் மூவர்களும் வசித்தார்நடந்த வகைபலவே. (கஉக)

குமாரபுரியிற் சண்முகப்பேர் கொண்டமுனிவன் பூசிக்குஞ்
சமானமறுசீர் நடராசன் றனக்குப்பதிகத் தொடைசாத்தி
யுமாபதியைமா யவனையரு ளும்பன்முகனைச் செவ்வேளைத்
தமாதரவினு லம்முனியைத் தமிழிற்பாடித் துதித்துறுநாள். (கஉஉ)

ஏழாமிலக்கணமியற்றல்.

ஆறுசமயங் களுந்தாண்டி யப்பாற்போந்த வதீதநிலை
யேறுமுனதுள் ளநுபூதிக் கேற்பமுன்னு றிலக்கணத்திற்
கூறுமவற்றிற் சிலவிரித்துக் குலவுமேழா மிலக்கணமென்
றூறுதவிரப் புகலுகென்றானுரிமைக்கந்த சாமிமுனி. (கஉங)

அந்தவாறே சொல்லிமுடித் தரங்கேற்றியபி னம்மடத்திற்
சொந்தமுறுசண் முகமுனிவன் றூயதிருவள் ளுவனூலின்
றொந்தமுளதோர் தோழியெனத் துலங்கக்குறட்பாப் பப்பத்தில்
வந்தவதிகா ரம்பிரித்து வயங்கப்பகரென் றுரைத்தனனே. (கஉச)

மனுநெறித் திருநூலியற்றல்.

வருக்கக்குறணூ லிவர்சொலுங்கால் வாய்ந்தவுரைதான் வரைந்துரைத்த, பெருக்கவுணர்வார் தருகந்த சாமிப்பெயர்மா தவமுனியு, முருக்கமுடன்சொல் லுதியென்று ணோராயிரத்து முன்னூறு, யிருக்கநூற்று முப்பதா மதிகாரத்தி லிசைத்தருளி. (கஉரு)

அதற்குப்பெயர்தான் மநுநெறிப்பே ரமைந்ததிருநூ லென்றமைத்துப், புதற்கொப்புறுபா வலர்பாவப் பொதுவிலரங்கேற் றினரதன்பின், குதர்க்கமறுசண் முகமுனிவன் கூத்தாடியதாட் சிவனுருவ, மதர்த்தவிழிசேர் சிவகாம வல்லிமுருகன் கணநாதன். (கஉசு)

வாதவூரா னெனுமிவர்கள் வடிவஞ்செம்பொன் னலமைத்திட்
டேதமறவே தாகமத்தி னினியவிதியிற் றாபித்தான்
பேதமறப்பல் பிரபந்தம் பேசியரங்கேற் றினரவைமுற்
றோதவிந்நூ லிசையாதா லதன்மேனடந்த துரைப்பேனே. (கஉஎ)

அணிற்காத்தல்.

ஒருமண்டலத்தின் பூசைமுடி வுற்றபின்ன ரதற்காச்செய், பெருமண்டபநேர் பந்தலிணைப் பிரித்தாரணிற்குஞ் சிரண்டொரு கூட், டருமையுறக்கண் டெடுத்திவர்முன் வைத்திட்டனர்கண் டகம் பதைத்தே, கருணைநெடுமா யணைநோக்கி யிந்தவுயிர்கட் காக்குதி யேல். (ருஉஅ)

உனக்கோர்பதிகம் புகல்வேனென் றுரியதிருநீ றெடுத்ததன்மேற்
கணக்கத்தெறித்தா ரணிலிரண்டு கடிதினெடுத்தே கியததுகண்
டினத்தாராகு மடியவர்க ளின்பமடைந்தா ரிவரன்றே
மனத்துன்பறவின் றணிற்காத்த பெருமாளேயென் மகுடமுற. ()

பதிகமுரைத்தா ரவ்வாறப் பதியினீங்கிப் பசுவினங்கள்
விதியிற்பூசித் திடுமாதை விளங்குமுத்தாம் பிகைத்தாய்க்கு
மதியுற்றிடுசெஞ் சடையபிரா மேசன்றனக்கு மயின்மீது
கதியுற்றிடுவே லவற்குமுயர் களிற்றுனனற்கும் பதிகங்கள். (ருரு௦)

சிதம்பரத்தலமடைதல்.

பாடித்துதித்துப் பலதலங்கள் பணிந்துதில்லைப் பதியூடே, யாடித்திகழுஞ் சிவன்சேவைக் கடைந்துசிவகங் கையின்மூழ்கி, நாடித்திருநீ றக்கணிந்து நளிர்வெண்கிள்கோ வணங்குலவ, நீடித் துளமெய் யன்பொடுசென் னெறியிலிவர்பா னெருங்குமன்பால். ()

குறிஞ்சிப்பாடி யம்பலவா ணப்பேர்முனிவன் குகவேட்கே
யறிந்தபுலமைத் திறமதனு லனந்தம்பாடித் துதிக்கின்றுய்
செறிந்தவெங்க ளப்பனுக்குச் சிறிதேதேனும் புகலென்றான்
மறிந்தபதிற்சொ லோதாமுன் னிவர்பாற்சமையல்மடைவல்லோன்.

இவ்வாலயத்திற் றேங்குழல்கள் பெரிதாயிருக்கின் றனவென்று
னவ்வாசகங்கொண் டுங்களப்ப னவனுக்கதுதா னேயளித்தா
லொவ்வாக்கவிக ளாயிரமீங் குரைப்பேனென்று ரவனுள்ள
மெவ்வாறேவென் றடங்கிமனத் தியன்றவேட்கை யியம்பினனே. ()

அம்பொற்சபையிற் பூசைமுடி வாகித்திருநீ றளித்தவுடன், செம்பொற்புறுதேங் குழலிரண்டு திகழுஞ்சுகிய னப்பமுட, னம் பொற்றுமையா ரொருபனவ னன்குகொணர்ந்தங் கிவர்க்களித்தான், றம்பொற்கருத்தி னணிவியந்து தாணைவிரித்தேந் திடுசமயம். (ருருச)

பார்த்தம்பலவா ணப்பெயரோன் பதறியெங்க ளப்பனது
சீர்த்தகருணை யென்றுரைத்துச் சிந்தைமறந்து கீழ்விழுந்தான்
கூர்த்தவிழிகள் புனல்வெள்ளங் கொண்டதிவரன் னவற்கூவி
யார்த்தகுரலாற் செவியிலுங்க ளப்பன்செயித்தா னெழுகென்றார். ()

எழுந்தங்ககன்று ரதுமுதலம் முனிவன்றில்லைக் கினியதுதி
செழுந்தாதுகுபூங் கொன்றையெனச் செப்புமாறே தூண்டினனல்
தொழுந்தங்கருத்தி னன்பதனுற் பதிகமணிமா லையுமிதழ்க
ளெழுந்தாவந்தா தியும்புகன்று ரம்மாதவனுட் களித்தில்லான். (௩௩௬)

தில்லைத்திருவாயிர மியற்றல்.

சிலநாள்கழித்தன் னவன்கயிலை சேர்ந்தபின்ன ரொருநாளி
லுலகோடுடனு மறந்தநிட்டை யுறும்போதந்த முனிவடிவாய்ப்
பலமாநடைகாட் டுநெருங்கிப் பரமன்வந்தா னிவர்தில்லைக்
கிலகாயிரம்பாட் டோதாமை யெண்ணிப்பயந்தார் தெளிந்தாரே. ()

செப்புமந்நாண் முதற்றில்லைத் திருவாயிரம்பா டடத்துவக்கி
யொப்புமாறு முடித்திட்டா ரோதுமந்நா ளிவர்கனவிற்
றப்புமருவாக் கிழவடிவாத் தக்கதிருவா சகத்தின்பின்
னிப்புவியிற்றில் லைத்திருவா யிரமென்றீச னிசைத்தனனே. (௩௩௮)

அந்தத்திருவா யிரநூலை யணியார்தில்லை யாலயத்தின்
சந்தக்கனக சபையீசன் றனதுபதத்திற் றரித்தருச்சித்
தூந்தற்புதமா மாயிரக்கா லுறுமண்டபத்தி லரங்கேற்றிச்
சொந்தக்கருணை யடியர்பலர் துதிக்கச்சிறந்து துலங்கினூர். (௩௩௯)

வேறு.

திருக்கோவலூரில் பேதவைணவ சம்பாஷணை.

அவ்வளவிற் றில்லைவிடுத் தருட்கோவலூரை
யடைந்துநெடு மாயனுக்கா மருந்தமிழ்ப்பாவோதிச்
செவ்வடியிற் புனைந்தரங்கேற் றியபோதுசிலர்தாந்
திகழும்வட கலையுடையோர் தெண்டனிடும்பெருமை
வெளவுமொரு பெரியனுள னவனிடநீயேகி
வாஞ்சையுறச் சிலவசனம் வழங்குதனன்றென்று
ரிவ்வசனங் கேட்டிவரன் னவனுறுந்தானத்திற்
கேகினரங் கிருப்பவருள் ளேகலெனத் தடுத்தார். (௩௪0)

ஒருவாறு பதிலவர்க்குச் சொல்லியுட்சென்றனரங்
குள்ளவனிங் கேனீவந் தனைபோவென்றுறுத்தான்
றிருமால்வீ ணெனவிகழுஞ் சைவனெனவென்னைச்
சிந்தைசெய்யே லவனேயெத் தேவுமெனக்கொள்ளும்
பெருவாய்மை யுடையேனென் றனர்பின்னும்வெறுத்துப்
பேசினனின் குணம்பலராற் பேசிடக்கேட்டிங்கே
வருவேனைச் சினவேலென் கருத்தறியென்றுரைத்து
மனமிசையா திகழ்ந்தனனுள் வருந்தியகன்றனரே. (௩௪௧)

அகன்றுபெண்ணை மூழ்கியருட் டிருநீறுகண்டி
அணிக்கீள்கோ வணங்காவி யருண்மிகுதண் டேந்தித்
திகழ்ந்தமுகத் தெளிவினுடன் வரும்போதன்னவன்றன்
சீடர்சிலர் வரக்கண்டு சிந்தையகமிகுந்தே
யிகன்றவிர ணியன்வீட்டுத் தூணினும்வாழ்ந்திடுமெம்
மிறைவனருட் பெருமையுமக் கெட்டாதென்றனரவ்
வகன்றவறி வினர்தெரிகிச் சயம்வினவியன்னு
ரவனிடமோ தினர்தெரிந்தே யனற்புழுவொத்தயர்ந்தான். ()

பின்னுமவற் சார்ந்தவர்வந் திவரிடமுன்றனைநேர்
பேசிமகிழ்ந் திடவெமது பெரியோன்வேட்டனனென்
றுன்னும்விருப் புடன்மொழிந்தா ரிவரதனுக்கொன்று
மோதாதுற் றனரவண்ண மொன்றுபடச்சேர்த்தே
மன்னுரிமை யுறச்செய்யத் திருவருள்கூட்டிலதான்
மறைமுதலாம் பலகலைதேர் வல்லவரானாலும்
பன்னுமறி வடைவரிது சற்குரவன்மொழியிற்
பழகியடி யவர்குழுவிற் பதிந்திடுவோர்க்காமே. (௩௪௩)

அதன்பின்முது குன்றமுதற் றலம்பலகண் டேத்தி
யவிர்புகைவண் டியிலேறி யாலவாய்முதலா
விதந்தசிவ தலங்கடிரு வரங்கமுதலாம்பல்
விண்டுதலம் பணிந்துதமிழ் விளம்பியருணெல்லைக்
கிதம்பெறவே சென்றுவசித் திருந்தனர்கற்கிணற்றி
லின்புனல்வா ராமையெண்ணி யிதயமிகத்தளர்ந்து
பதம்பொலியும் படைவீட்டுப் பதிகமாறும்
பகர்ந்தனரோர் நாள்கனவிற் பன்னிருகைக்குமரன். (௩௪௪)

வெள்ளைநிறத் திருநீறு மேனியெங்கும்பூசி
விளங்குமக்க மாலையுடன் வெண்கலையும்விளங்கத்
தள்ளைநிகர் கருணைமிகுந் திவர்கிணற்றினருகிற்
சார்ந்தனன்கண் டிவர்வினவுஞ் சமயமவன்றமியேன்
கள்ளைவடித் திடுமலர்நந் தாவனத்துக்கெனவோர்
கனகூபந் தொட்டனனுட் கருங்கன்மலைதோன்றி
யெள்ளைநிகர் களிப்புமின்றி வருந்தவிட்டதன்ன
மின்றியநோன் புடன்வருந்தி யிருக்கின்றேனென்ன. (௩௪௫)

ஓதிமறைந் தனனிதனை லிவரவனையவனே
யுற்றவிவ ராமெனுநல் லுண்மையநுபூதி
பேதியா தறிதலெளி தாயெனைப்போல்வார்க்கும்
பிறங்கியதன் றேவறியார் பிழையுறப்பல்வாறய்
நீதியாராய்ந்தவர்போல் வாயளவிற்பேசு
நீர்மையிலென் பயன்றெய்வ வுபாசனையினிலைத்துப்
பாதிதா னதுபாதி யென்றுமுன்னோறிந்து
பகர்ந்திடுமத் துவிதமதன் பண்புரைக்கொண்ணுதே. (௩௪௬)

ஒலிய லந்தாதி முதலிய நூல்களியற்றல்.

அகத்தியனோ தியபிரபந் தத்தொகையாந்தொண்ணூற்
ருறினின்மே லாகியருந் தமிழ்மகுடமாகு
மகத்துவஞ்சேர் முதலொலிய லந்தாதிபொதுவாம்
வண்பரத்துக் கறுபத்து நான்குகலையாக
வுசப்பவொரு முப்பதுவண் ணக்கவியால்விளங்க
வோதியரங் கேற்றினரிவ் வுலகிலிதுகாறு
மிகப்பகரும் புலவரெவ ரும்புகலாவாறே
விளங்கேகத் தாளிதழ கலந்தாதியொன்றும் (௩௪௭)

சிவனேக பாதத்தந் தாதியரிக்கதுபோற்
றிகழவுரைத் தவற்றுரையுஞ் சிறக்கவரைந்தனர்பின்
றவமார்க்கத் தினர்பலநூ லாய்ந்துழன்றுவாடித்
தளராதுள் ளுறுதியுறச் சகலமுமுள்ளடக்கி
யுவமானத் தாலுமநு பவத்திறமையாலு
முரைத்தனர்தி யாநுபூதியென்றோர்வேத
மவமேபூ மியிற்றிரியு மென்போல்வார்க்கதனி
னருமைதெரி வரிதாகு மதுவன்றிப்பின்னும். (௩௪௮)

கருமமுயர் பத்தியுண்மை ஞானமெனுமூன்று
காண்டமுற மூந்நூறு கவியிலெல்லாமடங்கத்
திருமலிகௌ மாரமுறை யோதினர்பின்சதகந்
திகழுந்தி யுடன்ஞான வந்தாதிமுதலாப்
பொருவருநூ லினம்பலசொற் றருணகிரிநாதன்
புகழ்ச்சரிதங் காவியமாப் புகலுகெனக்குகவே
டருமொழியா லுரைத்தருளி யாறெழுத்தின்மகிமை
சாற்றுமலங் காரமொடு படைவீட்டுச்சந்தம். (௩௪௯)

சுந்தரனோ தியதிருத்தொண் டத்தொகையின்றுணையாத்
துலங்கவுயர் கவுமாரத் தொகையெனவோர்பதிகஞ்
சந்தமுறு புராணநெறிப் படியோதித்தமிழிற்
சாற்றும்விதி நூற்கடங்காக் குவிபாவோர்பஃது
வந்ததிரு வருணுட்ட மாதியநூலருளால்
வகுத்தனர்முன் பின்னுக வரிசையுரைக்கறியேன்
சொந்தமுடன் குகவேளின் னவர்மனத்திற்றோன்றிச்
சொலுமிதன்மு னிவ்வுலகிற் றுலங்குகவியொன்றில். (௩௫௦)

விட்டுணு கமலயோகி விவரம்.

தெய்வவுபா சனைவழியிற் சென்றருளைப்பெற்றோன்
றிகழ்பெயர்விட் டுணுகமல யோகியென்பானொருவன்
பொய்வழியா மதவாத முழுதுமறவுண்மைப்
பொதுவழியெல் லோருமுறப் புகன்றுமறைச்சமய
மெய்வகைமா ளாமலருட் சமரசநாட்டினன்பின்
விளங்குமுயிர்க் கொலையினொடு புலையுமிலாதொழித்தான்
செய்வகையோர் வருங்குருட்டு மதங்களறச்செகுத்தான்
செகத்திலுளோர் பின்னுமூன்று திரிந்தனரென்றனனே. (௩௫௧)

பராசத்தி தேரிசனம்.

சங்கரமா முனிவனுட னொருகனவிற்றமிழின்
சங்கரனு மிவர்புலியா தனத்திலிருந்தரிய
வங்கணமுற் றுரைகூறி யிருந்தனரச்சமயம்
வாய்ந்தபரா சத்தியுல கெல்லாமீன்றளிக்கு

மங்களகல் யாணியிரத் தினசிம்மா தனத்தில்
வயங்கியகோ லாகலத்தைக் கண்டுமனமகிழ்வாய்ச்
செங்கமலப் பதத்தில்வணங் கிடுமுறைமைமறந்து
செகத்திலறந் தேய்ந்துபவஞ் செழித்துயிர்கள்வருந்தல். ()

கண்டுமிரங் காதவுனக் கிந்தவிறுமாப்பேன்
கழறுகென்றூர் பாட்டியெனுங் கனவுரிமைப்பண்பு
கொண்டுரைத்த மொழிவினவிச் சிறிதுமுககமலங்
கோட்டினளப் பெருந்தகைமை கூறுமளவினதோ
மண்டுறுசொப் பனத்தினுந்தன் பயன்கருதாதுலகம்
வாழவிரும் பெங்குரவன் மனிதவுருவெமது
தொண்டுகொளக் கருணையினு லெடுத்தவருண்மாறுத்
தொல்பரத்தின் சகளமெனச் சொல்லுவதெந்துணிவே. (௩௫௩)

உலகசமட் டியிற்றெய்வ பத்திநெறிசிறந்த
வொருதவனு யெமதுமனத் துரியபரம்பொருளா
யிலகுதிருப் புகழ்முருக தாசதண்டபாணி
யெழின்மிகுவண் ணச்சாப ரியம்பியநூலனந்த
நலமுறச்சென் றருளாட லியற்றுபதியனந்த
நடத்தும்வினை யாட்டனந்த நானுரைக்கவசமோ
குலவுமநு பூதியின்ன மொன்றுவிரித்துரைத்துக்
குறைவறுமெய்ப் பயனடையக் குறித்ததெதென்றன்மனமே. ()

அற்புதக்காட்சி.

ஒருதினமோர் கனவிலிவர் வடதிசைநோக்கினரா
யுற்றிடுபோ தொருவனறு மலர்வகைகைக்கொண்டோன்
றிருமணிலங்கியமுகத்தோ டிவாருகிலெய்திச்
செறிமலர்க ளாசியம்போற் சிதறினனங்கிவர்மேற்
கருணைநிகழ் குறுநகைப்புக் காட்டுபுபின்வாங்கிக்
கருடன்மிசை யாழிசங்கங் கவினபயவரதந்
தெருளுறுநாற் காத்தமைய நீலநிறமேனி
செங்கமலக் கண்ணுபய சேவடிகொண்டவிர்ந்தான். (௩௫௫)

கண்டவுட னிவரவன்ற னருகினிற்சென்றிரண்டு
கரங்களைநோக் கினர்வலப்பாற் கரத்தினிற்சங்கேந்திக்
கொண்டவிடக் கரத்தினிற்சக் கரம்புனைந்தவாற்றைக்
குறித்தறிந்திவ் வாறுசெய்தல் கூடுமோமேனு

ளொண்டகைவே தப்பிரம னென்கரங்கண்மீதே
யுறப்பொறித்த ரேகையிவ்வா றுளிர்ந்தனவென்றன்பா
லண்டர்முனி வரர்மனிதர் பசுக்கண்முதலாகு
மனைத்தையுங்காத் திடுநீயாங் கணிந்தமையாலந்தோ. (௫௫௬)

அரக்கரனை யார்பொய்புலை கள்காமங்கொலைகொண்
டகங்கரித்துப் பெருவாழ்வி லமைந்துமகிழ்கின்று
ரிரக்கமன்பு சத்தியமா சாரமுளோர்பலரு
மின்னல்கரை காணும விடைந்துழன் றுசலித்தார்
பரக்கருணைத் தேவாநீ யாழிவலக்கரத்திற்
பற்றிலெல்லா நலமாகும் பரித்தருளென் றிரந்தார்
வரத்தகுமவ் வுருவமறைத் தரியகுருவடிவாய்
வயங்கினனக் கணம்விழிப்பு வந்ததுகண்டனரே. (௫௫௭)

அத்தகைய வற்புதமா மநுபூதியதனு
லலையுமதக் கொள்கையும்பின் னரியொருவனெல்லா
நித்தமளிப் பவனென்னு முறுதியும்பினுண்மை
நிலவுமதி தத்தெளிவு நிகழ்ந்தனவவ்வாறே
முத்தர்பணிந் திடுசகள நிட்களமெய்ஞ்ஞான
முத்திரைதண் டிருகரத்தில் வைத்தமுழுநீற்றுச்
சித்தர்பிரா னுமெமது குருபான்சட்சமயத்
தெய்வமுமற் றெல்லாமாய்த் திகழுமுதற்பொருளே. (௫௫௮)

குருபாதத் துவத்தினிடை யெமதுகுருநாதன்
கூறியவாற் றினிற்சிலவே குறித்தெளியேனுரைத்தேன்
பெருகுபல சிறுகதைக ளநுபூதிவிரித்துப்
பேசிலனிக் காவியத்திற் பிறங்குமுதற்பாக
மொருவிதமா முடித்தனன்மே லுத்தரபாகந்தா
னுரைக்கநினைத் துளனவர்த முளக்கருணை துணைநின்
றருள்விழியா னோக்கிநிறை வேற்றினன்றியென்சிற்
றறிவதனு லியற்றலொன்று மறியேனிச்சயமே. (௫௫௯)

பூர்வபாகம் முற்றிற்று.

குருபாதமே கதி.

உ

குருவே துணை.

தண்டபாணிவிஜயம்.

உத்தர பாகம்.

காப்பு.

அருள் விளங்கு மகண்டம தேயெமை
மருள்க டிந்துநல் வாழ்வில மைத்திடத்
தெருள்வ யங்கு திருவுருக் கொண்டமெய்ப்
பொருள்கொள் சற்குரு பொற்பதம் போற்றுவாம்.

நூற்பிரிவுவகை.

எமதுகுரு நாதனுவல் குருபாதத் துவத்தி
விசைந்துளவாற் றினைச்சுருக்கி யியம்பினன் முற்பகுதி
விமலமுறு மந்நூலின் பின்னவரா னடந்த
விதமுமவர் திருவுருவ மறைத்துலகிற் றெய்வக்
குமரகுரு பரனுருவாக் கோயில்கொண்டு விளங்குங்
குறைவிலருட் சரிதமுமீங் குத்தரபா கமெனச்
சமரசநிச் சயநமுவா வவருளின் றுணையாற்
சாற்றுவனன் னவரடிகள் போற்றுவனித் தமுமே.

நூல்.

மாதவஞ் சிறந்தமேலோர் வணங்குதாட் பரமன்வாழு
நீதமார் சபையைந்தாடு நிகழ்த்துசெப் பரங்கென்மேன்மை
யோதருட் டிருநெல்வேலி யூரினுத் தரபாகத்தின்
மேதகு முருகதாசர் விளங்கிவாழ்ந் திருந்தார்மாதோ. (க)

ஏழாயிரப் பிரபந்த முதலியன வியற்றல்.

அவ்வண மிருக்குநாளி லறுவகைச் சமயத்தேவுஞ்
செவ்வனப் பரமுமாமேழ் பகுதியுந் திகழவோர்நூ
லொவ்வுறா யிறுமுன்னுக வுரைக்குநா டோறுமொவ்வோ
ரெவ்வமில் பதிகமாக்கொண் டிசைத்தன ரெழுநூறம்மா. (உ)

இப்படி முடித்திட்டேழா யிரப்பிர பந்தமென்ன
வொப்பவோர் பெயருஞ்சூட்டி யுரைத்தரங் கேற்றினர்பின்
செப்புகா விரியினூடே திகழரா வணையிற்றூங்கி
முப்புவ னமுங்காத்தாளு முகுந்தன்வா ரிசத்தாண்மீது. (௩)

ஆயிரங் கவிகளாலே யரங்கத்தா யிரமென்றோர்நூன்
மாயிரும் புவியின்றுன்ப மாறிட விரும்பிச் சொற்றுச்
சேயிளங் கமலபீடத் திருமக ளந்தாதிப்பா
வாயிரு னுரைத்துக்கையா லெழுதிமைக் காப்புமிட்டு. (௪)

செந்தமிழ்க் களஞ்சியத்திற் சேர்த்துவைத் திட்டாரந்நா
ளிந்தமா நிலத்தினுயே னினியசே யாகியன்னுர்
சொந்தமாங் கிருபையாலே சுந்தரத் தாய்பாற்றோன்றி
முந்தவே செயுந்தவத்தால் வளர்ந்தனன் முறையினம்மா. (௫)

அதன்பின்வேய் வனமாநெல்லை யமர்ந்தகாந் திமதித்தாய்க்கு
விதந்தரு பருவமாக மிளிர்சத்தி விசயம்பாடிப்
பதந்தரு சிவபிராற்கும் பரவுசீர்க் கலம்பகப்பா
விதம்பெற வுரைத்திட் டன்பா லெழிலுரு மலைச்செவ்வேட்கு. (௬)

மண்டலத் திருப்புகழ்ப்போர் வாய்ந்தநூ லுரைத்துப்போற்றித்
தொண்டர்பற் பலர்கொண்டாடத் துலங்குநா ளின்னிலோரெண்ணங்
கொண்டனர் பழனிக்குன்றிற் குலவுதண் டணிகைக்கோமான்
வண்டகைப் பதுமப்பூந்தாள் வணங்கிவாழ்த் தெடுக்கவென்றே. (௭)

பழனிக் கெழுந்தருளல்.

அந்நகர் விடுத்துப்பல்லோ ரரவொலி நிறைப்பவேல்கைத்
துன்னவண் டமிழ்நூல்வாய்ந்து துலங்குபெட் டகத்திறேடு
தன்னிகர் சுந்தரப்பேர்த் தாய்முத லினர்கள்சூழ
மன்னருட் பரங்கிரிக்கு வந்தருந் தமிழ்ப்பாவோதி. (௮)

துதித்தரங் கேற்றினுர்பின் சோழவந் தானூரேகி
மதிக்கரு முரிமைக்கந்த சாமிமா தவன்பாலெய்திப்
பதித்திடு முவகைபொங்கிப் பரவவாழ்ந் திருந்தார்சின்னுள்
கதித்தணி முதலாங்கந்தன் கருணையா லிதுசெய்வானுல். (கூ)

தென்பழ னுசலத்திற் றிகழ்சுப்ப ராயனென்னு
மன்பனற் றுறவுமார்க்க னகத்தினிற் குமரன்றூண்டத்
துன்பமில் களிப்புமேவிச் சோழவந்தா னூரெய்தி
யின்பமார் பழனிக்குன் றுக் கேகுமா றழைத்தானம்மா. (க௦)

துமிசம்பட்டி யடைதல்.

மற்றைநா ளவ்வூர்நீங்கி வருபுகை வண்டியேறிக்
கற்றவர் விரும்புந்திண்டுக் கற்பதி யிறங்கிப்பின்னர்
பெற்றமார் சகடமீது பெயர்ந்துபோம் வழியினூடே
யுற்றதோர் துமிசம்பட்டி யூரினுக் கணித்தாச் சென்றுர். (கக)

அங்கொர்மா தவவேடத்தோ னன்புட னடியார்வந்து
தங்கொரு மடஞ்செய்துற்றுன் றருசுப்ப ராயன்றன்பா
லிங்கொர்நாண் முருகதாச னிருந்துசென் றிடச்செய்யென்று
மங்கரும் விருப்பான்முன்போம் வழியில்வேண் டியநண்பாளன். ()

அவனுட னிறந்துசின்னு ளாயதங் கிவரேகுங்கால்
சிவகுரு பரன்றனுள்ளந் தெரிந்தனோன் விழைந்தவாறே
பவமின்மெய் யடியரேத்திப் பணியவங் கொருநாள்வைகித்
தவரிவ ரியற்றுமாடல் சாற்றுவன் சிறிதுமாதோ. (கங)

வேறு.

வயிற்றுவலி தீர்த்தல்.

தமதுதிருக் கரத்தினிற்கொள் சத்திவேற்குத்
தக்கபடி யபிடேக மலங்காரஞ்செய்
தமரர்புகழ்ந் திடுமுறையா லாராதித்தே
யடியவர்கட் கரியதிரு நீறுநல்கி
விமலமுறு தீர்த்தநல்கி நிவேதனங்கள்
விளங்கவளித் தானபின்னர் வெளியேவந்து
கமலமல ரணையவிழிப் பார்வையுய்த்துக்
கண்டனரோ ரநியாயச் செய்கையந்தோ. (கச)

எதிரினிலோர் பேய்க்கோயிற் கினியபொங்க
   விட்டிறக்கி யாட்டினைக்கொன் றிடுதற்காக
விதிர்தருவாள் பிடித்திழுக்கக் கண்டபோது
   மெய்நடுங்கி நெடுங்குரலா லதட்டிக்கூவி
யதிவிரைவிற் சென்றிதையென் செயப்போகின்றா
   யறைதியென்றா ரெனதுசுதற் கதிகத்துன்பாய்
முதிர்வயிற்று வலிதீர வேண்டிப் பெற்ற
   முழுப்பயனு விப்பூசை முடிக்கலுற்றேன். (கரு)

எனவுரைத்தக் கொலைமுயலத் தொடங்கினன்கண்
   டிவரிதன்பே ரியாதெனச்சந் நாசியப்பன்
மனமுவக்க வரந்தருநற் றெய்வமென்றான்
   வாய்பேசாச் சந்நாசி யப்பனுக்கித்
தினமுயிர்கொல் லேல்பேசுஞ் சந்நாசப்பன்
   செப்புகின்றேன் பொங்கல்பழந் தேங்காய்மட்டுந்
கனமுறவே படையென்றா ரந்தவாறு
   கருத்திசைந்து பூசைதுவக் கிடுமவ்வேளை. (கசா)

அவன்மகற்கு வயிற்றுவலி யதிகமுண்டா
   யனற்புழுவே யெனத்துடித்தா னதுகண்டன்னோன்
கவலைமலிந் தாடுகொல்லாக் குற்றத்தாலென்
   கான்முளைக்கு வயிற்றுவலி கண்டதென்றே
பவவினையா மதுசெயற்கு விரைந்தான்சிந்தை
   பதறேலுன் சுதனுயிர்யான் றருவேனென்று
தவமலிதன் வேற்பூசைத் திருவெண்ணீறுந்
   தனிப்பிரம்புந் தீர்த்தமுங்கை தாங்கிவந்தே. (கள)

மயிற்பரிமேல் வருங்குமரன் வடிவைநாடி
   மந்திரதீர்த் தமுநீறும் பெய்துகோல்வைத்
தயிற்றலைவா தென்பழனி யப்பாவிச்சே
   யதிதுயர முறநெடுநா ளாய்ப்படுத்தும்
வயிற்றுவலி முற்றுமற மாற்றியிங்கே
   வாய்ந்துணர்ச்சி யில்லாப்புன் மாந்தர்தம்மை
வெயிற்புழுப்போல் வாட்டுமிப் பேயைக்கொன்று
   வினையைவென்றோ ருண்டெனுமெய் விளக்கென்*றோர்பா. ()

* அயிற்றலைவா தென்பழனி யப்பாவிச் சேய்தன்
வயிற்றுவலி முற்றுமற மாற்றி—வெயிற்புழுப்போன்
றேழைகள்வாடப் படுத்துமிப் பேயுயிர் குடித்திட்
டூழைவென் றோருண்டென் றுணர்த்து.

ஓதினரக் கணம்வயிற்று வலிதீர்ந்தச்சே
யுவகையடைந் தனன்றிருநீ றுதவிநின்சே
யாதிவினைப் பிணியின்றே டகன்றதென்று
மணுகாதென் றவனையூர்க் கனுப்பியாட்டை
யேதியா லெவருமுணக் கொல்லல்கூடா
தெனக்கிடையாட் டினந்தினிற்சேர்த் திதுசெத்தாலு
நீதிதீர் பிணத்தசைதின் றிடலாகாது
நிலத்தினிடை புதைத்திடுமி னெனத்தக்கோர்பால். (கக)

பழனி யடைதல்.

கட்டளையிட் டதன்பின்மறு தினமுதிக்குங்
காலையவ்வூர் விடுத்தருட்சீர்ப் பழனிசேர்ந்து
மட்டறுமெய்த் தொண்டரெதிர் கொண்டுதாழ்ந்து
வாழ்த்தெடுப்ப விவரொருநன் மடத்திலுற்றார்
கெட்டவுயிர்ப் பலிகொளுமப் பேயின்கோயில்
கிளத்தவிடந் தெரியாமற் பொடியாய்வீழ்ந்து
பட்டதருட் கவுமாரர் திருவாக்காலே
பகர்மொழியாங் கனலெதிர்வெண் பஞ்சுபோன்றே. (உ0)

பழனித் திருவாயிர மியற்றல்.

அப்பழனித் திருமலையிற் றண்டபாணிக்
கருண்மிகுசெந் தமிழ்ச்சரபத் தண்டபாணி
முப்பழச்சா றனையசுவைக் கவிகளாலே
மொழிந்தபழ னித்திருவா யிரப்போர்நூலுங்
கைப்பருபன் னிருபதிகப் பனுவலுமுங்
கடலின்மடை வாய்திறந்தாங் குரைத்துப்போற்றி
மெய்ப்பயனன் பினரடையு மாறுசெய்து
விளங்கினரக் கானடந்த விநோதமொன்றே. (உக)

அனந்தமிவர் பதம்பணிவுற் றுபதேசம்பெற்
றவருலகிற் பிணிதீரற் கருள்வெண்ணீறு
மனங்கனிவிற் பெற்றவர்சொற் கவிகேட்டின்னல்
வாரிகடந் தவர்பணிசெய் மாட்சிதோய்ந்தோர்

கனந்திகழ்மெய்த் திருவுருவக் காட்சியொன்றே
 கண்டுவப்போர் பொருளுதவி கருதிச்செய்வோர்
தினந்தினமித் தனையெனச்சொற் றிடவொண்ணுதே
 செப்புமவற் ழுன்றுரைப்பேன் சிறியனேனே. (உஉ)

இராமானந்தர் வரலாறு.

முன்னொருகாற் பொதியைவரைச் சிகரமீது
 முருகவே ளகத்தியன்றன் முகத்தைநோக்கித்
தன்னொருமெய்க் கருணையினு லனந்தம்வாய்மை
 சாற்றியுறும் போதுலகின் மகளிர்வேட்ட
லென்னொருதீங் கினிலமிழ்ந்தோர் சித்திமுத்தி
 யெய்தரிதென் றுன்முனிவ னதைமறுத்தே
மின்னொருகோ டியுமொவ்வாக் கதிர்வேலேந்தும்
 விமலவே ளடிபோற்றி விளம்பலானுன். (உங)

அப்படியே னுரைத்தீரென் றிடலுங்கொண்க
 னறைந்தமொழிக் கிசைந்தமக ளமையப்பெற்று
லெப்படியுங் கடைத்தேற லாகுஞ்சற்றே
 யிகன்றிடினு நரகமதை யன்றியுண்டோ
மெய்ப்பரம ஞானமுளா யென்றுனுல்
 வேதனரி யரன்முனிவர் விண்ணுள்ளோருஞ்
செப்பரிய குணவொழுக்க மனைவிகொண்டோ
 சிறப்புற்று ரெனமுனிவன் செப்பினுனே. (உச)

அதுவினவிக் குறுமுனியே மயங்கவேண்டா
 மகிலமயக் குன்றனக்குத் 'தெரியாவாற்று
லிதுபுகன்றுய் பூவுலகி லொருகுடும்பத்
 தியன்றசிசு வாப்பிறந்தே யுழன்றுகண்டுன்
பொதுநிலைபெற் றேவருகென் றுரைத்தானஞ்சிப்
 பொன்னடிதாழ்ந் தென்னுரைகள் பொறுத்தாளாமற்
கதுமெனவிவ் வாறுசொற்றுய் புவியிற்சேயாய்க்
 கலங்கியபி னெவ்வாறு தெளியச்செய்வாய். (உரு)

நீயேநற் குருவாகித் தோன்றியென்ற
 ணிசவுணர்வா ஞானமதை நிகழ்த்தியுண்மைத்
தாயேயொத் தருள்புரிய வேண்டுமென்னத்
 தலைவணங்கி மனம்வருந்தித் தவித்தான்கண்டு

சேயேயொத் திடுமுனையங் குழலவிட்டியான்
சிறிதுமனம் பொறுப்பேனோ தியங்கவேண்டாம்
வாயேறுந் திருப்புகழ்சொல் லெனதுகிள்ளை
மாநிலத்தோர் காரணத்தால் வந்துதோன்றி. (உசு)

முருகதா சப்பெயர்கொண் டுலகிற்பல்பா
மொழிந்துகொலை புலைதவிர்க்கு முயற்சிகொண்டு
பெருகுமுழு நீறுகண்டி சிகைகௌபீனம்
பிடித்திடுதண் டுடன்கௌமா ரத்தைநாட்டி
வருவானன் னவனெனது பழனியூரில்
வந்துனக்கா றுண்மையருள் வழங்குவான்பின்
பெருவாய்மைக் குருவாய்நீ பலரைத்தேற்றிப்
பிழைதவிருன் றனக்குரிய பெற்றிதோய்வாய். (உஎ)

என்றுருக வேளுரைத்த மொழியின்பாக்கி
யிருந்துகொங்கிற் சிரவணப்பே ரிசைந்தவூரிற்
றுன்றுகுறு முனியினொரு கலைதான்வேளாண்
டொன்மரபி னிராமானந் தப்பேர்ச்சேயா
யன்றுதிகழ்ந் திளமைவிளை யாடலாதி
யாற்றியுல கியன்மணஞ்செய் தினிதுவாழ்ந்து
பின்றுகடீர் பழனிமலை யடைந்துவண்ணப்
பெருஞ்சரபக் குரவனடி பேணிப்போற்றி. (உஅ)

இராமானந்தருக் குபதேசம் புரிதல்.

தன்னைமறந் தன்புமிகத் தழைத்துமேலாஞ்
சற்குருவே யானுலகிற் றளராதுன்றன்
பொன்னையுற ழடிமறவா நிலைமைநல்கிப்
போக்குவர வில்லாமற் புனிதஞானந்
தன்னையடைந் துயவொருசொற் சாற்றியாளத்
தருணமிதென் றினிதுபல சாற்றிவேண்ட
முன்னைவினை தவிர்த்திடுமா றெழுத்துமோதி
முத்திரையான் மோனநிலை முழுதுங்காட்டி. (உகூ)

அநுக்கிரகத் திருநீற்றுப் பிரசாதந்தந்
தருளியக்க மணியுமணிந் தரியமெய்வீட்
டினுக்குரிய தியாநு பூதிவேத
மெடுத்துதவிக் கடைக்கண்ணா லினிதுநோக்கி

மனுக்குலமுற் றோர்பலருக் கருள்செய்வாழ்வு
வாய்க்கவா சீர்வதித்து ரினுக்குப்போமா
றனுப்பினரன் னவனதன்பின் னடந்தவாற்றை
யவன்பிரதா பப்பனுவ லறையுமன்றே. (௬0)

திருமட மமைத்தல்.

அருகுறும்வே லாயுதம்பா ளையத்தூர்வாழ்வா
யவிர்கறுப்ப வேற்கவண்ட னாதியாகும்
பெருகுரிமைத் தொண்டர்பலர் கூடியிந்தப்
பிழையின்முனி வரரிடமோர் பெற்றிகேட்டா
ருருகுமனத் தடியவர்வந் தும்மைப்போற்றி
யுமதருளின் றிறம்பாடி யுரியபூசைத்
திருவிழா வியற்றுவதற் கிந்தவூரிற்
றிகழுமடா லயமமைத்தல் வேண்டுமென்றே. (௬க)

அதுகுமரன் சம்மதமே னடக்குமென்ன
வதுமதிநல் கினர்திருவா வினங்குடிக்கீழ்
முதுநூலோ தியமுறையிற் றிருமடந்தான்
முடித்தனரங் கிவர்புகுந்து முருகன்கைவேன்
மதுவாரி யணையதமிழ்க் கவிகள்வாய்ந்து
வயங்கியபெட் டகந்திகழ வைகிப்பூசை
பொதுநீதி யுபதேசப் பிரசங்கங்கள்
புரிந்தடியார் பலர்போற்றப் பொலிந்தாரன்றே. (௬உ)

மாந்திரீக பீடித நிவிர்த்தி.

அவணிருக்குந் தினமிவர்தம் மடத்தின்முன்ன
ரகமிகும்வஞ் சகமழுக்கா றசத்தியங்கொண்
டிவன்முருகன் றொழும்புடையோ னென்றுகண்டோ
ரெண்ணிவழி படவேடத் திடம்பங்காட்டிப்
பவநெறியாங் கொலைப்பூசை கறுப்பணற்குப்
பணையடியிற் சிலையுருவைத் தியற்றுந்தீய
னவரசச்செந் தமிழருமை சிறிதுந்தேரா
ளுச்சிமுத்துப் பேரினன்மெஞ் ஞாயமில்லான் (௬௬)

பொதுவர்குலத் துடலெடுத்தோன் மூடர்தம்மைப்
புண்படுத்திப் பொருள்பறித்துப் புலைக்கூத்தாடி
மதுவொடுமா மிசமருந்தித் திரிவதாகு
மடமையுணர்ந் திவர்சிலரை யவன்பாலேவி
யிதுமுறையன் றுத்தமரொப் பிடுநன்மார்க்க
மிருக்கவழி வழியேகே லென்றுகூறப்
புதுமொழியா மதுசெவியிற் புகலுஞ்சிந்தை
புழுங்கியதென் குலத்தினுக்குப் பொருந்துமென்றான். (நச)

உன்குலத்துக் காடுமுத லியவற்றைத்தா
னுவப்புறப்பே ணுதலன்றிக் கொலல்கூடாதே
யின்குணத்தோ டுரைத்திடலொப் பாமல்வீணே
யிகன்றிடுதல் வேண்டாமென் றுரைத்தாரன்னோன்
வன்குணத்தாற் றன்வணங்குங் கறுப்பன்றன்னை
வலிதுசெபித் திவரிடங்கொன் றிடுமாறேவ
முன்குலவா திவரதுபிற் புறம்வந்தெய்தி
முரண்கொடிறு கத்தழுவன் முயன்றதம்மா. (நரு)

மண்டலமொன் றவன்செபித்தா லிவர்பாலோர்நாள்
வந்துபின்பா லுறத்தழுவி வருத்தலாக
வெண்டருமிவ் வாறொருநாற் றடவைநேர்கா
லிவர்முருகோ னிணையடிக ளெண்ணிமாற்றிக்
கொண்டனர்பின் னொருதடவை யவ்வாறெய்திக்
குறித்திறுகப் பற்றியபோ திளையவீரன்
கண்டதியுக் கிரத்துடனீட் டியினாற்குத்திக்
கதமுடனீவீ சினன்பினொரு காலும்வந்து. (நசு)

இருகரங்க ளாலிறுகப் பிடித்ததந்தோ
வென்னென்பே னனலிடையி யினமொய்த்தென்னப்
பொருவருமெஞ் ஞானவிளக் கொளியாமிந்தப்
புண்ணியர்பா லினன்விடும் புன்மைப்பேய்தா
னுருமியெதிர் சினந்துவரு மாற்றலில்லா
தொழிந்துமவன் முயன்றதொழி லதுவீணாகா
திருநிலத்திற் பலிதமுறு நிமித்தம்பின்னின்
றிறுகுறவே தழுவிவருத் தியதுமாதோ. (நஎ)

அப்போது மயிற்பரிமேற் கையில்வேல்கொண்
டருகிலிரு மகளிருறக் குமரன்றேன்றித்
தப்போதும் பகைவன்விடும் பேயைக் குத்தித்
தறைமிசைவீ சினன்சவம்போற் சாய்ந்து வீழ்ந்த
தெப்போது மினியுனையீ தணுகித்தீண்டா
தெனவுரைத்து வெளியின்மறைந் திட்டான்கண்டு
கைப்போது குவித்துவணங் குபுநெஞ்சாரக்
கருதியிருந் தனரெமது கருணையாசான். (௩அ)

பின்சிலநாள் கழித்தொர்கறு மறவன்போனேர்
பிறங்கியொரு தடிகையிற்கொண் டுலாவிக்கொண்டே
நின்சிரமங் கண்டுகுகன் சிறிதுநாளி
னினக்கனந்தம் வரங்களெலாந் தரப்போகின்று
னென்சிறந்த மொழிசொல்லிற் றிவரப்பேய்பா
லெனக்கவன்றந் திடிலியான்பெற் றினிதுவாழ்வே
னுன்சிறுபுன் மொழியதற்கு வேண்டாமென்ன *
வோதினரக் தோடிரிந்தே யொழிந்ததம்மா. (௩௯)

ஆதலினப் பணைமுறியு மாறுமன்றே
னகமழிந்து சீரழியு மாறும்பல்பா
வோதலுற்றூர் பழனிமலை யடிவாரத்தி
லுற்றசிறு கறுப்பண்ண னுருக்கண்டன்றேன்
பேதமற்ற சுத்தவுண வினனென்றோர்ந்து
பெருமகிழ்வுற் றொருசைவக் கறுப்பண்ணநீ
யேதமுறக் கொலைவிரும்புங் கறுப்பணற்கோ
ரினியபுத்தி சொல்லுகவென் றொரு*பாச்சொற்றூர். (௪0)

இப்படிச்சின் னுள்கழியப் பழனிவெற்பி
லினியபங்கு னித்திருநா ளினிலோர்நாளிற்
றப்பனந்தங் கொண்டுளவவ் விகலோன்வேலன்
றனதுவிழா மூர்த்தியைத்தன் மடத்தின்முன்வைத்

* தெய்வப்பழனித் திருமலையின் முன்னிற்குஞ்
சைவக்கறுப்பண்ண சாமியே—பொய்மைக்
கறுப்பண்ணச் சாமியெல்லாங் காட்டாட்டுன் வேண்டா
வெறுப்பெண்ணச் செய்வாய் விரைந்து.

தொப்பவுப சரிப்பதுபோ னடிப்புக்காட்டி
யோதுமுடி வினிலாடோன் றினைச்சுற்றிக்கொண்
டப்பான்முன் கொன்றனனவ் விதஞ்சில்லோரா
லறிந்துமனம் பதைத்துவெருண் டரைநொடிக்குள். (சக)

தமதுமடத் தின்கதவ மடைத்துள்ளேகித்
தங்கினருற் சவச்சேவை தன்னைக்காணார்
குமரனடித் தொண்டர்சில ரழைத்தபோது
கொலைப்பலியேற் றிருந்தருளின் குறிப்புக்காட்டாத்
தமகுணமுற் றிடுமவனை வணங்கேனென்று
சாற்றிவிடுத் தனர்மறுநா டமிழினாலே
விமலமுறச் சொலும்பழனி யாயிரத்தை
வெந்தழலிற் பெயுமாறு விரைந்தாரந்தோ. (சஉ)

அதுகேட்டுக் கறுப்பவேற் கவண்டனோடி
யவருபய பாதமதை யணுகிப்பற்றி
மதுரநயத் தமிழ்க்கடலே கருணைக்குன்றே
மாநிலத்தோ ருயவுருவா வந்தநீயின்
றிதுபுரியே லருட்செயல்கொண் டவனைத்தண்டித்
திடன்முறையா மெனதுரையேற் றிடினல்லாலுன்
புதுமலர்த்தாட் பிடிநழுவ விடேனென்றோதிப்
போற்றினு னிருவிழிநீ ரூற்றினனே. (சங)

உடன்கருணை சுரந்தவ்வா றுகவென்ன
வுறுதிமொழிந் தனரெழுந்துள் ளுவந்துநின்றான்
றிடங்கொளவங் கிரந்துகெஞ்சிப் பெற்றவன்றேன்
சிந்தைநிலை யெவரறிந்து செப்பவல்லார்
பவந்தவிர்சீ ரரங்கமதைக் குறித்ததாய
பனுவலரங் கேற்றிடச்செல் கருத்துட்கொண்டு
நவம்பெறவவ் வேட்டையெடுத் தாராயுங்கா
னடந்ததொரற் புதமதனை நவில்வேன்மன்னோ. (சச)

பாயிரம்பின் றிருவரங்க வெண்பாமாலை
பசுக்காப்பு மாலையருள் பதிசீரங்க
நாயகமா லைப்பனுவன் முதற்பல்பேத
நவின்றுளவேட் டினையவிழ்த்து நாடும்போது

தூயபசுந் துளவமெழு தளத்ததாகித்
துலங்கியதவ் வேட்டினிடை தெரிந்துதம்பான்
மேயவடி யவருடன்றுய்த் தருளின்றன்மை
விளக்குவனென் றுவந்தனர்பின் குமரற்கூவி. (சரு)

சீரங்கமடைதல்.

உலகிலுளோர் கொன்றருந்துந் தீமையில்லா
தொழிந்தாலல் லதுதிரும்பி யுன்னூர்சேரேன்
கலகமிடு மிகலழிக்கும் வீரஞ்சற்றுங்
காட்டிலையென் றவண்விடுத்திட் டரங்கக்கோயி
லிலகுமரா வணைத்துயில்கொண் முகுந்தற்போற்றற்
கெண்ணியடைந் தனர்பலர்வந் தெதிர்கொண்டன்பா
னலமுறவங் குபசரித்து வசிப்புநல்கி
ஞாங்கர்வேற் பூசனையு நடப்பித்தாரே. (சகூ)

திருவரங்கத் திருவாயிரம் அரங்கேற்றல்.

அங்குதிரு வரங்கத்தா யிரப்பேர்நூலை
யரங்கேற்றப் பத்திரிகை யச்சிட்டப்பா
லெங்குமனுப் பினர்பலபா வலருமன்பர்
யாவரும்பொன் மிகையினரு மினிது சேர்ந்தார்
தெங்குமலி சிரவணநன் னகரிற்றொண்டர்
செயுந்தவமாத் திகழுமிரா மானந்தப்பேர்
தங்குதவப் பெரியனும்வந் தரங்கநண்ணித்
தனதருட்டே சிகனருகு சார்ந்தான்மன்னோ. (சஎ)

சென்னையிலுற் றிருந்ததமிழ்ப் புலவரேறு
சித்தாந்த ரத்தின கரப்பேர்பூண்டு
தன்னைநிகர் புகழ்வெண்பாப் புலியென்றியாருஞ்
சாற்றிடும்வேங் கடசுப்புப் புலவன்றானும்
பொன்னையுறழ் தமிழரச னுகிவீரை
புரந்தவித யாலயன்றன் புலவனுகிப்
புன்னைவிழை கண்ணனிசை புகன்றவாய்மை
புனைந்தகந்த சாமிப்பேர்ப் புலவன்றானும். (சஅ)

இவனுப்பும் பத்திரிகை கண்டுசிந்தை
யினின்மகிழ்வுற் றரங்கநக ரினில்வந்துற்றார்
நவமலியவ் வூரின்வயி ணவன்பான்மாய
னன்குதிருச் சேவைநல்கி நமதுதொண்டன்
றவமலிமெய் யநுபூதிச் செல்வனன்பாற்
சாற்றுதிரு வரங்கத்தா யிரநூறன்னை
யிவணரங்கேற் றிடற்குரிய முயற்சிநீகொண்
டிடுகெனவுத் தரவளித்திட் டனனத்தூயன். (சகூ)

வந்துதிருப் புகழ்முனிவர் தம்மைக்கண்டு
மாயனுரைத் திடுசரதம் விளம்பியார்வ
முந்துறநின் றனன்மகிழ்வுற் றரங்கநாதன்
முதுகருணை யினைவியந்து முழுநீறுடுஞ்
செந்துவர்மே னியினிரண்டு புயத்திரண்டு
திருநாமக் குறியணிந்து துளவமாலை
நந்துகம லத்தின்மணி மாலையக்க
நன்மணிமா லையுந்தரித்து நனைத்தகாவி. (ருo)

இடையினிற்கீள் கோவணநன் கிலங்கச்சுற்றி
யிலகுசிகை விரிந்துபுறத் தினிதுதோன்றத்
தடையறுபே ரன்பர்பலர் சூழ்ந்துபோற்றத்
தண்டொடுபுத் தகங்கரத்திற் றரித்துச்சிந்தை
யுடையநெடு மாயனடி கருதிச்செல்கா
லொருவனெவ ணுயினுநீ றணிவோன்பாடற்
றொடையிழிவென் றுரைத்திடலிப் பனுவலேட்டைத்
துணித்தனலிட் டிடுவலெனக் கருதிச்சென்றார். (ருக)

அவ்வூரின் வயிணவவே தியர்பல்லோரு
மரங்கநா யகன்கிருபை யசைத்தவாற்றுற்
செவ்வூகக் குருகைமுனி யனையாயென்னச்
செப்பியழைத் தேயரங்கன் றிருமுனுய்த்தார்
வெவ்வூழற் றுலகினல்லோர் பசுக்களின்ப
மேவவருள் புரிகெனவப் பனுவலேட்டை
யெவ்வூறுந் தவிர்க்குமவன் பதத்திற்சூட்டி
யினியகற்பூ ரச்சுடரங் கெடுத்துச்சுற்றி. (ருஉ)

அருச்சித்துத் தீர்த்தமுடன் றுளவம்பெற்றே
யந்தவேட் டினைக்கையிற்கொண் டாயிரக்கா
லுருத்திகழ்ந்த மண்டபத்திற் றொண்டர்போற்ற
வுரியதலத் தமர்ந்துதுதி யுரைத்துப்பின்னர்
கருச்சிறைநீக் கிடுமரங்கத் தாயிரம்பாக்
கழறமுதற் றுவக்கியெழிற் கந்தசாமி
திருச்சிறந்த கையேடு படிக்கத்தாமே
செப்புபொருள் விரித்தனர்மெய்த் தேவரார்ப்ப. (ருங)

தென்குருகைச் சடகோபன் றனக்குமுன்னாள்
செறிமதுர கவியமைந்தாங் கிந்நாளிந்த
வின்குரற்பா வலன்கையேட் டினுக்குவாய்த்தா
னென்றுபலர் தாமுமுரைத் தின்பமுற்றார்
பொன்குலவு முரத்தரங்க னுரைபெற்றங்கே
பொருந்தியவே தியன்பெருமை புகலற்பாற்றோ
நன்குவரு வோரையழைத் திருத்தல்கண்டு
நல்கல்புரிந் திருந்தனனந் நாளின்மாதோ. (ருச)

பார்ப்பனப்பெண் விடந்தீர்த்தல்.

வெண்பாவந் தாதிகலித் துறையந்தாதி
விளங்குபதிற் றுப்பத்தந் தாதிமேலாம்
வண்பாவின் சதகமுத லியபடித்தே
வயினதே யப்பத்து வாசிக்குங்கா
லண்பாள னும்பனவன் சிறுமிதன்னை
நல்லரவு தீண்டிவிட மேறிற்றென்னப்
புண்பாடுற் றொருசிலர்வந் துரைத்தார்கேட்டுப்
புயங்கவணைப் பரன்றிருந்தா ளுளத்தினாடி. (ருரு)

இந்தவிடத் தால்மக ளிறவாவண்ண
மினியபரந் தாமனருள் புரிந்தபின்னர்
பைந்தமிழ்மா லிகைபடிக்க லாகுமென்னப்
பகர்ந்தெழுந்து கருடனுறும் பாங்கரேகிச்

சொந்தமுட னரங்கனெதிர் குலவும்வீரந்
 தோய்கருடா விந்தப்பார்ப் பனப்பெண்சோர
வந்தவிட மிரங்கவிரங் குதிநல்லோனென்
 மகிமைதுலக் குதியெனவோர் *வெண்பாவோதி. (நிசு)

கருடன் சேவை காணல்.

அந்தமக ளவ்விடத்தா லிறந்தாலுன்ற
 னருந்தலைதா னூறுதுண்டாய்ச் சிதைந்தறொப்பென்
றிந்தமுனி வாருரைத்துத் திருநீறள்ளி
 யீந்தனுப்பித் தமதுறையுட் கேகுமாற்றிற்
செந்தகைய கருடனொரு பனவனாகித்
 திகழ்ந்ததுவா தசநாமத் திருமண்டோன்ற
வந்தபஞ்ச கச்சவுடை யுத்தரீகம்
 வயங்கமிகு முன்னதமாம் வடிவங்காட்டி. (நிஎ)

உட்புகுந்தங் கிவர்பிறகே செல்லுஞ்சில்லோ
 ருடனவன்யா ரெனவினவ வுற்றபோது
நட்புறுசிந் தையினடிமைத் திறத்திராமா
 னந்தனவர் பரதேசி தானென்றோதப்
புட்புரைவே டநதவிர்வே தியனன்றோன்பேர்
 புகலுகெனப் பரதேசி தானென்றிட்டான்
பெட்புளவென் பெயர்கெருடா சாரியென்னப்
 பேசினனவ் வுரையெமது பெரியர்காதில். (நிஅ)

வினவியந்தப் பார்ப்பனப்பெண் விடத்தின்பீடை
 விலகவுன்பாற் றனடியேன் விளம்பினேனென்
றுனலருமன் புடனிருகை குவித்தாரன்னோ
 னுவப்பொடரங் கேசனருள் செய்வானென்று
கனப்படுமின் னெனமறைந்தா னுடனெல்லோருங்
 களித்துவியந் தனர்புலமைக் கவிஞர்தங்க
ளினம்புகழ் வேங்கடசுப்பன் வெண்பாவொன்றுங்
 கியம்பியழி யாப்பெருமை யெய்தினனே. (நிகூ)

---

* அரங்கன் திருமுன்பமருங் கருடா
விரங்கிரங்கிப் பார்ப்பனப்பெ ணேங்கச்—சிரங்கொண்ட
பொல்லாவிடத்தைப் பொடியாக்கிப் பூவுலகோர்
நல்லானென் றோதவரு ணல்கு.

ஓதுபுகழ்க் கருடனொரு மனிதன்போல்வந்
தோன்றுமறி யானெனநின் றுரிமைபேசித்
தீதுதீர் யான்கருடா சாரியென்னச்
செப்பியதாச் சரியமென்ற *கவிகேட்டன்பர்
மீதுமீ துவந்தனரப் பார்ப்பனப்பெண்
விடமுழுது நீங்கிநல மேவலுற்று
ளீதுபோ தாதோவெங் குரவன்றன்பா
லிலகுதிரு வருள்பெறுமன் பிசைந்துள்ளோர்க்கே. (௬௦)

மற்றைநாண் முதலரங்கத் தாயிரம்பா
வாசித்துப் பொருளுரைத்தார் பலருங்கேட்கப்
பொற்றையாங் குடையெடுத்தா னிரைகெடாமற்
புரந்தபிரான் கொன்றவற்றான் புசிப்பார்தங்கட்
கிற்றையதி யுவப்புதவுங் குணங்கொண்டான்போ
லிருப்பதொழிந் தென்றருளாட் டியற்றுவானென்
றுற்றமனக் காதலுட னிருந்தாரப்பா
லொப்பிலியம கந்திரிவோ டேகபாதம். (௬௧)

மும்மண்டி லப்பொருள்வெண் பாவினோடு
மொழியெழுகூற் றிருக்கையொரு வருக்கப்பாடல்
செம்மதுரச் சதுரங்க பந்தத்தோடு
திகழ்மடக்குத் தாழிசைபெண் கலவிவண்ண
மெய்ம்மையுற வரங்கேற்றித் திருப்புகழ்ப்பா
விளம்பிடும்போ தொருகவியிற் றிருமாலுக்கு
வெம்மைதவிர் புதன்றினமே யுரியதென்றும்
வெய்யசனி நாள்பணிதல் விலக்கேயென்றும். (௬௨)

சொற்றபொரு ளிணைவிரித்துப் பலர்க்குநன்கு
தோன்றவுரைத் தனர்புதற்கு மாலென்றோர்பேர்
கற்றவரோ தினர்பச்சை நிறமுஞ்சொன்னார்
கவின்மலிசத் துவகுணத்த னலியின்றன்மை

---

* ஓதுங்கருட னொருமனிதன்போ லுருக்கொண்
டேதுமறியா னெனத்தோன்றிப்—பேதமிலா
நம்மோடுறவாடி நான்கருடா சாரியென்ற
தம்மாநல வதிசயம்.

பெற்றவனென் றும்புகன்றூர் விண்டுவின்பாற்
பேசுமிவை யொருங்கமையும் பெற்றியோடு
பற்றுமிரும் பணிக்துகறுங் காக்கையேறிப்
பங்கவுறுப் புறுசனியின் பாவந்தேர்மின். (சுங)

உருக்குமாங் கதனம்ப ரீடனாதி
யுற்றவரெல் லாம்புதனு ளூனுற்றும்பூசை
பெருக்குநலத் தாலுலகம் விருத்தியாகிப்
பிறங்குதிரு வருளாடல் விளங்கிற்றிந்நா
டருக்குமலி பவக்கிரகத் துரியநாளிற்
சக்கரக்கை மாயவனை வணங்கிப்பூவி
லிருக்குமவர் நோன்புனூற்று மதனாலன்று
லெழிலாழி நீசமடைந் திட்டதென்று. (சுச)

எடுத்துவெகு ஞாயங்க ளுரைத்தாரன்ப
ரினத்தினர்சிற் சிலரவ்வா றிசைந்துசெய்யத்
தொடுத்தநுட்டித் தனர்பலர்முன் னிருந்தவாறே
துலங்கினர்மெய் யருளுலக முழுதுமவ்வா
றடுத்துவழி படும்வணஞ்செய் திடுநாள்வந்தா
லதிவிரைவிற் புவிமகடுன் பழியுநல்லோர்
திடுக்கமிலா துவப்படைவ ரீதுநிற்கச்
செப்பும்வகுப் பறைந்துமுற்றச் செய்துபின்னர். (சுரு)

திருமகளந் தாதியது முரைத்துவாழி
செப்பியபின் விநியோகஞ் சிறப்பநல்கிப்
பொருவில்கந்த சாமிநா வலனுக்கந்தப்
புண்ணியவே தியன்கலையா தியவளித்துப்
பெருகுதவ முனிவரைப்பார்த் துமதுவேட்கை
பெறத்தருதற் காங்கேச னுளனென்றோதி
யுருகினனெல் லோருமகிழ் வுடன்வணங்கி
யுற்றதம்மூர் தோறுமடைந் துவந்தார்மன்னோ. (சுசு)

வேறு.

திருவரங்கத் தாயிரமுந் திருமகளந்தாதியதுஞ் செப்பித்தூய, பெருவரங்கைக் கொளவிரும்பு மிவர்கனவி லரங்கநகர்ப் பெருமான் றோன்றிப், பொருவருமுன் றமிழினுக்கென் மனைவியையா யினளென் னப் புகன்றான்பின்னுந், தெருளுமன்பா ரருச்சகன்பாற் றிருமகள் சென் றிவர்கவியின் சிறப்புக்கூறி. (சுள)

அப்பிரபந் தங்களுக்காத் திருவரங்க நாதன்விலை யாளு னென்று, செப்பிமறைந் தனண்மறுநா ளவனிவர்பாற் பிரசாதஞ் செங்கைநல்கி, யொப்பில்களுத் திரமுரைத்தா னிவர்தமதுட் கன வினிச மோதியின்பத், திப்பியவின் படைந்துமுளத் தினிற்சலிப்பு மடைந்திவிதஞ் செப்பலானார். (சுஅ)

அரங்கன்மனை யுடனென்பால் விலையாளு னென்னுமொழி யத னுலியானிங், குரங்கொடுவப் படைவேனே வதுநிசமேற் கோக் குலங்க ளுலகிற்பொல்லா, ரிரங்கலற்றுக் கொன்றருந்துங் கொடுமை யொரு கணமுநடந் திடுமோவன்னோன், குரங்கனந்தம் புடைசூழக் குறைகடற்றுண் டியுமிகலோற் கொன்று நல்லோர். (சுகூ)

சுகமுறக்காத் தவனதனு லவனுலகி லவதரித்தோ துதிக்குந் தொண்டர்க், கிகதலத்திற் றனதருட்சீர் கொடுத்தோ பூ மியின்றுயர் தீர்த் திடுமெந்நாளே, யகமகிழ்வுற் றிடுவேனென் றுரைத்தடியார் பலர்க்கும்விடை யருளிப்பின்னர் புகழ்மிகுமா னைக்காவிற் சிவனை யருந் தமிழதனுற் போற்றலானார். (எ0)

அகிலாண்ட நாயகிக்கு மரியவண்ணப் பாமாலை யறைந்து நெஞ்சிற், றிகினீங்கிக் களிக்கும்வரம் பெறவிரும்பி யரங்கேற்றிச் சிரகிரிப்பான், முகிலோங்கு குழற்சிவையோ டுறுசிவனுக் கந்தாதி முதலவோதிச், சிகிமாண்கொள் பொழில்வளஞ்சேர் தஞ்சைநக ரடைந்தனர்மெய்த் தெளிவின்மேலார். (எக)

அந்நகரின் சத்திரியன் வெங்கடரா மப்பெயர்கொ ளன்பன் வீட்டி னன்னர்வசித் தையாறு தியதலங்கள் போற்றியந்த நகரி னூடே, தன்னனைய காமாட்சித் தாய்க்குமான் கணபதிமால் சண் முகேசன், முன்னவில்சீர்க் கொங்கணசற் குருமுதலோர்க் கினிய துதி மொழிந்தான்றே. (எஉ)

அவண்விடுத்துத் திருவாரூ ரடைந்துசிவன் பதிகமுத லறைந்து போற்றிப், பவந்தவிர்க்குந் திருப்புகலூர்ச் சிவனுமைவே ளோடுகண பதிக்கும்பாடி, நவம்பொலிநா வுக்கரசர் பதிகமுரைத் தனரதன்றி நாவலூராற் குவந்தபதி கம்பரமன் றிருமேனி வெளுப்புமுத லுரைத் துற்றூரே. (எங)

அச்சமயத் தினிற்றிருவா மாத்தூர்ச்சங் கரனிவர்தம் மகத்தி னூடே, யிச்சையுடன் பசுவினங்கோ டுறத்தராலா தியசரிதை யெல்லா முஞ்சொற், றெச்சமயத் தினுமங்கு செல்லும்விருப் பதிகரிக்க வியற் றினன்பின், மெச்சணியார் மாயூரம் புள்ளிருக்கு வேளூர்நல் விய னூர்காழி. (எச)

ஆதியபஃ றலம்போற்றி யணிமிகுதில் லைப்பதியு டம்மைகாண, நீதியா ஸைம்தொழிற்கூத் தியற்றுநட ராசனெதிர் நின்றுபோற்றிக், கோதில்பொன்னம் பலஞான தேசிகன்றன் மடத்திலன்பர் குழும வைகிப், பேதியாப் பலவநுபூ திகள்வினவிக் கலந்தினிது பேசியப் பால். (எரு)

குமாரபுரி யடைதல்.

அங்குவிட்டுக் குமாரபுரிச் சண்முகமா முனிவன்மடத் தணுகி யன்னோன், பொங்குமது மலர்க்கமலப் பதம்வணங்கித் தங்கிமிகு புளகமெய்திக், கங்குல்பக லற்றவநு பூதிநிலை யடைந்துமுயர் கவியின் மாரி, மங்குலெனப் பொழிந்துசிங்க மெனமுழங்கிச் சரபமென வயங்கிவாழ்ந்தார். (எசு)

அம்முனிவன் றன்றிருவாக் குரைகொடுதில் லைத்திருவா யிர நாலச்சிட், டிம்முதுபா ருலகினிடை யினிதுவெளி யிடவிரும்பி யெழிலார்சென்னை, நம்முரிமைத் தொழும்பருறு நற்றலமென் றேகி யங்கு நணுகியந்நூல், செம்முறையா லச்சடுக்கிப் பிழைபார்த்துப் பதித்திடுமத் தினத்தின்மாதோ. (எள)

வேங்கடசுப் புப்புலவன் றனதிளைய சோதரனு விளங்குகேண் மைப், பாங்கமைந்த தங்கவேற் பாவலன்கண் டிவருபய பாதம் போற்றித், தீங்கறுமெய் யுபதேச மொழிவினவி யன்புமிகு சிட னுனு, ணுங்கவிர்மெய்ப் புலவர்விரும் பலினந்நூ லங்குமாங் கேற்ற நண்ணி. (எஅ)

விசுவநாதப்பெருமா னுலயத்திற் றினமுமன்பர் விரும்பிக்கேட் கப், பசுபாசங் கடந்தமுதற் பதிநிலைதோற் றிடவெடுத்துப் பகர்ந் தாரங்கு, கொசுநேர்சிற் றறிவினனோர் மனிதனோர்சந் தேகம்வகை கூறுகென்றான், சிசுவுறழன் னவனையென்னென் றனாருண கிரிப்புல வன் றிருப்புகழ்க்கண். (எகூ)

பெருமாளே யெனவுரைத்துள் ளானேயிந் நூலிடைநீ பெரு மானேயென், றொருவாறே யுரைத்துள்ளா யெயதன்பே தஞ்சொ லென்று னுருண்டைதானென், றருளோடோ தினரீதுய்த் துணர வைப்பா முத்தியென வறையலாகும், பொருளாலன் றெழுத்தின்வரி வடிவிலெனத் தெரிந்துவப்பார் புலவர்தாமே. (அ0)

அதுமுடித்துக் கந்தனு லயத்தினிற்சில் கவிகளரங் கேற்று நாளிற், பொதுவுணர்வில் லாவொர்வயி ணவன்முருக தாசமுனி புகல்பாக்கேட்க, முதுவிழைவுள் ளேணிடத்தின் பேதத்தா லங்கவர் தம் முன்னேசெல்லா, திதுகாலந் தடைபட்டே னென்றனன்சிற் சில ரதையாங் கிவர்பாற்சொற்றூர். (அக)

கேட்டுவியந் திவர்நெடுமால் புவிமுழுது மோரடியாக்கிளர முன்னு, ணீட்டுமௌ வினிலிந்தக் கந்தனு லயத்தைமட்டு நீக்கு முன்மை, காட்டுமொரு நூலெங்கே கற்றனையுள் ளநுபவத்தாற் கண்டாய்கொல்லோ, வீட்டுநெறிக் குரியதமிழ் மாறனெல்லா மவ னெனமெய் விளம்பிலானே. (அஉ)

என்றுசொலி யனுப்பினரன் னவனதுகேட் டின்றுவரை யிது தேராமற் றின்றுதுயின் றுழன்றுவீண் வாதமிட்டுத் திரிந்தேன் மெய் தெளிந்தேனென்னச், சென்றுதிருப்புகழ்முருக தாசரடி பணிந்துகந்தன் கினகரத்திற், றுன்றுபுல வோர்குழுவிற் றனுமிருந் தானந்தந் துய்த்தான்மன்னே. (அங)

அப்படிச்சின் னுளிருந்து தில்லையா யிரம்பதிப்பித் தாகிமீண்டு, செப்பமுறு குமாரபுரிச் சண்முகமா முனிவன்மடஞ் சேர்ந்துநல் லோர், தப்பறவா சித்துணரப் புத்தகமென் கும்பரவித் தழையச் செய்தார், மெய்ப்படிவச் சண்முகமா முனியுருவங் கரக்குமெண்ண மேவினனே. (அச)

அக்குறிப்பங் கிவர்க்குரைத்தா னறிந்திவர்தம் மனமிகவு மயர்ந்துதெய்வ, மெய்க்குறிப்பென் றொருவாறு தெளிந்தனர்பின் னவன்கதியின் மேவலுற்றான், கைக்குறிப்பா லடியவருக் குண்மை நிலை யளித்திடுமிக் கருணைவள்ளல், பொய்க்குறிப்பில் லார்பலரோ டிருந்துசமா தியின்கிரியை பொருந்தச்செய்து. (அரு)

திருவுருவங் கரந்தனனென் றொருபதிக மியற்றியன்பர் செறிந்துகேட்கப், பொருவிலவன் றிருமுனரங் கேற்றினர்பின் னக்குமர புரீயிற்றொண்டர், தருணமறிந் தம்மடாலயத்திலிவர் தமையிருக்கச் சாற்றிவேண்டி, யுருகினரியா னிவ்விடத்தி லிரேனந்த முனிவன்மிகு முரித்திஞேடு. (அசு)

மூயன்றுமட மொன்றியற்றி யதற்குரிய வெல்லாமு முறையிற் சேர்த்தா, னியன்றவென்கைச் செலவினுக்கோர் வருடமும்போதாதுலக விகழ்ச்சியாகும், பயன்றருமெய்த் தவம்புரியப் பம்பைநதிக் கரைமாதைப் பதியிற்சேர்ந்து, வியன்றரவாழ் குவதெனதுள் விருப்பெனச்சொற் றனேவர்களும் விரும்பிவாழ்த்த. (அஎ)

மதுரைப்பாக்கஞ் சேர்தல்.

நமசிவா யப்பெயர்கொண் முனிவனேயங் கிருந்துமுறை நடத்தவேவிச், சமரசா னந்தநிட்டை யுடனிருந்தார் வருமடியார் தம்முளன்பாய்க், கமலமா தருள்குலவு மதுரைப்பாக் கப்பதியிற் கவினுந்தூயன், விமலவே மனன்குலத்தன் றுரைசாமிப் பெயரினனுள் விருப்பினுலே. (அஅ)

எங்களூர்க் கெழுந்தருளிச் சிலநாளுற் றெமக்கருளீந் தெழிலா மாத்தூர், மங்களா கரமுறச்சென் றிருத்தியென வணங்கினனவ் வாறுட்கொண்டு, பங்கமில்சீர் பெறுமதுரைப் பாக்கநக ரடைந்தருட்சீர் பரவவைகிச், செங்கமலக் கண்முகினேர் நாரணற்குந் தக்கன்மகஞ் சிதைத்திட்டாற்கும். (அகூ)

செந்தமிழின் பதிகமிரண் டோதியரங் கேற்றினர்மெய்ச் சிவபிரான்றன், சொந்தமுறு கோயின்முன்னு ளிருந்தழிவுற் றிருந்தவிடந் தோன்றுதுற்ற, துந்தருமைத் துரைசாமிப் பெயரினன்சேயில்லாமை யுரைத்துவேண்ட, விந்தமுனி வரர்* தமிழ்ப்பா வொன்று கலை மகளருளா லியற்றிநல்கி. (கூ0)

---

* சாம்பசிவ ரெட்டியன்பிற் றந்ததுரை சாமிரெட்டி
யாம்பன்மலர் வாவியொன்று மாலயமொன் றுஞ்செய்தாற்
காம்பவிர் தோட்கன்னி யொன்றுங்காளையொன்றும் பெற்றிடுவ
னும்பகர்ந்த தல்லவிது நாமடந்தை சொன்னுளே.

இக்கவியி லுரைத்தபடி சிவன்கோயிற் பணிவிடைநீ யியற்றி வாவி, மிக்கசுக முறப்புரிந்தாற் பெண்ணுடனுண் சேயுனக்கு விளையு மென்று, தக்கதிரு வாக்கருளித் திருவெண்ணீ றளித்தடியர் தாழ்ந்து போற்ற, முக்கணன்முத் தாம்பிகைவாழ் திருவாமாத்தூரடைய முன்னலானர். (கூக)

திருவாமாத்தூருக்கு வருதல்.

அவ்வா றன்னவர்கருதுஞ் சமயமெழி லாமாத்து ரபிராமேசன், செவ்வானத் திருமேனி யுடன்சிலதொண் டர்களுள்ளத்திற் றிகழ்ந் தித்தூய, மெய்வாய்மைத் தவமுனிவர் வரவுநுவன் றிவர்க்கினிய விதங்கள்செய்ய, வெவ்வாற்றி னுந்தவரு திருக்கும்வணஞ் சொற்ற னன்பின் னிதுவுமன்றி. (கூஉ)

வருமுதனு ளிரவிலிவர் மனக்கனவி லபிராமன் வனசத்தாளிற் பொருவரும்வா ரணமுகன்பூ சனைபுரியுங் காட்சியதும் பொருந்தக் காட்டித், திருவருளின் குறிவிளக்கி யருளமறு நாள்சகடஞ் சேர்ந்து தொண்ட, ரருகுபணிந் தெழவிடையீந் தவிர்திருவா மாத்தூர்வந் தமைந்தார்மன்னோ. (கூங)

வளமலிசுப் பிரமணியத் தம்பிரா னியற்றியதோர் மடத்தில் வைகி, யுளமகிழ்வுற் றந்நகரத் தன்பரெலாம் வந்துபணிந் துரிமை கூறிக், கள்வறுமெய்த் தொண்டுசெயக் கவுமாரத் தலைவர்தமிழ்க் கவியின்வேந்தர், சளமறவேற் பூசைமுடித் தாண்டபிரான் றனது திருத் தளியிற்சென்று. (கூச)

பசுக்காப்புச் செய்துநெடும் பாருரு மவற்றையன்பு பற்றுப் பொல்லார், நசுக்காமை யாதிநிலை நாட்டியலை யுடுத்தபுவி நங்கையின் நாண், முசுக்காவ லன்பொருசெவ் வேனிருபன் றன்குடைக்கீழ் முழுதும்வாழ, விசுக்காரா தருண்மாதை யரசேயென் றொரு* வெண்பா விசைத்துப்போற்றி. (கூரு)

---

* பசுக்காப்புச் செய்துநெடும் பாருர்பவற்றை
நசுக்காமை யாதிநிலைநாட்டி—முசுக்கோமான்
போல்வாழொருவன் புகழ்விளக்க வேண்டுங்காண்
சேல்வாவி மாதை யரசே.

வாழுநா ளினிலபிரா மேசனிவர் மனவெளியில்வயங்கிக்கோயில், வீழுமா ராதனைநெய் வேத்தியமுப் பின்றிவைத்தல் விட்டுநன்கு, சூழுமுயர் கறிகுழம்போ டமைத்திடச்செ யவற்றுடனீ துய்க்கின் றுயே, தாழுறு விருப்பமுளே னெனவுரைத்திட் டான்விடிந்த சம யந்தன்னில். (கூகூ)

பலர்க்குமுரைத் தாலயத்தின் றருமபரி பாலனஞ்செய் பவருக் கோதி, நலத்துடனவ் வாறுதின நடத்தவியற் றினாதன்பின் ஞால முய்வா, னிலக்கமுற நூறுதமிழ்ப் பதிகமுன்மேற் றுதிவடிவா யியம் புகின்றே, னலக்கணறச் சதுரர்பெறுந் திருவருட்சீ ரீகுதியென் றறைந்தானன்றே. (கூஎ)

அதுகேட்டப் பயன்பெறற்காந் தவம்புரிதி பாடல்பின்ன ரறையலாமென், பொதுநீதி யுரைபுகன்றுன் றமிழ்க்கவியில் விருப்ப மில்லான் போலச்சாற்று, மிதுஞாயத் தாற்சாத நழுவாச்சற் குருத்தேவென் றினிதுதேர்ந்து, முதுஞானச் சடாக்கரமோர் கோடி செபிப் பேனெனவே மொழிந்துசெய்ய. (கூஅ)

தண்டபாணி யநுபூதி யியற்றல்.

துவக்கியோ ரிலக்கத்துக் கொருகவியென் னியமமுறச் சொல்லி வந்தார், பவத்தொடர்நீக் கிடுதண்ட பாணியநு பூதிப்பேர்ப் பனு வலந்நா, ளுவப்பறச்செந் தேள்கரத்திற் கொட்டலினு ுறின்முடி வுறநிறுத்தித், தவத்துறையா முருநாட்டத் தியானமொன்றே குறி யாகச் சார்ந்தார்மன்னோ. (கூகூ)

வேறு.

இன்னவாறுறு நாளவூர்க்கோயிற்
கினியதொண்டர்சேர்ந் தியற்சிவாகமங்கள்
சொன்னவாறுகும் பாபிடேகந்தான்
றுணிந்துசெய்திடத் துவக்கியேநடத்து
மன்னபோதொரு சிற்பன்விக்கிரக
மாடகங்கொடு விற்பவனங்கு
துன்னவேலவன் வள்ளிகுஞ்சரியாத்
துலங்குமூன்றுகொண் டனர்புராதனமாய். (க00)

உற்றமூர்த்திகண் மூன்றினின்முருகோ
    னுருவிருக்கமற் றிரண்டுருவிலேக்குச்
சொற்றவற்களித் திடநினைந்தனரித்
    தூயசெத்தனை கொள்ளினுமுன்னுட்
பெற்றவற்றினை யகற்றிடல்சாலப்
    பிழையென்றேதிய மதைமதியாமல்
விற்றதாலவை வரினலாற்றளியுண்
    மேவிடேனெனும் விரதமுற்றனரால். (கoக)

தலபுராணம் பாடுதல்.

அன்றுதொட்டருச் சகனையுஞ்சிகரி
    யதனையுங்கரங் குவித்தருந்தவஞ்செய்
தொன்றுமின்னவ ரிடம்பலர்கூடி
    யுற்றவித்தல புராணத்தைவடநூ
னின்றுதென்றமிழ்க் கவிகளாலிந்நா
    ணிகழ்த்துகென்றனர் வயிணவப்பனவன்
றன்றுயிற்கன விடையுமைதோன்றிச்
    சாற்றுமாறுசொற் றனனதன்பின்னர். (கoஉ)

வடமொழித்திறற் புலவனுயருகு
    வாய்ந்தவெங்கையூர்க் கணபதிப்பெயர்தோய்
திடமிகுத்தவே தியன்றமிழ்மொழியாச்
    செய்துளித்தனன் செறிகவித்தொகையா
யுடன்வகுத்தநூ பூதியுநதவத்தி
    னுறுதிமார்க்கமு முய்ந்துசாத்தியம்பெற்
றிடவலார்செயுஞ் செயல்களும்விளங்க
    விசைத்துமெய்த்தெளி வெனவொருபடலம். (கoரு)

சிவனுமாயனும் வேறுவேறென்னச்
    செப்புநூல்வழி சிந்தையின்மயக்குற்
றவமுறப்பெரு வாதமிட்டுழனு
    மவர்கள்பூவினி லமைந்தநன்மணமும்
பவமிலங்கியிற் சூடும்போலொன்றிப்
    பரவுமத்துவி தந்தெரிந்துயச்சொற்
றுவகையாலதன் பின்னடந்தவற்றை
    யொளிருமுத்தர காண்டமென்றுரைத்தார். (கoச)

அந்தமாதையி னருகுறுமுரத்தூ
ரதனில்வேமனன் குலத்தினில்வந்தோர்
முந்தருந்தமிழ்ச் சுவைதெரிசின்னு
முத்துசுப்பரா யப்பெயருடையோர்
சொந்தமாயிவர் கருத்தறிந்தியற்றுந்
தொண்டுகண்டருள் சுரந்தரிபெருமை
விண்டவேகபா தத்தந்தாதிசிவன்
வியன்செயேகபா தத்தந்தாதியன. (க0ரு)

பதிகச்சதகம் சதகப்பதிகம் பாடுதல்.

திகழுமோரிரு பனுவலையளித்துச்
சிறப்புப்பாயிரக் கவிகளுஞ்செப்பிப்
புகழும்புண்ணிய மும்பெறப்புரிந்தார்
போற்றுசெந்தமிழ்ப் பதிகநூறமைய
நிகரிலாப்பதி கச்சதகமென்று
நிகழ்கவிச்சத கங்கள்பத்திணைத்துப்
பகர்தருஞ்சத கப்பதிகமென்றும்
பாடினாரிரண் டாயிரம்பாடல். (க0சு)

சித்திரகவி நூல்களியற்றல்.

அழகனுமபி ராமநாயகன்மே
லவையல்லாதுசித் திரத்தினிலியமகங்
கழகர்போற்றிய திரிபுநற்சிலேடைக்
கவிகளூறுநூ றுரைத்தனர்கருணைக்
குழகனுமவன் மீதினிற்பலபாக்
கூறல்யாவையுங் குறித்திடினடங்கா
பழகுசாகரப் புனற்றுளித்தொகையைப்
பகர்தல்போலுமென் றுரைத்திடற்குமே. (க0எ)

பேரோலியலந்தாதி யோதல்.

சண்மதங்களு மதீதமுங்குறித்துச்
சாற்றுமொவ்வொரு கவிகளின்முறையே
யெண்மலிந்தறு பத்துநாற்கலைக
ளிசையமுப்பதா யிசைத்தபேரொலிய

னுண்மகிழ்ந்துரைத் தரியநந்தனப்பா
வோதுசற்குரு விஜயநூலியற்றிக்
கண்மலிந்தவெண் கமலபீடத்திற்
கவினும்வாணிதன் கருணையாலுலகில். (கoஅ)

புலவர் புராண மியற்றல்.

பாடுந்தன்மையு முபாசனைநலத்தாற்
பகர்ந்தவாறியற் றிடுபெருஞ்சித்திப்
பீடுந்தோய்தமிழ்ப் புலவர்பற்பலர்தம்
பெருமையோர்தரப் புராணமொன்றோதி
நாடும்பமா முனிமுதலெழுபா
னிரண்டுகாதையாய் நலமுறமுடித்து
நீடுசத்திய சூத்திரம்பின்னு
நிகழ்த்துவாசக மியற்றினரம்மா. (கoகூ)

வேறு.

அநுக்கிரக விவரங்கள்.

இதனிடையிற் றமதுடற்றூய் பேச்சுமுத்தப் பெயருடையா ளிவர்தம்பான்மை, விதமெளவிட் டிடலரிதாம் பவைமறிந் ததியுவகை மேவிமேலாம், பதவியடைந் தனளதற்காப் பத்துவெண்பா வோதி யருட் பம்பையாற்றிற், சதமுறவே சமாதியிலவ் வுடலமைத்தா ராத னையுந் தாஞ்செய்தாரே. (கக0)

என்றனக்குக் கருணையினு லிபமுகன்மந் திரமுரைசெய் தியன்ற பூசை, நன்றமையக் கொடுத்தரிய தமிழ்க்கலையி னுணர்ச்சியுற நவின்று நாயேன், குன்றனைய வினையறுத்துப் பிழைபொறுத்துப் பணிவிடை யுங் கொண்டுமாயப், புன்றளைதீ ரருள்புரியப் பருவமிதன் றென் றுரைத்தார் புகல்வதென்னே. (ககக)

இவர்புகலும் புலவர்புரா ணக்கதையைச் சோழவந்தா னிருந்த ஞானத், தவநிலைசேர் கந்தசாமிப்பெரியன் சென்னைவளர் தமிழின் செல்வ, நவமுறுவேங் கடசுப்பு நாவலனட் டாவதா னஞ்செய் மேன்மைச், சிவமுறுகல்யாணசுந்த ரப்பெயரோன் முதற்பலருஞ் செறிந்துகேட்டார். (ககஉ)

அருணையின்கோ புரத்தினிடை 'யருணகிரிப் புலவோனு வமைந்தநாள்கண், டுருகுமய லடைந்திடுமா காமியத்தா லிவ்வுலகி லுதித்துஞானத், திருமலியிம் முனிவர்மனை யானசுந்த ரப்பெயர்த் தாய் செழுங்கல்லாடை, யுருமலிமெய் வேடமுறக் கொடுத்தருளி ஞானநிலையொளிரச்செய்தார். (௧௧௩)

தெங்குமலி சோலைமிகத் திகழும்வண்டிப் பாளையத்திற் றிகழ் மல்லையன், செங்குணத்தா னிவர்மிசையுள் விருப்பமுளான் வினைத் தொடர்பாற் சிறிதுநாளிற், றங்கும்விழிப் பார்வையின்றித் தவித் திவர்பால் வந்தழுது சாற்றிப்போற்றப், பொங்குமது ரத்தமிழ்ப்*பா வொன்றுரைத்துத் திருநீறும் புனையநல்கி. (௧௧௪)

அனுப்பினரக் கவியையொரு மண்டலந்தான் பூசையில்வைத் தறைந்துபோற்றி, யினித்தபய னும்விழியின் பார்வையடைந் திட் டான்மெய் யிதுவுமன்றிச், செனித்திறவாக் கதிவழிகாட் டிடும்பர மென் றிவரையுணர் திறமைவாய்ந்த, தனிப்புகழ்வே லாயுதம்பா ளையக்கறுப்ப வேற்கவண்டன் றான்வந்தெய்தி. (௧௧௫)

என்றனக்காண் குழந்தையிலாக் குறைதவிரச் சிறிதுனருளீதல் வேண்டுங், குன்றனைய பெருந்தகையே குருமணியே யெனவிரந்து கூறக்கேட்டு, மன்றவர்கட் புதல்வாவிக் கறுப்பவேற் கவண்டனுக் கோர் மைந்தன்றோன்ற, வின்றருள்செய் யெனுங்†கவியோ தினரது பெற் றவன்றனதூர்க் கேகினனே. (௧௧௬)

ஏகியொரு வருடமுடி வாகவொராண் சேயுதித்த தினிய சேயின், றாகியாயிருந்தகுறை நீங்கிமிகு முவகைகொடு தன்னூர் வாழ்ந்தான், வாகியைந்த வீரையர சாமிருத யாலயன்றன் மனைவி நெஞ்சஞ், சோகியா வருந்தியொரு விவகாரஞ் செயமுறநின் றூய வாயால். (௧௧௭)

---

* மல்லையனுக்கு மலர்விழியின் பார்வைநல்கித்
தொல்லைவினைத் துன்பந் துடைத்தருள்வா—யல்லைநிகர்
கண்டத்தான் மைந்தா கதிர்வேற்கைக் காவலவா
வண்டத்தார் சேனையதிபா.

† வேலுக்கவண்டன் விருப்பப்படி யொருநற்
பாலன் பிறக்கும்படி யருள்வாய்—சீலமறை
யாகமங்கள்போற்று மயில்வேற் குருபரனே
யேகபிரான் பெற்ற மைந்தனே.

ஒருபதிகம் புகலுதியவ் வாறுபயன் பெறுமாயி லுனதுதெய்வத், திருமடத்தின் பணிக்கொர்பன்னீ ராயிரம்வெண் காசளிப்பேன்றிண்ணமென்றுள், வருமுறைகண் டிரங்கியுரைத் தருளினரோர் மண்டலந்தான் வைத்துப்போற்றிப், பெருமகிழ்வுற் றிடப்பலித்த துரைத்தமொழி மறந்தனளப் பிழையினுலே. (ககஅ)

தனதுபகை யொழிந்துசெய மடைந்துமிவர் பாற்புகன்ற சாதமாறிக், கனவிறுமாப் படைந்தவள்பின் னுடனிழந்து வருந்தினளிக் கதையிந்நாளின், மனமறியக் கண்டநிச மாதலாற் சத்தியத்தை மறத்தலென்று, முனலருந்தீ வினைத்தலையென் றறிந்துநடப் பது பெரியோர்க் குரியசீரே. (ககக)

ஆலயத்தின் களவினையோர் விலைமகள்யா னறிவேனென் றறைந்துபின்னுள், சாலவவை யிடைவினவுங் காலறியே னென மறைத்துச் சாற்றுமாற்றுற், காலையதி லிவர்சினங்கொண் *டொருகவியோ தினரவளுட் கவன்றுகூவிச், சாலவழு தறிவழிந்து திரிந் திறந்தாள் பலரறிந்த சாதமம்மா. (கஉ0)

சமயாதீ தக்கவுமா ரத்தினருட் குருவாமித் தவர்கைக்கோடற், கமைவாகும் பதாகைமரங் கொத்தியெனும் பறவையுற வளித்தான் வேலன், றமராகுந் தமிழ்ப்புலவோர் வாக்குடனே பலித்திடுசீர் தழைப்பவோதிக், கமையார்பூ மகடுயர்கண் டழுங்குமிரக் கமும் பொருந்திக் கவின்றூர்மன்னே. (கஉக)

திருமடாலயப் பணி துவக்கல்.

அதன்பினணி மாதைநக ரிடையிவர்பே ராலொர்மட மமைக்க வேண்டி, யிதம்பெறப்பல் லோர்விரும்பி முயன்றூர்நெல் லையிலிருந்தங் கியன்றவாய்மைப், பதம்பெறுசண் முகப்பெயர்வே ளாளனர சுரிமையினுற் பதிவாந்தானஞ், சுதந்தரமாக் கினன்பலமெய் யன்பர்பொரு ளுதவியுஞ்செய் தொழிலுங்கொண்டு. (கஉஉ)

---

* கூத்தாடிச்சிக்கிழவி கோயிற் றிருட்டதனைப்
பார்த்தாண் மறைத்துப் பகர்ந்ததா—லாத்தாடீ
யப்பாடீ யென்னவலறும் பெருந்துயர
மிப்பாரிற் றுய்ப்பா ளினி.

திருமடா லயமொருவா றமைந்ததையா யிரவருடந் திகழு மேடப், பெருமாதத் தினின்முதனாள் காலைகதிர் வேல்கரத்திற் பிறங்கத்தாங்கித், தெருவூடற் புதக்காட்சி யளித்துரிய மடத்தி னிடைச் சேர்ந்துசெஞ்சொற், பொருள்சேரை யாயிரப்பேர்ப் பிரபந்த முரைத்தருளப் புந்திகொண்டார். (கஉங)

தவநிட்டையாரம்பம்.

ஆறெழுத்தின் மந்திரமே யறுசமயப் பிரிவுகளுமாகுமப்பான், மீறெழுத்தாம் பிரணவமே சமயாதீ தப்பகுப்பாம் விளம்புமேழாக், கூறெழுத்தை யக்கரத்துக் கிலக்கமுறக் கொடுசெபிப்போர் கொண்ட வேட்கை, யூறெழுத்தற் றடைவரெனும் வேதவுரை சரதமெனி னுறுதிப்பண்பு. (கஉச)

கொண்டுதமி யேனெழுத்துக் கொருகோடி வீதமெழு கோடி யாக, விண்டுசெபித் தருட்சருவ பிரசாதந் தருங்குரவன் வியனார் கோலங், கண்டுதிரு வருளடைந்து புவியிலுளோர் கொன்றருந்தாக் கடமைநாட்டி, மண்டுபிறப் பற்றகதி புகுவேனென் றொருசரதம் வகுத்துக்கூறி. (கஉரு)

ஐயாயிரப் பிரபந்தந் தொடங்கல்.

துவக்கியொரு மூன்றுகோ டியுங்கடந்து மேனடக்குஞ் சுப காலத்தி, னவப்பொலிவார் தருமையா யிரப்பனுவ னவின்றுவந் தார் நணுகுந்தொண்டர், பவத்தொடர்நீக் கிடக்கருணை யுருவெடுத்த வெமதுகுரு பரனிப்பாரின், கவற்றுதுய ரறமனித வடிவொடுசெய் யாடலிவைகழறினேனே. (கஉசு)

ஐக்கமுற்ற கால நிர்ணயம்.

கலியுகமை யாயிரமாம் விளம்பியிலா னித்திங்கள் கழறுதேதி, யொலிதிகழு மிருபான்மூன் றினிற்சேய்நா ளேய்ந்ததிரு வோண மீனின், மலிபுகழ்த்தண் டேந்துகரத் திருப்புகழ்மா தவர்திருவா மாத்தூர்வாழ்வாய், நலிவறுகௌ மாரமடா லயத்திலருட் கதியி னிடை நண்ணினாரே. (கஉஎ)

தண்டபா ணிக்குரவன் றிருவுருவ மறைக்குமன்று தமியே னெஞ்சங், கொண்டகன விடைகாட்சி கொடுத்தருளி யாறெழுத் துங் கூறவோதித், தெண்டனிடச் செய்தருளின் றிருநீறுந் தங்கரத் தாற் றிருந்தப்பூசித், தொண்டருளிப் புரந்தவித மென்னதுள நன் கறிந்த சூட்சமாமே. (கஉஅ)

முத்தி நிரூபணம்.

தாமெடுத்த மனிதவுரு வினைவெளியி லொளியிலன்றித் தவத்திஞற்ற, னேமமுற்றுப் பூசைபுரி விக்கிரகத் திடைகலத்த னிசவீடென்றும், பாமரர்கண் டிகழ்ந்திடப்பூ மியிலுடல்வீழ்த் திடலிழிவாம் பந்தமென்றுஞ், சேமமுறப் பகர்ந்தவிதி யுலகினுக்காம் பொதுவிதியே சிறப்பன்றம்மா. (கஉகூ)

இருவினையின் பயனுகரற் கெனப்புவியிற் பிறந்துடலி னிச்சாபோகப், பெருகிருளிற் சுழன்றிறக்கு முயிர்களுக்கே யதுவிதியாம் பேதமில்லாத், தெருள்வடிவாய்ச் சுத்தவித்தைப் புவனமதிற் றுலங்கியன்பர் சிறந்தஞான, மருவிமுத்தி யடையும்வழி காட்டவருஞ் சிலர்க்கதனை வழுத்தொண்ணுதே. (கூo)

இந்திரன்மா லயன்சிவனு நியர்பதவி யெய்திடினு மிரக்கமின்றி, மந்திரவேள் வியினுமொரு கொலைபுரித லானருந்தன் மடமையென்னப், புந்திதெளிந் தனைவருக்கு மெடுத்தியம்பு மெங்குரவன் புவியினூடு, வந்தினியோர் பிறவியுறக் காரணமின் றென்பதுமெய் வழக்கேயாமல். (கூக)

ஆசையற்ருற் பிறவியறு மதுதழைந்தாற் பிறப்பனந்த மமையுமென்ன, வோசையுறத் தமிழ்வேத முரைத்ததெண்ணி யிவருளத்தினுரைக்கவொண்ணுப், பூசைவிருப் பட்டமா சித்திவிருப் பாதியனபொலிந்தவாற்ருன், மாசைவிளைத திடுபிறவி யெப்படிநீங்கிடுமென்பீர் வழுத்தல்கேண்மோ. (கூஉ)

தனக்கெனவோர் சுகம்பெறநா டிடிலதுபின் பிறப்பினுக்குத் தகும்வித்தாகுங், கனக்குமுல கினிற்பசுவா தியவதைத்து னுகர்கொடுமை கழியச்செய்து, சினக்குமனத் தொடுதெய்வ மிலையென்போர் யானேயத் தெய்வமென்போர் தினத்தினிலுண் டுடுத்துலவித் திரிவதுவே முத்தியெனச் செப்புந்தீயர். (கூங)

முதற்கொடியோர் தம்மையருட் சித்தியாற் செயித்துலக முழுதுந்தெய்வ, மதப்பிணக்கா லுழன்றலையா துரியசம ரசஞானம் வயங்கக்காட்டி, விதப்படுமப் புராணவழிச் சமயமெலாம் வெறும்பொயென வெறுத்துத்தள்ளா, நிதற்குரிய சோபானக் கிரமமென வநுபவத்தி லிசையச்செய்தல். (கூச)

விரும்பியது தனக்கெனக்கொள் விருப்பாயா காமியத்தின் மேவிப்பூவி, லிரும்பிறவிக் குரியபெருஞ் சஞ்சிதமாய்ப் பிராரத்தத் திசையாதியாரும், பெரும்பயனெய் துறவெடுத்துப் பேசியதே யாகும்போதகன் மாணுக்க, ரரும்புலமை யுறவெழுதிப் படித்துக் காட் டிடுமுறைபோ லாகுமன்றே. (கநடு)

கிணற்றினில்வீழ்ந் தவனொருவற் பிடித்தெடுக்க மற்றொருவன் கீழிறங்கிற், றணப்பருமெய் யன்பதனு லிறங்கினு னென்பதன்றித் தவறிவீழ்ந்த, கணக்கெனக்கொள் வதுமுறையோ வதுபோலிங் கிவ ருயிர்கட் காக்கவேண்டு மிணக்கமுறுஞ் செயல்விருப்ப மொழிபிற விக் குரித்தாமென் றியம்பொண்ணுதே. (கநகூ)

வள்ளுவனூர் தமதுடல்பூ மிசைகயிற்று லிழுத்தெறிய வந்து தீண்டும், புள்ளுடனூர் வனமிருகா தியவனைத்தும் பரகதியிற் புகுந்த வென்ன, விள்ளுமொழி யுளதாலன் னவருடல்கீழ் வீழாமல் வெளி யிற்கூட்டிக் கொள்ளுவலி யிலரோகீழ் வீழ்த்ததனுற் பிறப்பவற் குக் கூறலாமோ. (கநஎ)

குருவடிவ வழிபாட்டிற் றெய்வவழி பாடமையக்கொளுங் கௌமாரப், பெருநெறிநன் கடியவருக் குலகபரம் பரைமுறையிற் பிறங்குமாறே, யருள்வலிசே ரெமதுகுரு பான்றமது திருவுருவிங் கமையவைத்துப், பொருவில்பர கதிபடைந்த தெனவுரைப்ப தநுப வத்தின் பொருத்தமாமே. (கநஅ)

ஆதலாற் சரியைகிரி யாயோக ஞானமென வறையுநான்கு, பேதமா மவற்றினிற்பின் னிரண்டுடையோ ரிருக்கமுன்னர் பிறங் கிரண்டு, நீதமார் பவர்க்குரிய வழிபாடு பரம்பரையி னிலவியாசான், பாதமே யாவுமெனுங் கவுமார முறையுலகிற் பரவியோங்க. (கநகூ)

தமதுதிரு வுருவுலகிற் றங்கவமைத் தருள்வெளியிற் சலன மில்லா, விமலவத்து விதவகண்ட மயமாகுந் தனிவீட்டில் விரவியுப் புஞ், சமமுறுமப் புங்கலந்த தனிக்கலப்பே யெனவமைந்தார் சாற்று மென்போன், முமலமயக் கிடைசுழலு மவரதன்சீ ரின்னதென மொழியொண்ணுதே. (கசo)

வேறு.

சமாதி யாராதனை.

தொண்டர்பற்பலர் கூடிநல்லாகமஞ் சொன்னவாறபிடேக, மெண்டகப்புரிந் தரியகல்லாடைநீ றெழில்கொளக்கணிந்தன்பால், வண்டமிழ்க்கவி மாலையுமதுமலர் மாலையும்புனைந்தேத்திக், கொண்ட தூபதீ பத்தொடுகருப்புரக் கொழுஞ்சுடரெடுத்தன்பால். (௧௪௧)

வணங்கியங்கவ ருரைத்தவாறருட்கவு மாரமாமடத்தின்பா, லிணங்குமுத்தர பாகமோர்குகையமைத் தெழின்மிகுதிருமேனி, மணஞ்சிறந்தவெண் ணீற்றினுன்மறைத்தபின் வண்சிலைகொடுமூடிக், கணஞ்சிறந்தமெய் யன்பர்கண்டிறைஞ்சமேற் கவினிலிங்கமும் வைத்து. (௧௪௨)

பூசைசெய்தனர் வந்துவந்தேத்துநர் புகன்றிடற் கடங்காவா, மாசையாவுமங் கடைவதுகுறித்துவந் தரும்பணிபலர்செய்தார், வேசைபோலுழன் மனமுடைச்சிறியவர் வீண்மொழிசொலுங்கீ ழோர், காசையேயுயி ரெனக்கொள்வோர்க்கதனருள் கண்டிடலரி தாமே. (௧௪௩)

அன்னவாறுசில் லாண்டுகள்கழிவுழி யருண்மிகுபுலவோர்சேர், துன்னவோதிய புராணமச்சேறியித் தொனிதமிழ்நாடெங்கும், பன்னவேபடர்ந் ததுசிலதொண்டராற் பதிமடாலயத்தொண்டு, மன்னலாயது நவவருடங்கள்போய் வந்ததுதசவாண்டே. (௧௪௪)

ஆலயப்பணி துவக்கல்.

எங்கடேசிகன் கொண்டுளசமாதியி லினியவாலயஞ்செய்து, மங்கலற்றவா கமவிதிவழியருள் வயங்குநித்தியத்தோடு, துங்கமேவுநை மித்திகபூசனை தொடர்ந்துசெய்திடநாடி, யங்கமைந்தவோர் சிற்பனுலளவுகண் டகழெடுத்ததன்பின்னர். (௧௪௫)

தொண்டர்கைகொடு பூசைசெய்தேத்துபு தொட்டளித்திடுகற் கொண், டெண்டருந்திரு வகழ்நிறைத்தானபி னிசைந்தமேடையின் வேலை, கண்டமட்டினிற் சிலபகல்கழிந்தன கலசனோர்கலையாகி, மண்டலத்தில்வந் துளவிராமானந்த மாதவனதுகாலம். (௧௪௬)

இராமானந்த சுவாமிகள் வருகை.

சிரவணப்பதி யதன்குடதிசையினிற் றிருமடாலயஞ்செய்து, சரவணோற்பவ னெனக்குருபரனுருத் தாபனம்புரிந்தின்பம், விரவு மாலயம் வகுத்தருந்துறவுநீர் விளக்குகாவியந்தானே, பரவுநீள்சிகை தண்டுமுத்திரைகொள்கைப் பரமதேசிகனாகி. (கசஎ)

பற்பன்மெய்யடி யவர்க்கருள்வாய்மொழி பகர்ந்துபதேசித்துச், சொற்பமாம்புவி வாழ்க்கையின்மயங்கிடாச் சுத்தமெய்யநுபூதிப், பொற்பமைந்திடக் கடைக்கணித்தருளிநற் புகழ்கொள்சுக்கிரனுளிற், கற்பதாங்கலைத் தெளிவினுற்சபையிடை கழறுபல்பிரசங்கம். (கசஅ)

சுந்தரப்பெயர் முனிவனாதியரெனத் துலங்குபல்கவுமாரர், வந்தவர்க் கறி வுதித்திடப்பகர்ந்திடும் வழக்கமுற்றிடச்செய்தே, செந்தமிழ்த் துதி சண்முகமாலைமுற் செப்பியுற்றனன்மாதைச், சந்தவான்சர பக்குருபரனருட் சந்நிதியடைந்தேத்தி. (கசகூ)

ஆலயப்பணி விரைவினின்முடிவதற் கானவாறனைத்துஞ்சேர்த், தேலவேதன தன்பரிலொருவனா யிலங்குமாதவனாமெய்க், கோலமார் தரு பழனியப்பன்றனாற் குலவிடமுடிப்பித்துச், சீலமாமனத்தி னிற்குருபரன்சொனுந் திருமொழியதுகொண்டே. (கடுo)

ஆலய கும்பாபிடேகம்.

* பொதுவெனச்சிறப் பெனப்பொதுச்சிறப்பெனப் பொருந்து முச்சகளத்தா, டதுலமாம்பொதுச் சிறப்பெனுந்தண்டபா ணிய னணியுருத்தாபித், தெதுபயன்களும் பணிபவர்பெறும்புக ழிசை கும்பாபிடேகந்தான், கனமுறச்சிவா கமவிதிப்படிமிகு கவினுறப் புரிந்தப்பால். (கடுக)

என்றுமத்திருக் கோயிலிற்பூசனை யெஞ்சுறுவளந்தோயத், துன்றுபூநிதி யாதியநிபந்தங்கள் சுகமுறநியமித்துக், கன்றுபோலு மெற் குரியநன்னீதிகள் கழறியெண்ணறுபல்லோர், நன்றுவப்புற வன்னமுந்துகிலுமீந் தடியவர்நனியேத்த. (கடுஉ)

---

* பொது-சுப்பிரமணியமூர்த்தம். சிறப்பு-சுயக்குருமூர்த்தம்.
பொதுச்சிறப்பு - தண்டபாணிமூர்த்தம்.

உ

குருவே துணை.



சிரவணபுரம்

கௌமார மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ இராமானந்த சுவாமிகள்.

கொங்குநாட்டினிற் சிரவணபுரமதிற் குலவுகௌமாரப்பேர், தங்குதன்றிரு மடாலயத்தெய்திமெய்த் தவநிலைதனிலேய்ந்தான், பொங்குமாதையிற் றண்டபாணிப்பெயர்ப் புனிதசற்குருநாத, னெங்குளாரும்வந் தடிதொழத்தெய்வமா யிலங்கினனருளாலே. (கடுங)

திகழ்தருங்கலி யுகத்தையாயிரத்தின்மேற் செப்பிடுபதினொன் றும், புகழ்புனைந்தசா தாரணவாண்டினிற் பொலிந்தசித்திரைபத்தி, லிகழ்வில்சுக்கிர வாரமத்தந்தனி லெழிற்றிருவாமாத்தூர், நிகழ் பெருந்தவத் தண்டபாணியன்கட னீர்முழுக்குறுநாளே. (கடுச)

வளங்கொண்மாதையைக் கயிலையாக்கொளினதன் வாயுதிக்கி னிற்கந்தன், விளங்குகந்தமா தனமெனக்கோயில்கொள் விமலசற் குருநாதன், களங்கமற்றமெய் யருள்விளையாடலிக் காசினியிடை தொண்ட, ருளந்தனிற்சிறந் தொளிர்ந்துசெய்திடுந்தின மூலகெலா முயும்மா. (கடுரு)

பாடசாலைமா ணவரெழுதிடின்மிகப் படித்திடிற்புகழ்ந்தன்னோர், கோடலாம்பரி சிவதுண்டலெனக் குவலயத்தினித்தோன்றும், பீடமைந்திடுமு பாசகருள்வலி பெற்றபின்செயல்வேண்டு, மாடல் காணவே புகன்றுளாரவைபுரிந் ததன்பின்விட்டுறன்மாண்பே. ()

பிந்தச்சிற்சினுள் கழிந்தருட்பழனியிற் பேசுமாயிரப்பாடற், சொந்தநூலினை யுடுமலைப்பேட்டையிற் றெண்டரோரிருவோர்தாம், பந்தவச்சினிற் பதித்தெழிற்றமிழலங் காரமும்பதித்திந்தச், சந்தமா நிலமிசைபரவிடப்புரி தவத்தின்மாண்பெளிதன்றே. (கடுஎ)

திருவரங்கத் திருவாயிரப் பிரசுரம்.

திருவரங்கத்தா யிரமெனும்பெயர்கொளுந் தெய்விகத்தமிழ் நூலை, யருமைகண்டுபல் லோர்வெளியிடும்வண மநந்தமாமுயன் றேய்ந்தார், பொருள்வளங்குண வொழுக்கநற்கல்வியும் பொருந்தி வேமனன்சாதிக், கொருபெருந்தலை யெனவிராதாபுரத் துற்றிடு மொருதூயன். (கடுஅ)

இலக்குமிப்பெயர் காரணப்பெயருட னிசைந்திடப்பெயர் வாய்ந்தோன், றுலக்குமானிரை யுயமலையெடுத்தவன் றுணையடி யருச்சிப்போன், கலக்குமன்பினு லச்சினிற்பதித்தருட் கடலமு தெனக்கண்டோர், மலக்குறும்பறப் புவியினிற்பரவுற வழங்கினன் மகிழ்ந்தம்மா. (கடுகூ)

வே று.

சத்திய சூத்திரப் பிரசுரம்.

அண்டர் போற்றுமெங் தேசிக னுத்தம
ரறிந்த டைந்துவப் பாகத் தமிழினால்
விண்ட சத்திய சூத்திரந் தன்னுடன்
விளங்கு சத்திய வாசக மாமெனு
மெண்ட குந்திரு நூலிரண் டும்புக
ழிலங்கு மாவுடை யார்பட்டின் றுயெனக்
கண்ட வேங்கட சுப்பனல் லோர்மனங்
களிக்க வச்சிற் கனிவுட னேற்றியே. (கசூ௦)

சிரவணப்பதி யிற்கவு மாரர்தந்
திலக மாமிராமானந்த தேசிகன்
கரவின் ஞானத் தவநிலை யேறச்செய்
கனக மாசபை யின்பிர திட்டைநாள்
பரவ வெங்கும் விளக்கின னம்முனி
பவள வாய்கொடு பாடலொவ் வொன்றுமுன்
விரவி லக்குமி நாரணப் பேர்கொளு
மேல வற்கு மிவற்குங் கருணையால் (கசூக)

விண்டு தன்னரு ளின்பிர சாதமும்
விளங்க நல்கி மிகுமுப தேசமாங்
கண்டு மெய்தக் கொடுத்தனன் பத்தர்தங்
கணத்தின் மேவுங் கருத்தும் விளைத்தனன்
வண்டு லாவு மதுரைப்பாக் கப்பதி
வாழ்ந்த நற்றுரை சாமியன் பன்மனை
தொண்டு கொள்பவு ணம்பிகை யெங்குரு
சொன்ன பாடற் சுபவாரத் தன்மையால். (கசூ௨)

உற்சவ தண்டபாணிப் பிரதிட்டை.

மதுரை யூரின் வழுதிசெய் வேள்வியின்
மங்கை யாகித் தடாதகை தோன்றல்போற்
புதுமை யாயதொர் புத்திரி யெய்திநற்
புனித மாம்வழி யெஞ்சலில் பேறடைந்

ததுமு தற்குரு பத்திமி குந்திவ
 ராலயத்தி னரும்பணி பூசனை
முதுவிருப்புடன் செய்து திருவுலா
 மூர்த்தி யொன்றும் வகுத்துச் சிவாகமம். (கசுரு)

சொன்ன வாறுகும் பாபிடே கந்தனைச்
 சுபமு றப்புரிந் தென்றுந் தொலைவிலா
நன்ன ரின்பப் பயன்களெல் லாங்கொள
 நல்கி யெங்குரு நாதன் விளங்கலான்
மன்னர் வாழ்வும் வெறுத்தவன் றன்றிரு
 வடிவ நாடி மதுமலர் நித்தமுந்
துன்ன வர்ச்சனை செய்து துதித்திடுந்
 தொண்டு கொண்டவர்க் கியாதரி தாவதே. (கசுச)

இராமானந்த சுவாமிகள் கனகசபை ஆராதனை.

கண்ட பாவனை நீங்கி யகண்டமாக்
 கவினு மெய்யநு பூதிப் பெருக்கமார்
தொண்டர் சேகர னுமிரா மானந்தத்
 தூயன் றன்குரு நாதன் றிருவுரு
வெண்ட கைப்பொன்னி னுற்சமைந் தின்னருள்
 விளங்கு சீர்க்கன கச்சபை யூடுவைத்
தண்டர் நாணு மவன்றிருப் பாதுகை
 யணிகைத் தண்டும்வைத் தர்ச்சனை பூசனை (கசுரு)

தைப்பூச ஆராதனை யியற்றல்.

தோத்தி ரம்புரிந் துந்திரு மாதையூர்
 துலங்கு கோயிலிற் றேயுந்தை மாதத்திற்
காத்தி ரந்திகழ் காவடி பூசநாள்
 கவின வீதியிற் காட்சித் திருவுலா
சாத்தி ரந்தவ ருவபி டேகமுஞ்
 சாத்து மாலைத் தணியலங் காரமும்
பாத்தி ரங்குறி யாவன்ன தானமும்
 பரிந்து செய்திடப் பத்தருக்கோ தினான். (கசுசு)

அன்பினர் வழிபாடு.

அனந்த சென்மத் தினிற்செய் தவத்தினு
 லந்த மாதை யினிற்பிறக் கப்பெறுங்
கனந்த ரும்புகழ் மேவுசெங் குந்தருங்
 கவினு மற்றுங் கழறுபல் லோர்களு
மனந்த ருங்களிப் பன்பும் பெருகிட
 வணங்கி யாவும் வகித்து நடத்தியே
தினந்தி னம்பல பேறுங் குருபரன்
 றிருவு ளத்தயை யாற்பெற லுண்மையே. (கசுஎ)

திருவி ளங்கிடு மாதைப் பதியினிற்
 தேவ யானைவள் ளித்திரு மாதெனு
முருவி ளங்கிரு விக்கிர கங்கண்மீண்
 டுற்றி டத்தமிழ்ப் பாடலெந் தேசிகன்
றெருவி ளங்கு குகன்றன் பவனியிற்
 செப்பு மாறொரு முப்பதிற் றுண்டின்பின்
கருவி ளங்கிரண் டும்புதி தாய்செய்தக்
 கந்தன் பாலுறக் காட்சியமைந்ததே. (கசுஅ)

வேறு

சிறப்புத் திருவுருவப் பிரதிட்டை.

முத்தமிழ்வண் ணச்சரபன் றண்டபாணி
 முதன்மைபெறு திருப்புகழோன் முருகதாசன்
சத்தமுகிற் குலமழைபெய் துலகைக்காக்குந்
 தன்மைபோற் கவிமழைபெய் தவர்பிரான்றன்
பத்தர்வணங் கிடச்சுயமாஞ் சிறப்புக்கோலம்
 பற்றிநின்று திருவிளையாட் டியற்றுமாறு
சித்தம்விரும் பலினெனதுள் ளறிவிற்றூண்டத்
 திகழுமிரா மானந்தன் றிருமுன்னேதி. (கசுகூ)

அவன்றனது மதிதரப்பெற் றனனவ்வேளை
 யருணையிற்செங் குந்தர்மர பதனிற்றோன்றிச்
சிவன்றனைய னுங்குகனன் பமைந்துகல்விச்
 சீருமுறு மிராசாம்பா ளென்னும்பாவை

கவன்றமன மிலாதுவகை மிருந்துள்ளன்பாற்
கைப்பொருள்கொண் டரியசிற்பக் கணக்குங்கூட்டி
நவம்படவிக் கிரகவடி வாகச்செய்து
நன்குகும்பா பிடேகமது நடத்தவெண்ணி. (களo)

அந்தவிராமானந்தன் றிருவுள்ளப்பாங்
கறிந்திருபத் தைந்தாவ தாண்டின்பூசைச்
சொந்தமுறு தினத்திலன்பர் பலருநன்கு
சூழ்ந்துதொழப் பலவியங்க டொனிப்பமேலாஞ்
சந்தநயப் புலவர்கவி மாலைசூட்டத்
தன்னிணைதீர் கும்பாபிடேகஞ்செய்வித்
தெந்தவுகத் தினுமழியாப் புகழுஞ் செல்வத்
தின்பயனுந் தவப்பயனு மிசைந்தாண்மாதோ. (களக)

அதிகாரி யிலக்கணம்.

இன்றுவரை செய்தவினை யாடற்காதை
யிவ்வாறு சுருக்கியுரைத் திட்டேனிப்பாற்
றுன்றுபுவி மிசையியற்றுங் காதைபின்னுள்
சொற்றிடுதற் கெவரேனுந் தோற்றுவார்மெய்
கொன்றுபுலை யாடலிஞ்சை விளைத்தலில்லாக்
குணங்கொடுதே வொன்றெனுமெய்க் குறிப்புக்கண்டு
கன்றுபசு விணைவிழைந்தாங் குருவநாட்டங்
கைக்கொள்பெரி யோரிதனைக் களித்தேற்பாரே. (களஉ)

தன தநுபவ நிச்சயம்.

இந்தவருட் குருபரன்றன் சமாதிக்கோயி
லிடைசரியை யொடுகிரியை யென்றுஞ்செய்து
பைந்தமிழாற் றுதித்தரிய யோகநாட்டம்
பதிந்துபர ஞானவழி படர்ந்துவீட்டிற்
சந்ததநீங் காதுகலந் திடலாமென்னுஞ்
சீரதம்பிரா மானந்தன் சாற்றத்தேர்ந்தே
சொந்தமுறப் பற்றிமுயன் றுள்ளேன்மாயை
சுழற்றியலைத் திடுங்கொடுமை சொலவொண்ணாதே. (களங)

எப்படியா யினுங்குரவன் றன்னையன்றி
யியம்புபல தேவருளா ரென்றுநம்புந்
தப்படியேற் கினிவிளையா துயிர்கொன்றுண்ணுத்
தனிவிரதத் தினிற்சிறந்த நோன்புண்டென்றுஞ்
செப்பவிசை யாதென்மன முருவநாட்டஞ்
சிறந்தருவத் தநுபூதி சேரலன்றி
யப்பாநிட் களமேயா னதுவேயென்னு
மகங்காரக் குணமுமெனக் கமையாதன்றே. (களச)

சித்திபுரிந் துலகினுக்கா நன்மையாவுஞ்
செய்துபிற வாதமுத்தி சேர்தல்விட்டு
முத்தியொன்றே சிறந்ததுபல் சித்திவீணென்
மொழியுமெனக் கிணங்காது முந்நீர்ப்பாரிற்
புத்தியுள்ளீ ரென்னதுபுன் மொழியாலீங்கு
புகன்றதண்ட பாணிவிச யத்தையுண்மைப்
பத்திநிலை நின்றுமொழிப் பிழைநோக்காது
பகர்ந்தபொருட் பயன்கருதிப் படித்துய்வீரே. (களரு)

வேறு.

நூற் பயன்.

தண்ட பாணி விசயத் தனிப்பெயர்
கொண்ட விர்ந்தவிக் கோதறு நூலினைக்
கண்ட றிந்து களிப்புட ளேதினோர்
மண்ட லத்தின் மலர்கொடு பூசித்தோர். (களசு)

கேட்டு வந்து கிளர வெழுதினோ
ரேட்டி னைக்கையி லேந்தித் திரிந்தவர்
வேட்ட பேறனைத் துங்கொண்டு மெய்ப்பா
வீட்டி னும்புகு வாரிது மெய்ம்மையே. (களஎ)

உத்தரபாக முற்றிற்று.

தண்டபாணிவிஜயம் முற்றிற்று.

வாழி விருத்தம்.

திருவளருந் திருமாதை நகரம் வாழி
திருப்புகழ்மா தவன்முருக தாசன் செஞ்சொல்
பெருகுவண்ணச் சரபதண்ட பாணிவாழி
பிழைதவிர்செந் தமிழ்வாழி திருநீ றக்கம்
பொருவில்கல்லா டையும்வாழி தண்டு கையிற்
புணைந்திடுமுத் திரைவாழி புகழ்க்கெள மாரர்க்
கொருதுணையா மிராமானந் தனுமெய் மாறா
வுத்தமரும் வாழியற மோங்க மாதோ.

குருபாதமே கதி.

———

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
கச	க0	சேன்	சென்
ருசு	ங	மறைக்	மறைத்
சுரு	கரு	ரவ்	ரிவ்
அஉ	ச	மிர	மிற
அங	கசு	லுற்ற	றுற்ற
அச	கஅ	லெழி	னெழி
அகூ	உசு	ணந்து	ணந்நூ
அஎ	கச	முன்மை	முண்மை
,,	உ0	கின	சின
கூக	உங	யுநத	யுந்த
கூஎ	கஎ	மல்	மால்
க0உ	உச	கப்ம	கப்ப
க0ச	கஉ	தேவ	றேவ
,,	கஎ	தாய்செ	தாய்ச்செ

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS.